28°/26°c

# உதயன்

■ பதிப்பு: ★★ ■ விலை: ரூபா 20
■ சுடர் 28 ■ கதிர் 128
■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 21, புதன் 03.04.2013
UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

# தமிழ்நாட்டு தமிழர்களிடம் உண்மையான பாசமில்லை

## கண்டுபிடிப்பு வெளியிட்டார் அமைச்சர் விமல் வீரவன்ஸ

## ஏஸி வைத்து உண்ணாவிரதம் இருந்தோர் எனவும் கிண்டல்



அமைச்சர் விமல் வீரவன்ஸ 2010 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் திகதி ஐ.நா. நிபுணர் குழுவை எதிர்த்து கொழும்பில் உண்ணாவிரதம் இருந்தார். அப்போது அவரின் தலைமாட்டின் அருகே 'பிஸ்கட்' பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்ததை கொழும்பு ஊடகங்கள் படம் பிடித்து வெளியிட்டிருந்தன.

யாழ்ப்பாணம், ஏப்ரல் 03

தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கு இலங்கைத் தமிழர்கள் மீது உண்மையான பாசம் கிடையாது என்று அமைச்சர் விமல்வீரவன்ஸ நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். அவ்வாறு பாசம் இருந்திருந்தால் அவர்கள் இறுதிப் போரின்போதே இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்திருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

''தென்னிந்தியாவில் இன்று போராட்டம் நடத்துபவர்களுக்கு உங்கள் மீது நேர்மையான -, உண்மையான பாசம், அன்பு, நேசம் இருந்திருந்தால் இறுதிப் போரின்போது அவர்கள்

பார்க்க பக்கம் 04

## நான் இனவாதியல்லன்

### ■ சத்தியம் செய்கிறார் விமல்

யாழ்ப்பாணம், ஏப்.3

''நாங்கள் இனவாதிகள் அல்லன். தமிழ் மக்களுக்கு எதிரானவன் நான் அல்லன். பிரிவினைவாதத்தை எதிர்ப்பவன். தமிழ் மக்களே இதனை நம்புங்கள். நான் இனவாதி அல்லன். பயங்கரவாதத்துக்கும் இனவாதத்துக்கும் எதிரானவன். தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்லன்'' இப்படிக் கூறினார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

குருநகர் தொடர்மாடிக் குடியிருப்பு புனரமைப்புப் பணிகளை

பார்க்க பக்கம் 04

## புதிதாக முளைக்கும் காவலரண்கள்

கிளிநொச்சி,ஏப்ரல் 3

கிளிநொச்சி, புதுமுறிப்பு, கோணாவில் பகுதிகளில் புதிய இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பத்தில் இருந்த இராணுவக் காவலரண்கள் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் அகற்றப்பட்டு வந்தன.

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு அண்மித்த பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்களும் கடந்த ஆண்டு அகற்றப்பட்டிருந்தன. இந்த நிலையில் நேற்று முதல் மீண்டும் அப்பகுதியில் காவலரண் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றன.

அதேவேளை, கோணாவில் பகுதியில் புதிய ஒரு இராணுவக் காவலரண் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோன்று கிளிநொச்சி நெத்தலியாற்றுப் பகுதியிலும் புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (த-6)

ஒரு கை பார்ப்போம் 7

தென்னிலங்கை வியாபாரிகளால் வர்த்தக நடவடிக்கை பாதிப்பு 8

பழைய காணி சட்டங்களை திருத்தி புதிய வரைவை நடைமுறைப்படுத்துக 9

215 குழந்தைகள், 9 தாய்மார் இறப்பு பிறப்பை அண்மித்த காலப் பகுதியில் 17

ஐ.பி.எல். கோலாகலமாக ஆரம்பம் 23

## தமிழ் - சிங்கள உறவுக்கு நாவற்குழியில் பாதிப்பு

### ■ அரச நாடாளுமன்ற உறுப்பினர் கவலை

யாழ்ப்பாணம், ஏப்.3

நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றம் காரணமாகத் தமிழ்-சிங்கள உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் இது தற்போது பயங்கரச் சூழலை தோற்றுவித்துள்ளதாகவும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் குறிப்பிட்டார்.

''தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான நாவற்குழியிலுள்ள காணியில் தமிழ்-சிங்கள உறவைப் பிரிக்கும் வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன'' என்றார் அலென்ரின்.

குருநகர் தொடர்மாடி குடியிருப்புப் புனரமைப்புப் பணிகள், வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பொறியியல்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸவினால்

பார்க்க பக்கம் 04

## ஈழத்தமிழர்களுக்காக திரண்டது திரையுலகம்

### ■ தமிழீழ வாக்கெடுப்புக்கும் வலியுறுத்தல்



சென்னை, ஏப்.3

தனித்தமிழீழ அரசை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தி தமிழக மாணவர்கள் ஆரம்பித்த போராட்டம் இன்று மக்கள் போராட்டங்களாக மாநிலமெங்கும் குமுறி வெடித்துள்ள நிலையில், அதற்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில் தென்னிந்திய தமிழ்த் திரையுலக நடிகர்களும் - நடிகைகளும் நேற்று உண்ணா விரதக் களத்தில் குதித்தனர்.

தனி ஈழத்துக்கு ஆதரவான இந்தப் போராட்டக் களத்தில் பிரபல முன்னணி நடிகர்களான ரஜினிகாந்த், கமல்ஹாசன், சத்தியராஜ்,

பார்க்க பக்கம் 04

## பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்குமா?

### பரிசீலிப்பதாக மன்மோகன் வாசனிடம் தெரிவிப்பு

புதுடில்லி,ஏப் 03

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாட்டை முக்கிய சில நாடுகள் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ள நிலையில், இந்த மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியாவும் பரிசீலனை செய்யவுள்ளது. இதனால் இந்தியா பங்கேற்பதும் கேள்விக்குறியாகியுள்ளது.

மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன், இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டை இந்தியா

பார்க்க பக்கம் 04

## மீனவர்கள் தாக்கப்பட்டதால் இராமேஸ்வரத்தில் பதற்றம்

சென்னை, ஏப்.3

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீண்டும் கடுமையாகத் தாக்கப்பட்டமையால் இராமேஸ்வரத்தில் நேற்று பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இராமேஸ்வரம் மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் தடுத்துத் தாக்கியவர்கள்,

பார்க்க பக்கம் 04


## புத்தர் பிறந்த பூமியில் சூதாட்ட நிலையமா?

### ■ அரசுக்கு எதிராகக் கொதிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஏப்.3

2016 ஆம் ஆண்டுக்குள் ஆசியாவிலேயே மிகப் பெரிய சூது மத்திய நிலையத்தை அமைக்க ஜேம்ஸ் பெகர் என்ற பிரபல சூதாட்டக்காரருக்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது பௌத்த தர்மத்துக்கு முற்றிலும் எதிரானது. புத்தர் பிறந்த பூமியில் இவர்

பார்க்க பக்கம் 04



யாழ்.நகரில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு வர்ணம் பூசும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-23)

# பறிபோன காணிகளை மீட்க அரசுடன் ஒன்றிணையுங்கள்

## அழைக்கிறார் அமைச்சர் விமல்

யாழ்ப்பாணம், ஏப். 3

இராணுவத்தினர்-பாதுகாப்புத் தரப்பினர் யாழ்ப்பாணத்தில் காணிகளைப் பிடித்து வைத்திருக்கின்றனர். இந்தக் காணிகளைத் திரும்பப்பெற வேண்டுமானால் நீங்கள் அரசுடன் ஐக்கியமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று யாழ்ப்பாணத்தில் கூறினார்.

100 மில்லியன் ரூபா செலவில் குருநகர் தொடர்மாடிக் கட்டடம் புனரமைக்கும் பணிகளை வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பொறியியல் துறை அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் விமல ஸ்ரீ பெரேரா, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.



இங்கு உரையாற்றிய அமைச்சர் விமல்,

'போரில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளதும், இராணுவத்தினரதும் உயிர்களை எங்களால் திரும்ப வழங்க முடியாது. துரதிர்ஷடமாக அவர்கள் எங்களிடமிருந்து பிரிந்து விட்டார்கள். இரண்டு தரப்பினருக்கும் தங்கள் தங்கள் தரப்பினரை இழந்த வேதனை இருக்கின்றது.

போரினால், போரில் வெடித்த குண்டுகளால் சிதறுண்டது இந்தக் கட்டடங்கள் மாத்திரமல்ல. எங்கள் இதயங்களும் தான். போரினால் பாதிக்கப்பட்ட இந்தக் கட்டடங்களைப் புனரமைத்துச் சீர்செய்ய முடியும். ஆனால் இதயங்களிலுள்ள ஓட்டைகளைச் சீர்செய்ய நீண்டகாலம் எடுக்கும். உடைந்த கட்டடங்களையும் ஒற்றுமையின் மூலமே மீளவும் கட்டியெழுப்ப முடியும். ஒற்றுமை-ஐக்கியத்தின் மூலம்தான் கடந்த காலங்களில் இராணுவத்தினர்- பாதுகாப்புத் தரப்பினர் பெற்றுக் கொண்ட காணிகளிலிருந்து அவர்களை வெளியேற்ற முடியும். அந்த வளங்களை மீளவும் உங்களுக்குக் கையளிக்கக் கூடிய நிலை ஏற்படும் என்றார். (த-5)

## 'காத்திருந்த' பளை தபால் நிலையம் இன்று திறப்பு

பளை, ஏப். 3

பளைப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டு நீண்ட காலம் காத்திருந்த பிரதான தபால் நிலையம் இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 11 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இந்த பிரதான தபால் நிலையம் இன்று நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது என்று பிரதி அஞ்சல் அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-13-9)

# வரையறையை மீறிவிட்டார் இலங்கைத் தூதர் காரியவசம்

## கொதிக்கிறார் நாராயணசாமி

அவர் தனது எல்லையை மீறியுள்ளார். அவர் தனது இராஜதந்திர வேலையோடு நிறுத்திக்கொள்ளவேண்டும்

புதுடில்லி, ஏப் 3

வட இந்தியர்களை தமிழ் நாட்டு மக்களுக்கு எதிராகத் தூண்டும் விதத்தில் அமைந்ததாகக் கூறப்படுகின்ற இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசத்தின் கூற்றைக் கண்டித்துள்ள மத்திய இணை அமைச்சர் வி.நாராயணசாமி, அவர் தனது எல்லையை மீறிவிட்டார் எனத் தெரிவித்தார்.

அவர் தனது எல்லையை மீறியுள்ளார். அவர் தனது இராஜதந்திர வேலையோடு நிறுத்திக்கொள்ளவேண்டும்' எனவும் நாராயணசாமி ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

சிங்களவர்களின் பூர்வீகம் இந்தியாவின் வட மாநிலங்கள் ஆகும் எனக் காரியவசம் கூறியதாக வெளியான செய்தி குறித்துத் தெரிவிக்கையிலேயே மத்திய இணை அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதனை, இந்தியத் தமிழர்களுக்கு எதிராக வட இந்திய மக்களைத் தூண்டும் முயற்சி என மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ கண்டித்திருந்தார்.

அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டிய குற்றச்சாட்டில் இலங்கைத் தூதுவரை குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என வைகோ, இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார். (த)

# மாத்தளை புதைகுழிகள் பற்றி விசாரிக்கச் சிறப்பு நீதிமன்றம்

## அரசை வற்புறுத்துகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப். 3

மாத்தளையில் ஏராளமான புதைகுழிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள 151 மனித எலும்புக் கூடுகள் தொடர்பான சட்ட ரீதியான விசாரணைகளை மேற்கொள்வதற்காக சிறப்பு நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அரசை வற்புறுத்தியுள்ளது. 1978 மற்றும் 89 ஆண்டுகளில் காணாமற் போனவர்களின் எலும்புக்கூடுகள் இவை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் மாநாட்டில் இது பற்றி கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, இந்தச் சிறப்பு நீதிமன்ற விசாரணைகளின் போது சாட்சியமளிப்பதற்காக அந்தக் கால கட்டத்தில் அந்தப்பகுதிக்கு பிரதிநிதியாக இருந்த ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர், அந்தப்பகுதியின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்துள்ள பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மற்றும் பொது மக்களும் அழைக்கப்பட வேண்டும் என்று ரில்வின் சில்வா கேட்டுக் கொண்டார்.

இந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பெரும் குழி இதுவாகும். இந்த விடயத்தை மூடி மறைத்துவிட எவருக்கும் விட்டுக் கொடுக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

154 பேரின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் 81 மண்டை ஓடுகள்தான் இருக்கின்றன. இதன் மூலம் 73 பேர் தலையில்லாத முண்டங்களாக இங்கு புதைக்கப்பட்டிருந்துள்ளார்கள் என்று புலனாகின்றது. 1987-89 பயங்கர காலகட்டத்தில் மக்களை அச்சுறுத்துவதற்காக மனித தலைகள் எவ்வாறு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன என்பதை நாம் கண்டிருக்கிறோம் என்று ஜே.வி.பி. பொதுச் செயலாளர் கூறினார். (ப)

# 'பஷன் பக்' மீது தாக்குதல்; சந்தேக நபர்கள் விடுதலை

கொழும்பு, ஏப். 3

பிப்பிலியான 'பஷன் பக்' நிறுவனம் மீதான தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் மூன்று தேரர்கள் உட்பட்ட 17 பேர் சந்தேகத்தின் பேரில் மிரிஹான பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் நேற்று செவ்வாய்க்கிழமை நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது இவர்கள் அனைவரையும் எச்சரித்த பின்னர் நீதிவான் விடுதலை செய்தார்.

தாக்குதல் தொடர்பிலான வழக்கைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையில்லை என 'பஷன் பக்' நிறுவனத்தினர் தெரிவித்தனர். இதன் பின்னர் இந்த வழக்கு விசாரணைகளை நீதிவான் முடிவுக்கு கொண்டுவந்ததுடன் சந்தேக நபர்களையும் விடுதலை செய்தார். பிப்பிலியான 'பஷன் பக்' களஞ்சியசாலை மீது கடந்த வியாழக்கிழமை இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)



பிப்பிலியான 'பஷன் பக்' நிறுவனம் மீதான தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 17 சந்தேகநபர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களில் பௌத்த பிக்குகளும் அடங்குவர். (த)

# சுகாதார சேவைகளுக்கு உலக வங்கி நிவாரணம்

கொழும்பு, ஏப்.03

இலங்கையின் சுகாதார சேவைகளின் தரத்தை மேலும் மேம்பாடடையச் செய்யும் வகையில் உலக வங்கி 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிவாரணமாக வழங்கியுள்ளது.

அரசு சார்ந்த சுகாதாரத் துறையினரின் செயற்றிறனை விருத்திசெய்து பயன்களை எதிர்கொள்ளும் நாடொன்று முகம்கொடுக்கும் சாவால்களுக்குச் சிறப்பான வகையில் முகம்கொடுப்பதற்கான சுகாதாரத் தொகுதியொன்றை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தின் மூலமாக சயரோகம், டெங்கு, குஷ்டரோகம், எயிட்ஸ், நீர் வெறுப்பு நோய் மற்றும் ஏனைய மிருகங்களிடமிருந்து தொற்றக்கூடிய தொற்று நோய்களினால் அவதிப்படுவோருக்கும் இதய நோய்கள், உயர்குருதி அமுக்கம், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் மனநோய் போன்ற பாராதூரமான தொற்றாத நோய்களினால் நீண்டகாலமாக அவதியுறுவோருக்கும் பலன்கள் கிடைக்கவுள்ளன.

உலகவங்கியானது 1980 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து ஆய்வு ரீதியிலான செயற்பாடுகள் மற்றும் சர்வதேச அபிவிருத்தி முகவர் ஊடாக இலங்கையின் சுகாதாரத் துறைக்கு நிதி மற்றும் கடன்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-22)

# தீச்சுடர் சின்னத்திலேயே குதிப்பேன் தேர்தல்களில்

## கூறுகிறார் பொன்சேகா

புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள தனது ஜனநாயகக் கட்சி, தீச்சுடர் சின்னத்தின் கீழ் மட்டும் தான் தேர்தல்களில் போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தலைமைத்துவத்துடன் விரக்திகொண்ட பல முன்னணி அங்கத்தவர்கள் தனது கட்சியில் சேர்வது தொடர்பாகத் தன்னுடன் பேசி வருவதாகவும் பொன்சேகா கூறினார்.

எதிர்க்கட்சியிலுள்ள முன்னாள் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தன்னுடன் சேர விரும்புவதாகவும் அவர் கூறினார்.

தனது கட்சியின் கொள்கைகளை மீறுபவர்கள் குறுகிய காலத்திலேயே அரசியலிலிருந்து நீக்கப்படுவர் எனவும் இராணுவத்தில் தான் எவ்வாறு கட்டுப்பாட்டைப் பேணினாரோ அவ்வாறே கட்சியிலும் கட்டுப்பாட்டைப் பேணவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வென்றெடுக்க முடியாது எனக் கருதப்பட்ட போரில் வெற்றி கண்ட என்னால், கட்சியையும் எதிர்பார்க்காத அளவுக்கு உயர்த்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (த)

## கைவிடப்பட்ட காணிகளை துப்புரவு செய்யக் கோரிக்கை

அக்கராயன், ஏப். 3

துணுக்காய், தென்னியன்குளத்தில் மக்களால் கைவிடப்பட்ட காணிகள் பற்றைக்காடுகளாக மாறியுள்ளதால் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

சுமார் 100 ஏக்கருக்கும் மேலான குடியிருப்பு மற்றும் வயல் நிலங்கள் பற்றைக்காடுகளாக மாறியுள்ளன. இந்தக் காணிக்குரியவர்கள் அவற்றைத் துப்புரவு செய்ய வேண்டும் என துணுக்காய் பிரதேச செயலகம் அறிவித்தல்கள் விடுத்த போதும் இதுவரை அந்தக் காணிகள் துப்புரவு செய்யப்படவில்லை. இதனால் ஏனைய காணிகளில் மீள்குடியேறியுள்ள மக்கள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

காட்டு விலங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் இந்தக் காணிகளைத் துப்புரவு செய்தால் மட்டுமே தாம் விவசாயத்தில் ஈடுபட முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-18)

## வட்டக்கச்சி சந்தை அபிவிருத்தி கலந்துரையாடல் இன்று

கிளிநொச்சி, ஏப். 3

கிளிநொச்சி வட்டக்கச்சி சந்தையின் அபிவிருத்தி மற்றும் வர்த்தகர்களின் தேவைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

வட்டக்கச்சி பொதுச் சந்தையின் புதிய கட்டடத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபை அறிவித்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள வட்டக்கச்சிப் பொதுச் சந்தை போதிய வசதிகள் இன்றிக் காணப்படுகிறது.

இதனால் தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருகின்றது. இது குறித்து பல தடவை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்திய போதும் இது வரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் சந்தையை அபிவிருத்தி செய்வது, ஏற்கனவே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு வர்த்தக நிலையங்களை வழங்குவது, மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பில் இன்று கலந்துரையாட உள்ளதாக பிரதேச சபையின் உறுப்பினர் சுவிஸ்கரன் தெரிவித்துள்ளார். (ஐ-6)



தறிகெட்டோடிய கனரக வாகனம் மோதியதில் முறிகண்டிப் பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இரவு வீதியில் படுத்திருந்த 6 மாடுகள் பரிதாபமாக உயிரிழந்தன. (ஐ-402)

## அகில இலங்கை ரீதியில் கிளிநொச்சிக்கு நான்காமிடம்

### செஞ்சிலுவையின் கிளி.கிளைத் தலைவர் பெருமிதம்

கிளிநொச்சி, ஏப். 3

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளை அகில இலங்கை ரீதியான தரப்படுத்தலில் 4 ஆவது இடத்தைப் பெற்று முன்னிலை வகிக்கின்றது. இவ்வாறு தெரிவித்தார் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் தலைவரான த.குருகுலராஜா.

கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கரைச்சிப் பிரிவுக்கான நிர்வாகத் தெரிவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது கிளை போர்க் காலத்தில் அளப்பரிய பல சேவைகளை ஆற்றியது. பிரதானமாக நோயாளிகள், போக்குவரத்து தபால் சேவை என்பனவற்றுக்கு மாவட்ட மக்கள் எம்மையே நம்பியிருந்தனர். அத்துடன் பல்வேறு சமூக சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது அனர்த்தங்களின் போது மக்களுக்கு உதவுவதுடன் முதலுதவிப் பயிற்சி வழங்குதல், மீள்குடியமர்ந்த மக்களுக்கு உதவுதல் போன்ற பணிகளை ஆற்றி வருகின்றது. இந்த நிலையில் அகில இலங்கை ரீதியான கிளைகளின் தரப்படுத்தலில் தமது கிளை 4 ஆவது இடத்தில் உள்ளதோடு வடக்குக் கிழக்கில் உள்ள கிளைகளில் முதல் இடத்திலும் உள்ளது என மேலும் அவர் தெரிவித்தார். (க-405)

# உதிரவேங்கை வைரவர் ஆலய காணியை மீட்க நடவடிக்கை

### உரிய பதில் தருமாறு அரச அதிபரிடம் கோருகிறார் சிறிதரன்

*கிளிநொச்சி, ஏப். 3*

*கிளிநொச்சி நகருக்கு அருகில் கனகாம்பிகைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் தொண்டமான்நகர் உதிரவேங்கை வைரவர் ஆலயக் காணியை ஆலய நிர்வாகத்தினருக்கும் பெற்றுக் கொடுக்க கிளிநொச்சி அரச அதிபர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.*

இது தொடர்பில் அவர் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உதிரவேங்கை வைரவர் ஆலயத்தின் தீ மிதிப்பு உட்பட்ட திருவிழாக்கள் நடைபெறுகின்ற ஆலயத்துக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் காணியை அநுராதபுரத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மண்ணுக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத தனியார் நிறுவனத்தினர் ஒன்று அத்துமீறிப் பிடித்துள்ளதுடன் காணிக்குள் அனுமதியின்றிப் பிரவேசிக்கக் கூடாது என்ற விளம்பரப் பலகையையும் இட்டுள்ளனர். அத்துடன் ஆலய பரிபாலன சபையையும் மிரட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மண்ணில் பிறந்து வளர்ந்து இன்றுவரை இம்மண்ணிலேயே வாழ்பவன் என்ற வகையில் இந்தக் காணி முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக இந்த ஆலயத்துக்கே சொந்தமானது என்பதை நான் நன்கு அறிவேன்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் காரணமாக கிளிநொச்சியில் பல காணிகள் இன்னமும் உரிய முறைப்படி மக்களிடம் வழங்கப்படவில்லை என்பதைத் தாங்களும் அறிவீர்கள்.

மக்களுக்கும் பொது அமைப்புக்களுக்கும் உரிய காணிகள் தென்பகுதியிலிருந்து வருபவர்களால் சட்டவிரோதமாகப் பறிக்கப்படுவதும் அதற்கு சில தமிழ் அதிகாரிகள் உடந்தையாக இருப்பதும் வேதனையளிக்கிறது.

இந்தக் காணி விடயம் தொடர்பாக கடந்த மாதம் 18 ஆம் திகதி கரைச்சிப் பிரதேச செயலருக்கு கடிதம் ஒன்று எழுதி தங்களுக்கும் பிரதி இட்டிருந்தேன். இதுவரை பிரதேச செயலரிடமிருந்தோ, தங்களிடமிருந்தோ எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

குறித்த காணி தொடர்பான உரிய ஆவணங்கள் ஆகிய நிர்வாகத்திடம் உள்ளன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உதிரவேங்கை வைரவர் ஆலயத்துக்கு சொந்தமான காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தி ஆலய பரிபாலன சபையிடம் காணியை வழங்குவதற்கு மாவட்ட அரச அதிபர் என்ற வகையில் தாங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளது. (ஐ-426)

## வவுனியா வடக்கில் காட்டு மரங்கள் திருட்டு

அக்கராயன்,ஏப்.3

வவுனியா வடக்குப் பகுதியில் பெருமளவு மரங்கள் களவாக வெட்டப்பட்டு கனரக வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரகசியமான முறையில் வெட்டப்படும் மரங்கள் பலகைகள், தீராந்திகளாக மாற்றப்பட்டு எருக்களுக்கடியில் மறைக்கப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகருக்கு எடுத்துச் செல்லப்படுவதை அவதானிக்க முடிவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

புளியங்குளத்துக்கும் நெடுங்கேணிக்கும் இடையில் உள்ள பெருங்காட்டில் இவ்வாறு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை வவுனியா தெற்கின் குஞ்சுக்குளம், கிழவிகுளம், பாலமோட்டை ஆகிய பகுதிக் காடுகளிலும் காட்டு மரங்கள் வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

கிளிநொச்சி,ஏப்.3

கந்தபுரம் அமைதிவனம் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அந்தோனியார் தேவாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி முதன்மை ஆசிரியர் திருமதி மு.யோகேஸ்வரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலக்கம் 01 அ.த.க.பாடசாலை அதிபர் திருமதி வ.விமலேஸ்வரன் கலந்துகொள்வார். (ஐ-18)

## வீதி விளக்குகளை பொருத்துவார்களா?

துணுக்காய், ஏப்.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேசத்தில் உள்ள வீதிகளுக்கு விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவுப் பயணங்களின் போது பல்வேறு இடர்களுக்கு மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

துணுக்காய் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட வீதிகளுக்கு விளக்குகள் அமைக்கப்படாமல் இருப்பதால் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் வீதிகளுக்கு விளக்குகளைப் பொருத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நேரடியாக மனுக் கையளித்தலும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காலம் கடத்தாது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வீதிகளுக்கு விளக்குகளைப் பொருத்துவார்களாயின் இரவில் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள முடியும் என்று மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். (எ-415)

## பெண்களை வலுவூட்டவே மாவட்ட பெண்கள் அமைப்பு

### கிளி.பொலிஸ் மக்கள் தொடர்பு அதிகாரி

கிளிநொச்சி, ஏப். 3

சமூகத்தில் பெண்கள், சிறார்களுக்கு எதிராக இடம்பெறும் துஷபிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் மாவட்ட பெண்கள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எல்.அரிப்டீன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவினால் "மாவட்ட பெண்கள் அமைப்பு" உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை அரச செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்திட்டங்களை வலுவடையச் செய்தல் என்பன இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதன் முக்கிய நோக்கமாக உள்ளது.

இதனைவிட வீட்டு வன்முறைகளைக் கட்டுப்படுத்துதல், சிறுவர் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், அது தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளிலும் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பு ஈடுபடும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ள மாதர் அமைப்புக்களைக் கொண்டு இந்த மாவட்ட பெண்கள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண்கள், சிறுவர்கள் தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

## பெண்கள் அமைப்பு உதயம்

வவுனியா மாவட்டத்தில், பெண்களின் பொருளாதார, கல்வி கலாசார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு பெண்கள் மறுமலர்ச்சிக் கழகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக திருமதி லோஜினி இந்திர சித்தனும், உபதலைவராக திருமதி தயாளன் ஸ்ரீலாஷாமினியும் செயலாளராக செல்வி தேவேந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-400)

## புதுக்குடியிருப்பில் விவசாயக் கிணறுகள்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விவசாயிகளின் நலன் கருதி 18 விவசாயக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

கடந்த கால போர் இடர் காரணமாக இடம்பெயர்ந்து பின் மீளக்குடியமர்ந்த காலப் பகுதியில் இருந்து அரை ஏக்கருக்கு குறையாத நிலப்பரப்பில் தற்போது மரக் கறிப் பயிர் செய்கை மேற்கொள்பவர்களை அடையாளம் கண்டு கிராம சேவகர் பிரிவு ரீதியாக இந்தக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கிணறுகளை அமைப்பதற்கான பயனாளிகளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் தெரிவு செய்துள்ளது. இதன்படி மந்துவில் கிராம சேவகர் பிரிவில் 4 விவசாயக் கிணறுகளும், சிவநகர் கிராம சேவகர் பிரிவில் 2 கிணறுகளும் புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம சேவகர் பிரிவில் ஒரு கிணறும், வள்ளுவர் புரத்தில் 5 கிணறுகளும், தேராவில் பகுதியில் 6 கிணறுகளும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-400)

## புத்தர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
போன்ற சூதாட்டக்காரர்களுக்கு அரசு ஏன் செங்கம்பள வரவேற்பளிக்கிறது?

- இப்படி ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியது.

நாட்டில் குற்றச்செயல்களும், அராஜகங்களும் அதிகரிக்க வழிவகுக்கும் இந்த சூது விளையாட்டுக்கு மகாநாயக்க தேரர்களும், பௌத்த அமைப்புகளும் இடமளிக்கலாமா? சூது விளையாட்டால் ஆஸ் திரேலியாவில் கடந்த மூனறு வருடங்களுக்குள் ஆயிரத்து 27 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்று அதன் பாரதூரத் தன்மையை ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டினார்.

ஐ.தே.கவின் கொழும்பிலுள்ள தொழிற் சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உலகின் மிகப் பிரபலமான சூதுக்காரரான ஜேம்ஸ் பெகர் என்பவருக்கு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட்டுள்ளது என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கூறுகிறார். இலங்கை ஒரு பௌத்த நாடு. பௌத்த தர்மத்துக்கமைய நாட்டில் ஆட்சி நடத்தப்படுகின்றதெனில், சூதுக்காரர்களுக்கு அரசு ஏன் செங்கம்பள வரவேற்பளிக்க வேண்டும்? இதனால் நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் நன்மை என்ன?

சூது நிலையமொன்றை அமைக்க 'லேக் ஹவுஸ்'க்கு முன்னாலுள்ள பெறுமதிவாய்ந்த இடத்தை அரசு வழங்கியுள்ளது. இதனூடாக 2016 ஆம் ஆண்டில் ஆசியாவிலேயே மிகப் பெரிய சூது மத்திய நிலையத்தை இலங்கையில் அமைக்கப்போவதாக ஜேம்ஸ் பெகர் அறிவித்துள்ளார். இதனால் நாட்டில் சூது, கொலை, கொள்ளை, மதுபாவனை, விபசாரம் முதலான நாட்டுக்குக் கேடு விளைவிக்கும் செயல்களே அதிகரிக்கும். எனவே, மகாநாயக்க தேரர்களும், பௌத்த அமைப்புகளும் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவும் இதனை அனுமதிக்க முடியுமா?

ஆஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்ட சூது விளையாட்டு குறித்து 'ஹெரல்ட் சண்' என்ற அந்நாட்டுப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் ஆயிரத்து 27 பேர் ஆஸ்திரேலியாவில் கொலைசெய்யப்பட்டுள்ளனர். அதிக மதுபாவனையால் 127 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன், குரூரச் செயல்களும் அதிகரித்துள்ளன என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந்தச் சூதுக்கு இடமளித்தால் இலங்கையிலும் இதுபோன்ற நிலை ஏற்படக்கூடும்.

பௌத்த தர்மத்தையும் கலாசாரத்தையும் பாதுகாத்து அரசு இத்தகைய சூதுக்கு இடமளிக்கப்போகிறதா? பொருளாதாரச் சுமையால் வாழமுடியாது தவிக்கும் நாட்டு மக்கள் இந்தச் சூது நிலையத்தை அமைக்குமாறு அரசிடம் கேட்கின்றனரா?

ஐக்கிய தேசியக் கட்சி என்ற வகையில் இந்தச் சூது விளையாட்டை நாம் நாட்டில் அனுமதிக்க மாட்டோம். - என்றார் திஸ்ஸ. (த-சி)

## நான்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஆரம்பித்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

தமிழ்த் தேசியம், தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு வாக்குகளைப் பெற்றுச் செல்கின்றனர். அவ்வாறு வாக்குகளைப் பெறுவதற்கு இங்கு குழ்ப்பமான சூழ்நிலை நிலவ வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்.

கடந்த கால பிரிவினைவாதம் மூலம் வேதனையே மிச்சமாகியுள்ளது. இனவாதத்தை யாராவது தூண்டிவிட முயன்றால் அவர்களை நீங்கள் எதிர்க்க வேண்டும்.

நீங்கள் எதை எதிர்க்கின்றீர்கள்? உங்கள் குழந்தைகளின் கழுத்தில் தங்கச் சங்கிலி அணிந்து செல்வதையா அல்லது சயனைட் குப்பி அணிந்து செல்வதையா விரும்புகிறீர்கள்?

ஜெனிவாவில் இருப்பவர்களும், ஜெனிவாவுக்கு உல்லாசப் பயணத்தை மேற்கொள்பவர்களும், சென்னையில் இருப்பவர்களுக்கும் தேவையாக இருப்பது, உங்கள் பிள்ளைகளின் கழுத்தில் சயனைட் குப்பி இருக்க வேண்டும் என்பதுதான்.

நான் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்லன். நாங்கள் இனவாதிகளோ அல்லன். நாங்கள் பயங்கரவாதத்தை எதிர்த்தோம். பிரிவினைவாதத்தை எதிர்த்தோம். நாளையும் அதனை எதிர்ப்போம்.

நாங்கள் இனவாதிகள் அல்லன். இனவாதிகள் அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (த-5)

## மீனவர்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மீன்பிடி சாதனங்களைச் சேதப்படுத்திவிட்டு மீனவர்களை விரட்டியடித்ததால் அங்கு பெரும் பதற்றமான நிலை ஏற்பட்டதாக தமிழக ஊடகங்கள் நேற்றிரவு செய்தி வெளியிட்டன.

16 நாள்கள் வேலைநிறுத்தத்தப் போராட்டத்திற்கு பின்னர் திங்கட்கிழமையன்றுதான் 500 இற்கும் மேற்பட்ட படகுகளில் இராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்கு சென்றனர். கச்சதீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த அவர்களை, 2 பெரிய படகுகள் மற்றும் 4 ரோந்துப் படகுகளில் வந்தவர்கள் விரட்டியடித்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று அதிகாலை, ஆதாம் பாலம் பகுதியை ஒட்டிய, இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதோடு படகுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. இலங்கைக் கடற்படையினரே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக தமிழக மீனவர் அமைப்புக்கள் குற்றம்சாட்டியுள்ளன.

ஆயினும் இவ்வாறான தாக்குதல்கள் எதனையும் தாம் மேற்கொள்ளவில்லை என்று இலங்கைக் கடற்படையினர் மறுத்துள்ளனர். (த)

## பொதுநலவாய..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
புறக்கணிக்க வேண்டும் என டில்லியில் நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து வலியுறுத்தினார். இதன்போது பிரதமர் மன்மோகன் சிங், மாநாட்டைப் புறக்கணிப்பது குறித்த கோரிக்கையை மத்திய அரசு பரிசீலனை செய்யும் எனத் தெரிவித்தார்.

54 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பொதுநலவாய நாடுகளின் அடுத்த மாநாடு இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது என கனடா, ஆஸ்திரேலியா முதலான நாடுகள் ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பொதுநலவாய நாடுகளின் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கும் பிரிட்டிஷ் மகாராணியாரும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள மாட்டார் என்ற செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையிலேயே அமைச்சர் வாசனின் கோரிக்கைக்கு பிரதமர் மன்மோகன் சிங் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் 19 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதமரிடம் அமைச்சர் வாசன் கேட்டுக்கொண்டார்.

தமிழக மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்றும் பிரதமரிடம் அமைச்சர் வாசன் கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து அவரது கோரிக்கையை பரிசீலனை செய்வதாக பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடப்பது இந்தியாவுக்கு மிகப் பெரிய அவமானமாகும். அத்தகைய தலைகுனிவுக்கு இந்தியா ஆளாகக் கூடாது. எனவே, லண்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைச்சர்கள் மட்டக்கூட்டத்தில் இலங்கையைப் பற்றி விவாதிக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும் எம்.பியுமான தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

## தமிழ்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் பின்னர் உரையாற்றும் போது நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

நாவற்குழியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் தென்பகுதியிலிருந்து வந்த 80 சிங்களக் குடும்பங்கள் வரை அத்துமீறிக் குடியேறி அதில் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதற்கருகாமையில் தமிழ் குடும்பங்களும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணியில் தங்கியுள்ளன. இதற்கு அருகில் உள்ள சீருடையினர் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணி தமக்கே உரியது என்று குறிப்பிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த காணியில் பயங்கரமான சூழல் தற்போது இருந்து வருகிறது.

தமிழ்-சிங்கள உறவைப் பாதிக்கின்ற வகையில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. இது தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்சவுடன் கலந்துரையாடவுள்ளேன்-என்றார்.

இதேவேளை நாவற்குழியிலுள்ள சிங்கள குடியேற்றங்களுக்குப் பொறுப்பானவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும மல்காந்தி, நிகழ்வின் முடிவில் அமைச்சர் விமல்வீரவன்சவிடம் மனுவொன்றை கையளிக்க முயன்றபோதும் அமைச்சர் விமல் பின்னர் பார்த்துக்கொள்வதாகக் கூறிச் சென்றார். (த-5)

## தமிழ்நாட்டு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
உங்களுக்கு உதவியிருக்க வேண்டும்'' என்று நேற்று குருநகரில் நடந்த தொடர் மாடிக் குடியிருப்பு புனர்நிர்மாண ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

இறுதிப் போரின் போது இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தவர் கருணாநிதி ஒருவரே என்றும், அவரும் தலைக்கும் காலுக்கும் மின் விசிறிகளை வைத்துக் கொண்டே சிறிது நேரம் உண்ணாவிரதம் இருந்தார் என்றும் வீரவன்ஸ மேலும் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

இலங்கையில் அமைதி நிலவக் கூடாதென்பதுதான் தென்னிந்தியாவில் இன்று போராடுபவர்களின் ஒரே நோக்கம்.

தென்னிந்தியப் போராட்டக்காரர்களின் அழுத்தங்கள் காரணமாக, அவர்களைக் கட்டுப்படுத்தும் சக்தியற்ற இந்திய மத்திய அரசு, எங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கின்றது. அங்கே பிரித்துக் கொடுங்கள், இங்கே பிரித்துக் கொடுங்கள் என்று அவர்கள் சொல்கின்றனர்.

இலங்கையில் இறுதிக்கட்டப் போர் முள்ளிவாய்க்கால் வரை உச்சமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது கூட இவ்வாறான நிலைமை தோன்றவில்லை. இப்போது ஏன் திடீரென்று இவ்வாறானதொரு இயற்கையான நிலைமை இந்தியாவில் தோன்றியது?

புலிகளினால் 2006 ஆம் ஆண்டு கெப்பிற்றிக்கொலாவவில் பஸ் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் அப்பாவிச் சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அதில் உயிரிழந்த சிறுவன் ஒருவனைத் தந்தையார் ஒருவர் தூக்கிக் கொண்டு ஓடும் படத்தையும் தென்னிந்தியாவில் ஆர்ப்பாட்டம் செய்யும் இளைஞர்கள் ஏந்தி வைத்திருக்கின்றனர். இராணுவத்தால் அந்தச் சிறுவன் கொல்லப்பட்டதாக அவர்கள் சொல்கின்றனர்.

தென்னிந்தியாவில் தற்போது நடத்தப்படுகின்ற போராட்டங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பெருமளவான நிதி கிடைக்கின்றது. இந்த நிதிக்காகவே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தென்னிந்தியாவில் இன்று போராட்டம் நடத்துபவர்களுக்கு உங்கள் மீது நேர்மையான - உண்மையான பாசம், அன்பு, நேசம் இருந்திருந்தால் இறுதிப் போரின் போது உங்களுக்கு உதவியிருக்க வேண்டும்.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றது. அன்றைக்கு தென்னிந்தியாவிலிருந்த ஒரேயொரு எதிர்ப்பு அப்போதைய முதல்வர் கருணாநிதியுடையது மட்டும்தான். கருணாநிதி ஒரு இடத்தில் இருந்துகொண்டு தலைக்கும், காலுக்கும் மின்விசிறி வைத்துக்கொண்டு உண்ணாவிரதம் இருப்பதாகச் சிறிது நேரம் அமர்ந்திருந்தது ஞாபகம் இருக்கின்றது. உலகில் உண்ணாவிரதத்தின் போது இரண்டு மின்விசிறி பூட்டி உண்ணாவிரதம் இருந்த ஒரேயொரு மனிதன் கருணாநிதியாகத்தான் இருக்க முடியும்.

இதனைத் தவிர, வேறு எந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அன்று இருக்கவில்லை. அவ்வாறு அந்த நாள்களில் இல்லாத ஆர்ப்பாட்டம் ஏன் இன்று எழுந்திருக்கிறது?, இதற்குரிய காரணம் என்ன?, இதன் இரகசியம்தான் என்ன? அவர்கள் திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டார்களா?

இதற்கு ஒரேயொரு காரணம், இலங்கையில் அமைதி, ஐக்கியம் ஏற்படக் கூடாதென்பதே. இந்த நாட்டில் ஒற்றுமை கட்டியெழுப்பக் கூடாதென்பதற்காக ஜெனிவாவில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைத்து இங்குள்ளவர்களின் மனங்களில் தனிநாட்டுக் கோரிக்கை உணர்வைத் தூண்டுகின்றனர். இவ்வாறான தூண்டுதலால் மீண்டும் போராட்டம் ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

போராட்டம் வெடித்தால்தான் அவர்கள் சமாதானத் தூதுவர்கள் என்ற பெயரில் நாட்டுக்குள் வந்து உங்களது, எங்களது சொத்துக்களைக் கொள்ளையடித்துச் செல்வார்கள் - என்றார் விமல் வீரவன்ஸ. (த-5)

## ஈழத் தமிழர்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அஜீத், சூர்யா, கார்த்தி, விக்ரம், விஷால், தனுஷ், சிம்பு, சரத்குமார், பிரபு, சிவகுமார் மற்றும் ராதிகா, அம்பிகா, தேவயானி, நமீதா, தன்ஷிகா உட்பட ஏராளமான நடிகர் - நடிகைகள் அணிதிரண்டனர்.

நேற்றுக் காலை 9 மணிக்கு தியாகராய நகரில் உள்ள நடிகர் சங்க வளாகத்தில் நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் தலைமையில் ஆரம்பமான போராட்டம் மாலை 5 மணிக்கு முடிவடைந்தது.

இதன்போது போராட்டத்தை ஆரம்பித்த மாணவர்களுக்கும், தனிஈழம் கோரி தீர்மானம் நிறைவேற்றிய ஜெயலலிதாவுக்கும் நன்றி தெரிவித்தும் இலங்கை மீது பொருளாதாரத்தடை, சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈழத் தமிழர்களுக்காக தமிழகத்தில் இதுவரை தமிழ் உணர்வாளர்கள் நடத்திவந்த போராட்டம், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனை உயிரோடு பிடித்து வைத்து சுட்டுக்கொன்ற விதம், ஒளிப்படங்களாக வெளிவந்த பின்னர் மக்கள் போராட்டமாக வெடித்துள்ளது. மாணவர்கள், பெற்றோர், பணியாளர்கள், ஐ.டி. நிறுவன ஊழியர்கள் என அனைத்துத் தரப்பினரும் பாலச்சந்திரன் படங்களை ஏந்தியபடி ஈழத்தில் நடந்த இனப்படுகொலையைக் கண்டித்து களத்தில் குதித்துள்ளனர்.

முதலில், போர்க்குற்றவாளி ராஜபக்ஷவை கூண்டிலேற்றித் தண்டிக்கக் கோரி தமிழக மாணவர்கள் கிளர்ந்தெழுந்து போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். தனித் தமிழீழம் ஒன்றே தீர்வு, அதற்கான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அவர்கள் மத்திய - மாநில அரசுகளிடம் கோரிக்கை விடுத்து தொடர் போராட்டங்களில் குதித்தனர்.

பின்னர் மாணவர்களின் இந்தக் கோரிக்கைகள் தமிழக சட்டமன்றத்தில் வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டது. இதனால், மாணவர்கள் மாத்திரமன்றி அனைத்துத் தரப்பினரும் தனி ஈழத்துக்கு ஆதரவாகத் திரண்டுள்ளனர்.

இதற்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில், தென்னிந்திய நடிகர் - நடிகைகளும் நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் குதித்தார்கள்.

நடிகர்கள் ராதாரவி, வாகை சந்திரசேகர், சிவகுமார், அஜித், சூர்யா, கார்த்தி, தனுஷ், பிரசாந்த், விஷால், உதயநிதி ஸ்டாலின், பிரகாஷ்ராஜ், பிரபு, விக்ரம் பிரபு, அருண் விஜய், கே.பாக்கியராஜ், வி.எஸ். ராகவன், எஸ். வீ.சேகர், கருணாஸ், பவர் ஸ்டார் சீனிவாசன், டில்லி கணேஷ், விஜயகுமார், பாண்டியராஜன், செந்தில், பெப்ஸி விஜயன், தலைவாசல் விஜய், கே.ராஜன், ஹரிகுமார் மன்சூரலிகான், நிழல்கள் ரவி, எம்.எஸ்.பாஸ்கர் உள்ளிட்டோர் வந்தனர். கலைப்புலி தாணு, வைரமுத்து உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

முன்னணி நடிகைகள் ஹன்ஷிகா, நமிதா உட்பட ரேகா, ராதிகா சரத்குமார், ஊர்வசி, அம்பிகா, நளினி ஆகிய பழைய நடிகைகளும் இதில் கலந்துகொண்டனர்.

### படப்பிடிப்புகள் இரத்து

இதேவேளை, நடிகர், நடிகைகள் பலர் வெளிநாடுகளிலும் வெளியூர்களிலும் படப்பிடிப்புகளில் இருந்தார்கள். அவர்கள் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் படப்பிடிப்புகளை இரத்துச் செய்துவிட்டு சென்னை திரும்பிவிட்டனர்.

நேற்றைய உண்ணாவிரதத்தில் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்கம், இயக்குனர் சங்கம், திரைப்பட தொழிலாளர் சம்மேளனம், விநியோகஸ்தர் சங்கம், திரையரங்கு உரிமையாளர் சங்கம், சின்னத்திரை நடிகர்கள் உள்ளிட்ட பல அமைப்புகள் பங்கேற்றன.

உண்ணாவிரத முடிவில் நடிகர் சங்கம் சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடிகர் சரத்குமார் வாசித்தார்.

★ இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக மாணவர்கள் நடத்திய போராட்டத்துக்கு நன்றி.

★ தமிழ் ஈழத்தை வற்புறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய முதல் அமைச்சர் ஜெயலலிதாவிற்கு நன்றி.

★ இலங்கை அரசு தமிழர்களுக்கு தேவையான அனைத்து உரிமைகளையும் வழங்கும் வரை இலங்கைக்கு இந்திய அரசு பொருளாதார தடை விதிக்க வேண்டும்.

★ இலங்கை தமிழர்களுக்காக உயிர்த் தியாகம் செய்யாமல் அறவழியில் போராட வேண்டும்.

★ இலங்கை தமிழர்களை பாதுகாக்க இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

★ இலங்கை தமிழர் படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும். அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆகிய தீர்மானங்களே நிறைவேறின. (த-14)

**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## மாத்தளைப் புதைகுழி விவகாரத்தை அரசால் உள்ளே புதைக்க இயலுமா?

அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும் என்பது தமிழ் நீதி மொழிகளில் ஒன்று.

மாத்தளையில், 3 தசாப்தங்களுக்கு முன்னர், 35 ஆண்டுகளுக்கு முன்னர், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது, பிரேமதாஸ தலைமையிலான அரசாங்க காலத்தில் கொன்று புதைக்கப்பட்ட 154 பேரின் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டதான செய்தி ஊர்ஜிதமாகி உள்ளது.

1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 வரையான பயங்கர ஆட்சிக்காலத்தில் அரச படைகளால் மாத்தளைப் பகுதியில் கொன்று புதைக்கப்பட்ட 154 பேரின் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அது குறித்து விசாரிக்க விசேட நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி உள்ளார் மக்கள் முன்னணியின் [ஜே.வி.பி.யின்] பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

154 எலும்புக்கூடுகளில் 73 இன் தலைப்பகுதிகள் இல்லை என்றும், கழுத்துக்கள் துண்டாடப்பட்டே சம்பந்தப்பட்டோர் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும், அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

மனித உரிமை மீறல்கள் குறித்து இப்போதைய அரசு, அனைத்துலக மட்டத்தில் அவமானப்பட்டு வெளியக [அனைத்துலக] விசாரணைக்கு மறுப்புத் தெரிவித்துவரும் வேளை பார்த்து –

இலங்கை அரசுகள் எல்லாமே, அரசியல் கிளர்ச்சிகளை அடக்குவது என்ற போர்வையில் அராஜக ஆட்சிகளையே நடத்தின – மனித உரிமைகளை அப்பட்டமாக மீறின – என்பது முன்னோட்டமாக வெளிச்சத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன எனலாம்.

1987 – 90 ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது சுமார் 60 ஆயிரம் தென்னிலங்கை இளைஞர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமற் போயினர். அப்பொழுது பதவியிலிருந்த பிரேமதாஸ அரசு மிகவும் மோசமான அடக்கு முறைகளைக் கையாண்டு கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவந்தது. கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் தவிர கிளர்ச்சிக்காரருக்கு உதவிய குற்றச்சாட்டில் படையினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்களும் பின்பு காணாமற் போயினர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசுக்கு எதிரான கிளர்ச்சி முறியடிப்பு என்ற போர்வையில் அரச படைகளின் அட்டூழியங்கள் மறைக்கப்பட்டன. இந்த அராஜகங்கள் பல ஆண்டுகள் கடந்து சூரியகந்த, மாத்தளை மனிதப் புதைகுழிகள் மூலம் வெளிவந்துகொண்டு இருக்கின்றன.

1994 இல் சூரியகந்தவில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளும் ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது கொல்லப்பட்டவர்களதுதான். ஜே.வி.பி. கிளர்ச்சிக்கு ஆதரவாகச் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் கொல்லப்பட்ட எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலய மாணவர்கள் 300 பேரின் எலும்புக் கூடுகளே அவை என்பது பின்பு உறுதி செய்யப்பட்டது.

அந்த வரிசையில் செம்மணி மரணங்கள் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றவை. 1996 இல் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய அரச படைகள் 18 மாத காலத்தில் நடத்திய பயங்கரவாத நடவடிக்கையின்போது யாழ்ப்பாணத்தில் 600 முதல் 700 வரையானோர் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்களில் 400 பேர் வரை செம்மணியில் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாக சோமரட்ன ராஜபக்ஷ என்ற படை அதிகாரி நீதிமன்றில் தெரிவித்த போதிலும் சர்வதேச அவதானிகள் முன்னிலையில் 15 பேரின் எலும்புக் கூடுகளையே மீட்கக் கூடியதாக இருந்தது.

தற்பொழுது எம்பிலிப்பிட்டிய, செம்மணி மனிதப் புதைகுழிகள் மறக்கப்பட்டு விட்டன. மாத்தளை மனிதப் புதைகுழி ஐ.நா. உட்பட சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

சூரிய கந்த மனிதப் புதைகுழிகள் குறித்து விசாரணை நடத்த அன்று சந்திரிக்கா உண்மை கண்டறியும் விசாரணைக் குழு ஒன்றை நியமித்தார். எதிர்பார்த்த நீதி கிடைக்கவில்லை. அதேபோன்ற நிலைமை மாத்தளை மனிதப் படுகொலை விசாரணைக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று தென்னிலங்கை மக்கள் எதிர்பார்ப்பது எந்த வகையிலும் நிராகரிக்கத் தக்க ஒன்றல்ல.

ஜே.வி.பி. கிளர்ச்சிக்குப் பின்னரான காலத்தில், இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தவர். ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் காணாமற் போனோரின் படங்களுடன் ஜெனிவா செல்ல முற்பட்ட போது விமான நிலையத்தில் பிடிபட்டவர். ஆகவே மனித உரிமைகளின் பெறுமானங்களை வெளிக்காட்டும் விதத்தில் மாத்தளை மனிதப் புதைகுழி விடயத்திலாவது அவர் செயற்படுவாரா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற போரின்போது பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொலையுண்டமை – கொலை செய்யப்பட்டமை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்றுச் செயற்படுத்தத் தயங்கித் தவழும் இன்றைய அரசு தென்னிலங்கைப் புதைகுழி விவகாரத்தையும் அமுக்கி விடுமா?

காலம் கடந்த கோலங்கள் அவையென்று குழிதோண்டிப் புதைக்குமா? அத்தகைய ஒரு கட்டத்தில் தெற்கு மக்கள் பொறுத்திருப்பார்களா? இதற்கும் காலம் தான் பதில் சொல்லுமா? அதற்கும் காத்திருக்க வேண்டுமா...?

# ஊழியர் சேமலாப நிதியை செலுத்தாத நிறுவனங்கள் சிக்கின

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில தொழில் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவை செலுத்தாமல் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் கடந்த பெப்ரவரி மாதத்தில் மட்டும் இவ்வாறு செலுத்தப்படாத ஊழியர் சேமலாப நிதித் தொகையாக 24.6 மில்லியன் ரூபா நிதி திடீர் சோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தொகை தொழில் திணைக்களத்தால் அறவிடப்படவுள்ளது என்று வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கேசுகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழில் திணைக்களத்தின் தொழில் பரிசோதகர்களால், தொழில் நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது சில தொழில் நிறுவனங்கள் பணியாளர்களுக்கான சேமலாப நிதியைச் சீராகச் செலுத்தத் தவறியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவைச் செலுத்தாத நிறுவனங்களில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய சபையும் அடங்கியுள்ளது. பணியாளர்களுக்காக செலுத்தத் தவறிய 24.6 மில்லியன் ரூபா நிதியைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து அறவீடு செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை–கிளிநொச்சியில் இரண்டு இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், வவுனியாவில் 8 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவும் தொழில் நிறுவனங்களால் செலுத்தப்படாமல் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இதனை அறவிடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன– என்றார். (து-17)

## திறக்கப்படாத நிலையில் மருத்துவமனைக் கட்டடம்

கொழும்பு,ஏப். 3

கொழும்பு தேசிய வைத்தியசாலை வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தொடர்மாடி மருத்துவமனைக் கட்டடத்தின் பணிகள் முடிவடைந்து 16 மாதங்கள் கடந்துள்ள போதிலும் அது இன்னமும் திறந்து வைக்கப்படாத நிலையிலேயே உள்ளது.

பத்து மாடிகளைக் கொண்ட இந்த மருத்துவமனைக் கட்டடத்தில் ஒன்பது நோயாளர் விடுதிகள் உள்ளன. இந்த விடுதிகளில் 300 கட்டில்கள் காணப்படுகின்றன. அவசர சிகிச்சைப் பிரிவொன்றும் அங்குள்ளது. மேலும் நவீன உபகரணங்கள், சாதனங்களுடன் தொழில் நுட்ப வசதிகளையும் அது கொண்டுள்ளது. தொற்று நோயாளர்களை அனுமதிப்பதற்கான விடுதி வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலைக் கட்டடம் இவ்வாறு மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

ஆனால் ஆயிரக்கணக்கிலான நோயாளர்கள் கட்டில்கள் இல்லாமை காரணமாகப் பாய்களின் மீது அல்லது வாங்குகளின் மீது தங்கியிருந்து சிகிச்சைகளைப் பெற வேண்டிய நிலையில் உள்ளனர். பணம் செலவழிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய வைத்தியசாலைக் கட்டடத் தொடர் இவ்விதம் திறந்து வைக்கப்பட்டமை தொடர்பாக பிரதிச் சுகாதார அமைச்சரான லலித் திஸாநாயக்காவிடம் கேட்டபோது, விடுதிகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களைப் போதிய அளவில் பெற முடியாத நிலை ஏற்பட்டமையே இந்தக் கட்டடத்தைத் திறந்து வைப்பதில் தாமதம் ஏற்பட்டமைக்கான காரணம் எனத் தெரிவித்தார். அடுத்த மாதம் அல்லது அதற்குப் பின்னர் வைத்தியசாலைக் கட்டடம் திறந்து வைக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அது எவ்வாறு இருந்த போதிலும் இந்த வைத்திய சிகிச்சைக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ள பிரமுகர்களிடமிருந்து அதற்கு உசிதமான திகதியொன்று கிடைக்காததால் இந்தக் கட்டடம் இன்னமும் திறந்துவைக்கப்படாத நிலையில் காணப்படுவதாகத் தமது பெயரை வெளிப்படுத்த விரும்பாத சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார். (த-22)

## இ.போ.ச. ஊழியர்களுக்கு வங்கிக்கடன் அதிகரிப்பு

**ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 20 ஆயிரம் ரூபா கொண்ட வங்கிக் கடன் 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.**

கொழும்பு,ஏப்.3

தமிழ்-சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 20 ஆயிரம் ரூபா கொண்ட வங்கிக் கடன் 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் பணிப்புரைக்கு அமைவாக இந்தக் கடன் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் வசதியை வழங்குவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லையென அகில இலங்கை போக்குவரத்துச் சேவைகள் சங்கம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டை சபை முற்றாக நிராகரித்துள்ளது. (த-22)

# அலுவலகப் பணியாளர் பதவியுயர்வுக்கு முன்னைய நடைமுறையை பின்பற்றுக

### அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை,ஏப்.3

"அலுவலகப் பணியாளர் சேவை சார்ந்த ஊழியர்கள் வகுப்பு மூன்றிலிருந்து,வகுப்பு இரண்டுக்குப் பதவியேற்றம்பெற பத்து வருட சேவைக் காலம் கோரப்பட்டுள்ளமை திருத்தம் செய்யப்பட்டு, வழமையாகக் கோரப்படும் ஆறுவருட சேவைக் காலமே நடைமுறைப்படுத்தப்பட ஆவன செய்யவேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரசு பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி. ஜே.செனவிரத்ன மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்குச் சங்கம் அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றிலேயே மேற்படி கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவரும் பிரபல தொழிற்சங்க வாதியுமான எஸ்.லோகநாதன் இந்த மனுவை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அலுவலகப் பணியாளர்கள் சேவை சார்ந்த ஊழியர்களுக்குரிய சேவைப் பிரமாணம் தொடர்பாக வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி இலக்கம் 1777/35இல் திருத்தம் செய்யப்படல் வேண்டுமென்பதைத் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

இது தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி இலக்கம் 1258/20லிருப்பதை விடவும் 1777/35இல் ஊழியர்களுக்குக் கூடுதலான பாதிப்பேயுள்ளது.

அதாவது குறித்த சேவைப் பிரமாணம் தொடர்பில் அலுவலகப் பணியாளர் சேவை சார்ந்த ஊழியர்கள் வகுப்பு III லிருந்து வகுப்பு II க்குப் பதவியேற்றம்பெற தற்சமயம் பத்துவருட சேவைக் காலம் கோரப்பட்டுள்ளது.

எனவே அரச வர்த்தமானி இல. 1258/20இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு வருட சேவைக்காலமே இதற்கென அமுல்படுத்தப்படுவதுடன் அரச வர்த்தமானி இல.1777/35இல் பத்து வருடமெனக் கோரப்பட்டிருப்பது நீக்கப்படல்வேண்டும்.

அதேபோல்,மொழிப் பாடநெறிப் பரீட்சையில் தேர்ச்சியைப் பெறத் தவறும் அலுவலர்களின் சம்பள ஏற்றங்கள் நிறுத்தப்படுமென இதில் குறிப்பிடப்பட்டுள்ளமை திருத்தம் செய்யப்படல் வேண்டும். அல்லது நீக்கப்படல் வேண்டும்.

குறித்த பகுதியில் மொழித் தேர்ச்சியில் சித்தியடைவது பதவி உயர்வு தொடர்பில் மேலதிக தகைமையாகக் கருதப்படுமென குறிப்பிடப்பட்டிருப்பதை வரவேற்கின்றோம்.

1777/35இன் 9.9-10.3 பகுதியில் 'நிரந்தர மாக்குதல்' என்ற இடத்தில் ''பதவியில் உறுதிப்படுத்தல்'' எனக் குறிப்பிடப்படுவது தாபன விதிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல என்பதால் திருத்தம் செய்யப்படவும் வேண்டும்.

12.2பகுதியில் குறிப்பு என்பதில் திணைக்களத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் சில சமயங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை அவதானித்துள்ளோம்.

ஆகவே, வகுப்பு I இக்குரிய தேவைகளிலிருந்தும் சில திணைக்களத் தலைவர்கள் வகுப்பு I இக்கு குறிப்பிடுகின்ற கடமைகளில் ஒன்றைக் கூட வழங்காமல் ஊழியர்களைத் தொடர்ந்தும் வகுப்பு II இக்குரிய கடமைகளைச் செய்யப் பணிப்பது நேரில் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த பகுதியில் வகுப்பு I இக்குரிய தேவையிருப்பின் (வகுப்பு I குறிப்பிடுகின்ற கடமைகள்), அலுவலகத்தில் காணப்படின் திணைக்களத் தலைவர்கள் ஊழியர்களுக்குக் கட்டாயம் வழங்க வேண்டும். இல்லாத பட்சத்தில் மட்டும் வகுப்பு II இக்குரிய கடமைகள் வழங்கப்படல் வேண்டுமெனத் தெளிவுபடுத்தப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-30)

# தமிழீழம் கிடைக்கும்வரை போராட்டங்கள் தொடரும்

## தமிழக மாணவர்கள் சூளுரை

சென்னை, ஏப்.3

தனித் தமிழீழம் கிடைக்கும்வரை தமது போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளனர் தமிழகத்தில் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள கல்லூரி மாணவர்கள்.

ஈழத் தமிழர் ஆதரவு போராட்டங்களை அடுத்து மூடப்பட்டிருந்த கல்லூரிகள் இன்று மீண்டும் திறக்கப்படவுள்ளன. இந்தநிலையில் நேற்றும் இலங்கை இனப்படுகொலையைக் கண்டித்தும் மத்திய அரசுக்கு எதிராகவும் தமிழகத்தின் பல பகுதிகளில் மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் பகுதியில் அனைத்துக் கல்லூரி மாணவர்கள் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தினர். திருவாரூரில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், அஞ்சல் அலுவலகத்தை முற்றுகையிட முயற்சி செய்தனர். இதனால் காவல் துறையினருக்கும் மாணவர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

கல்லூரிகளைத் திறந்தாலும், இலங்கையில் தமிழீழம் மலரும் வரை எமது போராட்டம் தொடரும். தமிழர் படுகொலை குறித்த கண்காட்சி, கருத்தரங்குகளை நடத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம் - என்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.(ற)

# இந்தியாவை விட்டு வெளியேற இத்தாலித் தூதருக்கு அனுமதி

புதுடில்லி, ஏப்.3

இந்தியாவுக்கான இத்தாலி தூதர் டேனியல் மன்சினி, இந்தியாவை விட்டு வெளியே செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையை உச்ச நீதிமன்றம் நீக்கியுள்ளது. இது தொடர்பான வழக்கு நேற்று உச்சநீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. அதன்போதே இந்த அனுமதியை உயர்நீதிமன்றம் வழங்கியது.

இத்தாலிக் கடற்படை வீரர்கள் தொடர்பாக இத்தாலி தூதர் உச்சநீதிமன்றத்தில் அளித்த வாக்குறுதிகளை மீறியதாலேயே அவர் இந்தியாவை விட்டு வெளியேற கூடாது என்று உச்ச நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இது தொடர்பான வழக்கு தனி நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்திய கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் இருவரை சுட்டுக்கொன்றது தொடர்பான வழக்கில், இத்தாலி கடற்படை ஊழியர்கள் மஸிமிலானோ லட்டோர் மற்றும் சல்வட்டோர் கிரோன் ஆகியோர் கடந்த ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# தேர்தல் வேண்டாம்

## ஈழத் தமிழருக்காகப் புறக்கணிப்போம் கட்சிகளை அழைக்கிறார் விஜயகாந்த்



சென்னை, ஏப்.3

ஈழத் தமிழர்களுக்காக 2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை அனைத்துக் கட்சிகளும் புறக்கணிக்க வேண்டும் என்று கோரியுள்ளார் தே.மு.தி. கட்சித் தலைவர் விஜயகாந்த்.

நேற்று நடைபெற்ற தே.மு.தி.கட்சியின் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

''ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய மத்திய அரசைவலியுறுத்தும்வகையில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை அனைத்துக் கட்சிகளும் புறக்கணிக்க வேண்டும். நாம் 2009ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நடைபெற்றபோது ஈழத் தமிழர்களுக்காக அதைப் புறக்கணிக்குமாறு கோரினோம். அன்று நாம் அனைவரும் அந்தத் தேர்தலைப் புறக்கணித்திருந்தால் இலங்கையில் தமிழர்கள் இறந்திருக்க மாட்டார்கள்.

2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலை புறக்கணிக்கதே.மு.தி.க. முடிவெடுத்துள்ளது. அனைத்துக் கட்சிகளும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். மீனவர் பிரச்சினைக்குக் கடிதங்கள் எழுதினால் மட்டும் போதாது. தீர்வு பெறப்பட வேண்டும்''- என்று தெரிவித்தார். (ற)

# விலை உயர்வுக்கு காரணம் மத்திய அரசே

## – ஜெயலலிதா

சென்னை, ஏப்.3

மத்திய அரசின் தவறான கொள்கைகளே தற்போதைய விலைவாசி உயர்வுக்கு காரணம் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

விலைவாசி உயர்வு குறித்துச் சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்ட சிறப்பு கவனவீர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்துப் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட விவசாயத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்படும் நிலையில், இந்தியாவில் அதற்கு முற்றிலும் மாறான கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

பெற்றோலியப் பொருள்களின் விலை நிர்ணயக் கொள்கையில் மாற்றம் கொண்டு வந்தால் மட்டுமே விலைவாசி உயர்வை ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்றும் ஜெயலலிதா அதன்போது தெரிவித்தார். (ற)

# தமிழக மீனவர் நலன்காக்க கச்சதீவை மீட்க வேண்டும்

திருவண்ணாமலை, ஏப். 3

தமிழக மீனவர்களில் நலன்காக்க கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்க வேண்டும் என்று இந்து தர்ம மாநாட்டில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இந்து தர்ம மாநாடு இந்து ஐக்கிய கூட்டமைப்பின் சார்பில் திருவண்ணாமலையில் நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு வலியுறுத் தப்பட்டுள்ளது.

மாநாட்டின்போது தமிழக மீனவர்கள் நலன் காக்க கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்க வேண்டும், இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் போன்ற பல்வேறு தீர் மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

(ற)

# தென்காசியில் நிலநடுக்கம் மக்கள் அச்சம்

தென்காசி, ஏப். 3

நெல்லை மாவட்டம் பாவூர்சத்திரம் மற்றும் கீழப் பாவூரில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

இருமுறை உணரப்பட்ட நிலநடுக்கத்தால் வீடுகளில் உள்ள பொருள்கள் உருண்டு விழுந்தன.

அதையடுத்து அச்சமடைந்த மக்கள் பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளி யேறி பாதுகாப்பான இடங்க ளில் தஞ்சமடைந்தனர்.

எனினும் நிலநடுக்கதால் எந்தவிதப் பாதிப்புகளும் ஏற் படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# காங்கிரஸை கலைக்குமாறு காந்தியே கூறியிருக்கிறார்

## சட்டசபையில் ஜெயலலிதா

புதுடில்லி, ஏப். 3

சுதந்திரம் அடைந்த பின் னர் காங்கிரஸை கலைக்குமாறு காந்தியே கூறியிருந்தார் என்று தெரிவித்துள்ளார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

தமிழக சட்ட சபையில் உரையாற்றும் போதே ஜெய லலிதா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

''மகாத்மா காந்தி 30.1.1948 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார். மகாத்மா காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு ஒரு நாள் முன்பு, அதாவது 29.1.1948 அன்று காங்கிரஸ் கட்சிக்கான ஒரு வரைவு சட்ட விதிகளை எழுதி அவர் அனுப்பினார்.

அது மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர் 7.2.1948 அன்று அகில இந்திய காங்கிரஸ் குழுவின் பொதுச் செயலாளர் ஆச்சார்யா ஜுகல் கிஷோர் என்பவரால் வெளியிடப்பட்டது.

அதுபற்றிய புத்தகம் 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளியானது. அந்தப் புத்தகத்திற்கு முன்னாள் காங்கிரஸ் கட்சித் தலைவரும், அன்றைய பிரதமருமான இந்திரா காந்தி முன்னுரை எழுதி இருக்கிறார்.

மகாத்மா காந்தி தன் கைப்பட எழுதிய காங்கிரஸ் கட்சிக்கான வரைவு சட்ட திட்ட விதிகளில் அவர் பல காரணங்களுக்காக அகில இந்திய காங்கிரஸ் குழு என்ற இந்த காங்கிரஸ் அமைப்பையே கலைத்துவிடுவது என்று முடிவு செய்கிறது என்று எழுதி இருக்கிறார்.

காங்கிரஸ் கட்சியிலேயே உள்ள பலருக்கு காங்கிரஸ் பற்றிய வரலாறே தெரியாமல், நாம் கூறு வது பொய் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்''- என் றார்.

(ற)


# புதுக்குடியிருப்பு பிரதேசசபை - புதுக்குடியிருப்பு
# கேள்வி அறிவித்தல் - 2013

பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு ஆகிய பொதுச்சந்தைகளிலுள்ள மாட்டிறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | - 04.04.2013 - 18.04.2013 முற்பகல் 12.00 மணிவரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | - 18.04.2013 பிற்பகல் 1.00மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | - 18.04.2013 பிற்பகல் 2.00 மணி |
| ஒப்பந்த காலம் | - 01.05.2013-31.12.2013 வரை |

(1) கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகம் புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் முல்லைத்தீவு எனும் முகவரிக்கு எதிர்வரும் 18.04.2013 பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் புதுக்குடியிருப்பிலுள்ள அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

(3) கேள்விப்பத்திரங்கள் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமைக்காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) உள்ளூராட்சிமன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

(5) கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்..

(6) கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

(7) குத்தகை யாவும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகை எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடாத்தப்படின் உடனடியாக குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதோடு வைப்புப்பணங்கள் எவையும் மீளளிக்கப் படமாட்டாது.

(8) இறைச்சிக்காக மாடுகள் கொல்லப்பட முன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்துகொள்ள வேண்டும்.

(9) புதுக்குடியிருப்பில் கொல்களம் அமைக்கப்படும் வரை ஒட்டுசுட்டான் கொல்களத்தையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(10) ஒட்டுசுட்டான் கொல்களத்தில் அறுக்கப்படும் மாட்டிறைச்சி பொதுச்சுகாதார பரிசோதகரினால் முத்திரை இடப்பட்டு பொதியிடப்படல் வேண்டும். பின் புதுக்குடியிருப்பு பொதுச்சுகாதார பரிசோதகரின் முன்னால் பொதி உடைக்கப்படல் வேண்டும்.

(11) தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் மூன்றிலொரு பகுதியை 25.04.2013ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள வேண்டும்.

| தொ.இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக்கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| | அ. புதுக்குடியிருப்பு உப அலுவலகம் | | | |
| 01 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 30000.00 | 1000000.00 |
| 02 | உடையார்கட்டு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 20000.00 | 600000.00 |

செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, 02.04.2013.



## 50 ஆண்டுகளின் பின்னர்...

யாங்கூன், ஏப்.3

கடந்த 50 ஆண்டுகளில் முதன்முறையாக மியன்மாரில் தனியார் செய்திப் பத்திரிகைகள் வெளியிடப்பட்டன.

மியான்மாரில் இராணுவ ஆட்சி நடைபெற்றபோது அரசுக்குச் சொந்தமான பத்திரிகைகளே வெளியிடப்பட்டன. தனியார் பத்திரிகைகள் வெளியிடுவது தடை செய்யப்பட்டிருந்தது.

தற்போது ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி வரும் இராணுவ ஆட்சியாளர்கள், 2011ஆம் ஆண்டு பதவியேற்றவுடன் பத்திரிகைகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வருகின்றனர்.

அரசின் புதிய ஜனநாயகக் கொள்கைகளின் படி தற்போது தனியார் செய்திப் பத்திரிகைகளை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று மியன்மார் அரசு தெரிவித்துள்ளது. (ற)

சிரிய உள்நாட்டுப் போர்

# கடந்த மாதம் மட்டும் 6 ஆயிரம் பேர் சாவு

நியூயோர்க், ஏப்.3

சிரியாவில் கடந்த மாதம் மட்டும் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் சுமார் 6 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

சிரிய உள்நாட்டுப் போர் ஆரம்பமான இரண்டு ஆண்டுகளில் அதிகளவு உயிரிழப்புகள் கடந்த மாதமே பதிவாகியுள்ளன. கடந்த மாதம் மட்டும் அண்ணளவாக 6,005 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. அதில் 291 பெண்களும், 298 சிறுவர் சிறுமியரும், 1486 கிளர்ச்சியாளர்களும், 1464 அரச படையினரும் உயிரிழந்துள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போர் காரணமாக மொத்தமாக 1,20000 பேர் உயிரிழந்திருக்கக் கூடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உயிரிழப்புக்கள் உள்ளிட்ட சேத விவரங்களை துல்லியமாக வெளியிடுவது நடைமுறைச்சாத்தியமில்லை எனவும் இதனால் அண்ணளவான மதிப்பீடுகளே வெளியிடப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (ற)

# ஒரு கை பார்ப்போம்

## வடகொரியாவின் வெற்றுச் சவால்களுக்கு அஞ்சப் போவதில்லை என்கிறது தென்கொரியா

சியோல், ஏப்.3

''தென்கொரிய மக்களுக்கு எரிச்சலூட்டும் சிறு செயல் நடந்தால் கூட தாக்குதலை ஆரம்பியுங்கள். அதில் அரசியல் பரிசீலனை எதுவும் இருக்காது''- இவ்வாறு உத்தரவிட்டுள்ளார் தென்கொரிய ஜனாதிபதி பாா்க் ஜியூன் ஹை.

இதன் மூலம் மேலிட உத்தரவு எதையும் எதிர்பார்த்துக் காத்திராமல் உடனே தாக்குதலைத் தொடுக்க தென்கொரியா இராணுவத்துக்கு ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டியுள்ளார் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தற்போது எந்தநேரமும் தென்கொரியா மற்றும் வடகொரியா ஆகிய நாடுகளிடையே போர் ஏற்படக் கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. சிலநாள்களுக்கு முன்னர் வடகொரியா, தென்கொரியா மீது போர்ப் பிரகடனம் செய்திருந்தது. அதையடுத்தே தென்கொரிய ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தென்கொரிய முப்படைத் தளபதிகளுடன் அவசர கலந்துரையாடலை நடத்திய பின்னரே ஜியூன் ஹை இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

''வடகொரியாவின் வெற்றுச் சவால்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை. தென்கொரிய இராணுவம் முழுப் பலத்துடன் இருக்கின்றது. தென்கொரிய மக்களுக்கு எரிச்சலூட்டும் சிறு நிகழ்வு நடந்தாலும் தாக்குதலைத் தொடங்குங்கள். தாக்குதல் தொடங்குவது தொடர்பாக எந்தவித அரசியல் பரிசீலனைக்கும் இடமிருக்காது.'' - என்று இராணுவத் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் ஜியூன் ஹை. (ற)



# அவசரமாக கூடியது வடகொரிய நாடாளுமன்றம்

## பிரதமர் பதவி நீக்கம்: புதிய பிரதமர் நியமிப்பு



பியாங்யாங், ஏப்.3

போர் மூண்டால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக வடகொரிய நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் அவரசமாகக் கூடியது.

அதன்போது பிரதமராக இருந்த சோய் யாங்-ரிம் பதவி நீக்கப்பட்டு புதிய பிரதமராக 74 வயதுடைய பாக் பாங்-ஜூ நியமிக்கப்பட்டுள்ளார்.

வடகொரியாவில் பிரதமர் பதவி, நாடாளுமன்றம் ஆகியவை இயங்கி வந்தாலும் ஜனாதிபதி கிம் ஜோங் அனைத்து அதிகாரத்தையும் கொண்டுள்ளார். நாடாளுமன்றம் பெயரவில் தான் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மூடப்பட்ட அணு உலை மீண்டும் திறக்கப்படும்

## அடங்க மறுக்கிறது வடகொரியா



சியோல், ஏப். 3

சர்வதேச அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்துக்கு அமைய 2007ஆம் ஆண்டு மூடப்பட்ட யோங்பியோன் அணுசக்தி வளாகம் மீண்டும் திறக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்.

கொரிய தொழிலாளர் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றும்போதே கிம் ஜோங் உன் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

''அமெரிக்கா வடகொரியாவை ஆயுதப் போட்டிகளில் ஈடுபட வைத்து பொருளாதார வளர்ச்சியில் தடை ஏற்படுத்த நினைக்கிறது. உறுதியான அணு ஆயுத பலத்தை அடிப்படையாகக் கொண்டே அமைதியும் வளர்ச்சியும் அமைய முடியும். அப்போது தான் மக்களிடம் மகிழ்ச்சி இருக்கும். எந்த அளவுக்கு அணு ஆயுதத் திறன் இருக்கிறதோ, அந்த அளவுக்கு எம் மீதான அழுத்தங்களைத் தடுத்து நிறுத்த முடியும். நமது அணு ஆயுத பலம், போர்களை எதிர்க்கும் திறனுடன் இருக்கிறது. அது நமது இறையாண்மையைப்பாதுகாக்கும்.''- என்று தெரிவித்துள்ளார். (ற)

# பாடசாலையில் தீ விபத்து 13 மாணவர்கள் சாவு

## மியன்மாரில் பரிதாபம்



யாங்கூன், ஏப்.3

மியன்மாரின் தலைநகர் யாங்கூனில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 13 மாணவர்கள் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் அனைவரும் புகை காரணமாக ஏற்பட்ட மூச்சுத் திணறலாலேயே உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. விபத்து இடம்பெற்ற பாடசாலை இஸ்லாமியர் ஒருவருக்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது.

சமீப காலமாக மியன்மாரில் இஸ்லாமியருக்கு எதிராக வன்முறைகள் இடம்பெற்று வருவதையடுத்து பாடசாலைக் கட்டடங்களின் கதவுகள் பாதுகாப்புக்காகப் பூட்டப்பட்டிருந்தன. அதனாலேயே தீ விபத்து ஏற்பட்டவுடன் மாணவர்கள் உடனடியாக வெளியேற முடியவில்லை என்றும் கூறப்படுகிறது.

மின்சாரக் கசிவின் காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ற)

# விபத்தில் சிக்கின சீனப் போர் விமானங்கள்

## 2 பேர் சாவு

பீஜிங், ஏப்.3

சீனாவில் இடம்பெற்ற விமான விபத்தில் இரு விமானிகள் உயிரிழந்துள்ளனர். சீன இராணுவத்துக்குச் சொந்தமான சூ-27 வகை ஜெட் விமானங்களே விபத்துக்குள்ளாகியுள்ளன.

சீனாவின் கிழக்குப் பகுதி ஷாண்டோங் மாகாணத்தில் போர் விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சீனாவின் மக்கள் விடுதலை இராணுவ அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

ரஷ்யாவிடமிருந்து 1992 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இந்த வகையான 40 ஜெட் போர் விமானங்களை சீனா வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்; பொலிஸார் உட்பட 8 பேர் சாவு

பாக்தாத், ஏப்.3

ஈராக்கில் திக்ரித் நகரில் பொலிஸ் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்துள்ளனர்.

வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட லொறி மூலமே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பொலிஸார் என்று தெரியவருகின்றது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

எனினும் அல் குவைதா பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய சன்னி பிரிவினரே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று தெரிவித்துள்ள பொலிஸார், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

ஈராக்கில் 12 மாகாணங்களுக்கான தேர்தல் எதிர் வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதியான சதாம் ஹூசைனின் சொந்த இடமான திக்ரித் நகரிலே அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# இரட்டைக் கோபுரத் தாக்குதல்: இடிபாடுகளில் மீண்டும் ஆய்வு

நியூயோர்க், ஏப்.3

உலக வர்த்தக மைய இடிபாடுகள் மீண்டும் ஆய்வு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் உலக வர்த்தக மையம் தீவிரவாதத் தாக்குதலில் தரை மட்டமானது.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக 60 லொறிகள் அளவு இடிபாடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த இடிபாடுகளில் மனித உடல் எச்சங்கள் தேடப்பட்டு, அதில் டி.என்.ஏ. ஆராய்ச்சிகள் நடைபெற உள்ளன என்று கூறப்படுகிறது.

அந்தத் தாக்குதலில் 2, 750 பேர் உயிரிழந்த போதும் 1,634 பேரின் உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# தென்னிலங்கை வியாபாரிகளால் வர்த்தக நடவடிக்கை பாதிப்பு

## வன்னியில் பரவலாகக் குற்றச்சாட்டு

ஒட்டுசுட்டான், ஏப். 3

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வன்னிப் பகுதிகளுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த வியாபாரிகள் படையெடுத்துள்ளனர். இதனால் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக வன்னிப் பகுதி வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வாகனங்களில் பொருந்தொகையான பொருள்களை ஏற்றி வரும் தென்னிலங்கை வியாபாரிகள் முக்கியமான இடங்களில் வீதியோரங்களில் தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அது மட்டுமல்லாமல் வீடு வீடாகச் சென்றும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் தமது வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது என நிரந்தரக் கடைகளை வைத்திருக்கும் வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். வங்கிகளில் கடன் பெற்று தமது வாழ்வாதாரத்துக்காக கடைகளை நடத்தி வரும் நிலையில், தென்னிலங்கை வியாபாரிகளின் பொறுப்பற்ற செயற்பாட்டால் தாம் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வாறான சட்டபூர்வமற்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்த முயற்சியும் மேற்கொள்வதில்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனைவிட குடும்ப வறுமையைக் காரணம் காட்டி சிலர் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாகவும், அவர்கள் வீடு வீடாகச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்யுமாறு வற்புறுத்துவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மருத்துவச் சான்றுகளைக் கொண்டு சென்று உதவி கோருவோரும் அதிகரித்துள்ளதாக வன்னிப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவை இவ்வாறு இருக்க தென்னிலங்கையில் இருந்து வரும் இரும்பு வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று இரும்பு உள்ளதா எனக் கேட்டு அடாத்தாக வீட்டு வளவுக்குள் உட்பிரவேசித்து இரும்பு சேகரிப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

வாகனங்களில் வரும் இவர்கள் வீட்டார் இரும்பு இல்லை என்றாலும் கேட்காது தாமாகவே சேகரித்து நிறுத்திவிட்டு கிலோ ஒன்றுக்கு 50 ரூபா வீதம் பணத்தை கொடுத்துச் சென்று விடுகின்றனர்.

இதன்போது வீட்டில் காணப்படும் பெறுமதியான இரும்புப் பொருள்களையும் இவர்கள் சூட்சுமமாக எடுத்துச் செல்வதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளின் போது திருட்டுச் சம்பவங்களும் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-500)

## தேங்காயின் விலை அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஏப்.3

முல்லைத்தீவில் தேங்காயின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

பெரிய தேங்காய் ஒன்றின் விலை 55 ரூபாவில் இருந்து 60 ரூபா வரையும் சிறிய தேங்காய் ஒன்றின் விலை 35 ரூபாவிலிருந்து 40 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

போரினால் பெருமளவிலான தென்னைகள் அழிவடைந்ததினால் தேங்காய்க்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் நாள்களில் மேலும் தேங்காயின் விலை அதிகரிக்கக்கூடும் என்று நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர். (எ-500)

## மன்னாரில் காட்டு மரங்களை வெட்டியவர்கள் சிக்கினர்

மன்னார், ஏப்.3

மன்னார் காட்டுப் பகுதியில் முதிரை மரங்களை வெட்டியவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் முதிரை மரங்களை வெட்டிய 6 பேரை விடத்தல் தீவு பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கைது செய்துள்ளதாக விடத்தல்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலக்க தெரிவித்தார்.

விடத்தல் தீவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான முதிரை மரங்களையும் கத்தி, கோடரி உள்ளிட்ட சில உபகரணங்களையும் மீட்டுள்ளனர். (கு-12)



கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இயங்கிவரும் ஐ.எஸ்.ஈ.டி. நிறுவனத்தின் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களால் முத்துஐயன் கட்டு அன்பு சிறுவர் இல்லத்தில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. தொழிற்பயிற்சி நிறுவன இயக்குநர் தலைமையில் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற அன்பு சிறுவர் இல்ல மைதானம், இந்தச் சிரமதானப் பணியின்போது சுற்றுச்சூழல் துப்புரவு செய்யப்பட்டன. இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் உட்பட 70 மாணவர்களுடன் ஒட்டுசுட்டான் பொலிஸாரும் கலந்து கொண்டனர். (கு-500)

## வருடாந்த உற்சவம்

வவுனியா வைரவபுளியங்குளம் ஸ்ரீ ஆதி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர் திருவிழா இடம்பெறவுள்ளது. திருவிழா நாள்களில் தினமும் மகேஸ்வர பூசையும், வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத் தினர் அறிவித்துள்ளனர். (ஐ-402)



# தேசிய அடையாள அட்டை பெறும் 'ஒருநாள்' சேவையில் நெருக்கடி

கொழும்பு,ஏப்.3

இந்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சுமார் 600 மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவது தொடர்பாக ஒருநாள் சேவையில் தம்மை முன்னிறுத்திக் கொண்டனர்.

அதனால் கடந்த 29 ஆம் திகதி சேவையை வழங்குவதில் கடும் நெருக்கடி நிலை ஏற் பட்டது என்று ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் சரத் குமார தெரிவித்தார்.

உயர்தர மாணவர்களின் அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களை ஏற்கும் இறுதி நாள் கடந்த 29 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டது.

இறுதி நாளில் அடையாள அட்டையைப் பெற அனைத்து மாணவர்களும் ஒரே தடவையில் வருகை தந்திருந்தனர் என்று அவர் கூறினார்.

ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் வந்திருந்த இந்த மாணவர்கள் அனை வருமே ஒரு நாள் சேவையில் அடையாள அட்டைகளைக் கோரி நின்றனர்.


அதனால் ஏனைய பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் பெரும் தடங்கல்கள் ஏற்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

16 வயது நிறைவடைந்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இந்த மாணவர்கள் இதுவரை தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப் பித்திருக்காமை குற்றமான செயலாகும் என்று அவர் கூறினார்.

உயர்தர மாணவர்களின் அடையாள அட்டை விண்ணப் பங்களை பாடசாலை அதி பர்கள் மூலமாக அனுப்பி வைக்குமாறு பல மாதங்களுக்கு முன்னர் அறிவுறுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட் சைக்குத் தோற்றவுள்ள 16 வயது நிறைவடைந்த மாண வர்களின் அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அனுப்பி வைத்தால் நெருக்கடி நிலைகளை தவிர்த்துக் கொள்ளமுடியும் என்று ஆள்பதிவுத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (ச-22)



காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயற்பாட்டு மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பத்தரமுல்லையிலுள்ள அமைச்சுக் கட்டடத்தில் நடைபெற்றபோது...

# பழைய காணி சட்டங்களை திருத்தி புதிய வரைவை நடைமுறைப்படுத்துக

## காணி அமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஏப்.3

காணிகள் தொடர்பான பழைமையான சட்ட திட்டங்கள் இல்லாதொழிக்கப் பட்டு காலத்துக்குப் பொருத்தமான சட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காணி அமைச்சர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயற்பாட்டு மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பத்தரமுல்லையிலுள்ள அமைச்சுக் கட்டடத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்வேறு காரணங்களுக்காக மக்களிடமிருந்து பெறப்பட்ட காணிகளுக்கான நட்டஈட்டை வழங்கும் செயற்பாடுகளை விரைவு படுத்த வேண்டும்.

காணி தொடர்பான சட்டங்கள் மிகவும் பழைமை வாய்ந்தவை. 1945 ஆம் ஆண்டு காலங்களில் அப்போதைய ஆட்சியாளர்கள் அன்றைய கால கட்டத்துக் கேற்பத் தயாரித்த சட்டங்களே தற்போதும் நடைமுறையிலுள்ளன. அவை காலத்துக்குப் பொருத்தமில்லாதவை. அதனால் பெருமளவிலான காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமலுள்ளன.

அந்தக் காலத்தில் ஒருவருக்குக் காணி உறுதிப்பத்திரம் வழங்குகையில் அவர் திருமணம் முடித்தவரா என்பதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. அதனால் அப்போது 13,14 வயதுகள் நிரம்பியோரும் காணிகளுக்காக திருமணம் செய்து கொள்வர். முறைப்படி பதிவு செய்யப்படாத அந்தத் திருமணங்களால் பின்னர் பொலிஸ் வழக்கு என பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ளவும் நேர்ந்தது.

அதனால் சமூகத்துக்கு ஒவ்வாத காணிச் சட்டங்கள் இல்லாதொழிக்கப் பட்டு அதற்குப் பதிலாக காலத்துக்குப் பொருத்தமான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இத்தகைய பிரச்சினைகள் மகாவலி வலய பிரதேசங்களிலும் நிலவுகின்றன.-என்றார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு ,கிழக்கு உட்பட பல்வேறு பகுதிகளிலும் காணி திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அத்துடன் காணிகளை அளப்பதில் நிலவும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு போதிய நில அளவையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, புதிதாக நியமனம் பெறும் பட்டதாரிகளை அதற்கு நியமித்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கி உரிய நியமனங்களை வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ளோர் மற்றும் நாட்டின் பல பிரதேசங்களில் அரச காணிகளைக் குத்தகைக்குப் பெற்று பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் அதனை பெருந்தொகைக்கு விற்று மோசடிகளில் ஈடுபடுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ச)

# வழக்குப் போடுவோம்; மின்கட்டணம் அதிகரித்தால்

## ஐ.தே.க எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.3

இலங்கையில் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டால் வழக்குத் தொடரப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

மக்கள் கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் இந்தத் தருணத்தில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது பொருத்தமற்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள யோசனைத் திட்டத்துக்குஅமைய சாதாரண பொதுமக்கள் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான கட்டணம் 125 முதல் 150 வீதம் வரை உயர்த்தப் படவுள்ளது என்று அவர் கூறினார்.

இவ்வாறான கட்டண உயர்வு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது தொடர்பில் முன்வைக் கப்பட்டுள்ள திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த அளவுக்கு மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை என்று அவர் கூறினார். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25.12.1949
மறைவு: 15.03.2012
திதி: பூர்வபட்ச அட்டமி

அமரர்
இராசரத்தினம்
அரசநாயகம்

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை நம் துயரம் நீங்காத உங்கள் நினைவுகள் எம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கின்றன அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியை எமது இல்லத்தில் இன்று (03.04.2013) புதன்கிழமை நடைபெறுகின்றது. என்பதை அறியத்தருகின்றோம்.

இ.இலங்கநாயகம்,
இல.49, வளாக வீதி,
திருநெல்வேலி. (35533)(5.6.7)

சகோதர குடும்பத்தினர்
தகவல்: இ.இலங்கநாயகம்.

**ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!**

* நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வறட்சி, சருமவியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, முட்டு வலி. முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
* இந்நோய்களுக்குப் பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
* இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

**ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!**

* எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆஸவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப் வகைகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
* மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீலி பேதிக் குளிசைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையிற் பெற்றுக் கொள்ளலாம்.

**சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!**

இளைமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற பாவியுங்கள் "சிதாரா முடக் கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகில்) தொலைபேசி: 021 222 2567

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் பஸ் டிப்போவிற்கு முன்னால் கோகுலம் வீதியில் நான்கு (4) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 205 5784, 077 542 7099
(35575)(6.7.11)

**தேவை**

புடைவை விற்பனையில் அனுபவம் உள்ள ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை.
அபிஷா ரெக்ஸ்,
இல.9, நவீன சந்தை, சாவகச்சேரி.
(c/9239)(6.7.11)

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி, பழங்கிணற்றடி பிள்ளையார் கோயில் வீதியில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 497 7019
(35577)(6.7.11)

**வேலையாள்கள் தேவை**

சோடாப் போத்தல்களை வாகனங்களில் ஏற்றி, இறக்குவதற்கு வேலையாள்கள் தேவை.
தொ.பே.இல: 021 222 5595,
077 210 5286
(35570)(6.7.11)

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
15.10.1931
இறப்பு
26.03.2011

அமரர் கனகசபாபதி புஸ்பராசமணி

திதி:-அட்டமி

சிரித்த முகத்துடனே வென் சொல்லறியாத
எம் அன்புத் தாயே! ஈரவிழிகளில் கண்ணீர் சுமந்து
ஆண்டிரண்டு ஆனதுவோ தாங்க முடியுமோ!
தலை விதி இதுவென ஏங்கிட வைத்தாயோ! அம்மா!

மயிலு வீதி,
ஆறுகால் மடம். (35565) (6.7.11)

குடும்பத்தினர்.

நன்மைக்கு ஈத் யர் நிம அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (அளவெட்டி)

அருணோதயாவின்

இன்னிசை மாலை - 2013

தென்னிந்திய
திரைப்பட பாடகர்
மதுபாலகிருஷ்ணன்

மதுபாலகிருஷ்ணனின் அபூர்வ ராகங்கள்

Airtel ஜூனியர் சுப்பர் சிங்கர் ஸ்ரீநிஷா

Airtel ஜூனியர் சுப்பர் சிங்கர் பிரியங்கா

Airtel ஜூனியர் சுப்பர் சிங்கர் சுகன்யா

T.M.S இன் குரலில் பாடகர் S. கஜன்

பிரவேசம் 1000/=



இடம்:- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். காலம்:- 07.04.2013

நேரம்:- பிற்பகல் 3.00 மணி / மண்டபம் திறக்கும் நேரம்:- பிற்பகல் 2.00 மணி

தொடர்புகளுக்கு: 077-8449739, 077-0871996

E-mail : arunodayaalaveddy_osasl@yahoo.com

Website : www.arunodayacollege.com

(C8046)(0.6.7)

(இந்த நிகழ்ச்சியில் வரும் நிதி கல்லூரியின் அத்தியாவசிய அபிவிருத்தி தேவைகளுக்கு பயன்படுத்தப்படும்)

விளம்பர அனுசரணை: உதயன்

## இலங்கையில் கட்டாக்காலி நாய்கள் 60 வீதம்

கொழும்பு,ஏப்.3

இலங்கையிலுள்ள 31 லட்சம் நாய்களுள் 60 வீதமானவை கட்டாக்காலி நாய்கள் என தகவல் வெளியாகியுள்ளது என்று கால்நடை வைத்தியப் பணிப்பாளர் எம். ஹரிச்சந்திர தெரிவித்தார்.

இலங்கையில் 31 லட்சம் நாய்கள் இருந்தபோதும் 12 லட்சம் நாய்களுக்கு மட்டுமே தடுப்பூசி வழங்கப்படுகிறது. 19 லட்சம் நாய்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவில்லை. கட்டாக்காலி நாய்கள் கடிப்பதால் தடுப்பூசிக்கு வருடாந்தம் 30,000 ரூபா வரை செலவாகிறது.

கட்டாக்காலி நாய்களால் கடியுண்டால் 3 மணித்தியாலத்துக்குள் அதற்கான தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டியது அவசியம்.(ச)

# வடக்கில் தேர்தல் எப்படி இருக்கும்? இலட்சணம் தெரிந்தது கிளிநொச்சியில்

### ஜெனிவா உறுதிமொழி ஒரு வாரத்தில் மீறப்பட்டு விட்டது என்கிறது ஐ.தே.க.

அரசு வடமாகாண சபைத் தேர்தலை நடத்தப்போகும் இலட்சணம் கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பின் மீதான தாக்குதலில் இருந்து வெளிப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

அதேபோன்று சர்வதேச நாடுகளுக்கும் ஐ.நாவுக்கும் கடந்த வாரத்தில் ஜெனிவாவில் வைத்து அளித்த உறுதி மொழியை அரசு ஒரு வாரம் கடப்பதற்குள் மீறியுள்ளது. இதனால் பெரும் நெருக்கடிகள் சர்வதேச ரீதியில் நாட்டுக்கு எதிராக ஏற்படுவதோடு தலைக்குனிவும் ஏற்படப் போகின்றது என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது சனிக்கிழமை கிளிநொச்சியில் வைத்து தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதன் பின்னணியில் இராணுவப் புலனாய்வு பிரிவினரே உள்ளனர். இவ்வாறான குழுக்களை அரசு அனுப்பி எதிர்க்கட்சிகளின் தேர்தல் நடவடிக்கைகளை சீர்குலைத்து வருகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட தெல்லிப்பழை கூட்டத்திலும் இவ்வாறான குழுவே ஊடுருவித் தாக்குதல்களை நடத்தியது.

எனவே இதன் பின்னணியில் அரசும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுமே உள்ளன. இவ்வாறான தாக்குதல்கள் மூலம் வடமாகாண சபை தேர்தலையும் ஏனைய தேர்தல்களையும் அரசு எப்படி நடத்தப் போகின்றது என்பது வெளிப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட ஏனைய எதிர்க்கட்சிகளை சுதந்திரமாக தேர்தல்களில்செயற்பட விடாது அடக்கு முறையை பிரயோகிக்கும் நிலையே உறுதிப்படுத்தப்படுகிறது.

சர்வதேசம் இலங்கை தொடர்பில் மிகவும் அவதானத்துடன் செயற்படுகையில் இவ்வாறான தாக்குதல்கள் பெரும் நெருக்கடிகளையே தோற்றுவிக்கும். எவ்வாறாயினும் தேர்தல்கள் நடத்துவதற்கு முன்னர் 17 ஆவது திருத்தச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். சுயாதீன பொலிஸ் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உட்பட சுயாதீன நிறுவனங்கள் இல்லாததொரு சந்தர்ப்பத்தில் தேர்தலின் பின்னரான முடிவுகள் உண்மையான மக்கள் ஆணையை ஒரு போதும் வெளிப்படுத்தப் போவதில்லை.- என்றார் கிரியெல்ல. (ஒ)

## அறிவித்தல்

*இனிய வாழ்வு இல்லம்*
*தேவிபுரம், புதுக்குடியிருப்பு.*

*புதிய பயனாளிகளை இணைத்துக்கொள்ளல்*

இனிய வாழ்வு இல்லம் கட்புலன் செவிப்புலன் பேச்சுத்திறன் குன்றிய மாற்றுத்திறன் கொண்ட பிள்ளைகளுக்கு பணியாற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் தன்னார்வத்தொண்டு நிறுவனம் ஆகும்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், நலன்விரும்பிகள் மற்றும் தன்னார் வத்தொண்டு நிறுவனங்கள் ஆகியோரின் உதவி, ஒத்துழைப்பு, வழிகாட்டல் மூலமாக நிறைந்த ஆளணி, பௌதீக வளங்கள், கற்றல், கற்பித்தல் மற்றும் வாண்மை விருத்திக்கான உள்ளீடுகளைப்பெற்று கட்புலன், செவிப்புலன் பாதிக்கப்பட்டமையால் உடல் உளம் சார்ந்த சவால்களுக்கு முகம் கொடுக்கும் பிள்ளை களின் ஆற்றல்களை மேம்படுத்தி அவர்களை வாழ்வில் ஒளி மயமான எதிர் காலத்திற்கு சரியான பாதையில் இட்டுச்செல்லுதலே எமது பணி.

இந்நிறுவனத்தில் புதிதாக பயனாளிகளை இணைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 5-21 வயதிற்கு இடைப்பட்ட மேற்படி குறைபாடுகள் உள்ள ஆண் பெண் பிள்ளைகள் இருபாலாரும் இணைந்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது கீழ்வரும் தொலைபேசி எண்கள் மூலமாக தொடர்பு கொண்டோ பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு
021-3200333
0718247046, 0775413058

ச.திருச்செல்வம்
முகாமையாளர்.

### சொர்க்கத்தின் வாயிலது திறந்தே இருக்கிறது

உடலால்த்தான் ஊனமுற்றோம்
உள்ளத்தால் நாம் உயர்ந்துள்ளோம்
உள்ளத்திலே உறுதி கொண்டோம்
ஊனம் ஒரு பொருட்டல்ல - மாற்றுத்திறன் பெற்றோம்.
வலுவில்லை என்று நாம் கலங்குவதேயில்லை
மாற்று வலுப்பெற்று இனிமையுடன் வாழ்கின்றோம் - இல்லமதில்.
வேதனையின் விளிம்பினிலே
விரக்தியுடன் வாழுகின்ற மாற்றுத்திறனாளிகளே!
திறமைகளை வளர்த்திடவே - வாருங்கள்
உறுதுணையாய் இருக்கிறது - இனியவாழ்வு இல்லமது.
மாற்றுத்திறனாளிகளே!
அன்புக்கும் பண்புக்கும் இல்லை இங்கே தட்டுப்பாடு
அடிப்படை தேவைகட்கோ இல்லை இங்கே கட்டுப்பாடு
வீறு நடை போட்டிடலாம் வாருங்கள்
சொர்க்கத்தின் வாயிலது திறந்தேயிருக்கிறது.

(35600)(2.7)

- இனிய வாழ்வு இல்ல பயனாளிகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
27*05*1973
உதிர்வு
11*04*2011

திதி: - அட்டமி
(03.04.2013)

### திருமதி கிருபானந்தன் சுமனேஸ்வரி.

எம்மை விட்டு நீர் மறைந்து
ஈராண்டு ஆனபோதும்
இப்போதும் எம்முடன் தான்
நீர் இருப்பதாய் உணர்கின்றோம்
காலங்கள் ஓடி மறைந்திடலாம் ஆனாலும்
மறைந்திடுமா உம் நினைவு எம் மனதை விட்டு-
*உங்கள் ஆத்மா சாந்திபெற அருளுமாறு*
*ஆண்டவன் பாதம் பணிகின்றோம்.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
- குடும்பத்தினர்-

சிவன் கோயிலடி,
சுன்னாகம்.

(C8049)(2.6.7)



சிறைச்சாலை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள சந்திரத்ன பல்லேகம நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். (ச)

# உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுவோர் அதிகரிப்பு

## கருத்துக் கணிப்பீட்டை மேற்கொள்ள உத்தரவு

கொழும்பு,ஏப்.3

இலங்கையில் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுபவர்கள் குறித்து நாடு முழுவதும் கருத்துக் கணிப்பொன்றை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வருடத்தினுள் கருத்துக்கணிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கினார்.

இலங்கையில் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்படுவோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகிறது என்று அவர் கூறினார்.

நாட்டில் உயர் இரத்த அழுத்தத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் குறித்து 2008 ஆம் ஆண்டில் இறுதியாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. உலகம் முழுவதும் சுமார் 100 கோடி பேர் உயர் இரத்த அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதோடு, அதில் 40 வீதமானவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன.

வருடாந்தம் உயர் இரத்த அழுத்தத்தினால் குறைப் பிரசவ குழந்தைகளில் 9.4 மில்லியன் குழந்தைகள் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.



தற்பொழுதுள்ள தகவல்களின் பிரகாரம் இலங்கையில் உள்ள மொத்தச் சனத்தொகையில் 43 வீதமானவர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதாக தெரியவருகிறது. அதிகமான நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதால் அது குறித்த தகவல்கள் சுகாதார அமைச்சிடம் இல்லை. அதனால், இந்தத் தொகை மேலும் உயரலாம்.

எனவே நாடளாவிய ரீதியில் உயர் இரத்த அழுத்தம் குறித்த ஆய்வு நடத்துமாறு அமைச்சர் தொற்றா நோய்ப் பிரிவுக்கு அறிவித்துள்ளார்.

சுத்தமற்ற உண்வுகள், கோதுமை மா, சீனி அடங்கிய உணவுகள், அதிக மது, சிகரெட் பாவனை, போதிய உடற்பயிற்சி இன்மை என்பன காரணமாக உயர் இரத்த அழுத்தம் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முஸ்லிம் மக்களே அச்சம் வேண்டாம்

## ஜனாதிபதி சகல இனங்களையும் பாதுகாப்பார் என்கிறார் காதர்

கொழும்பு,ஏப்.3

முஸ்லிம்கள் எவரும் வீணாக அச்சமடையத் தேவை இல்லை என்று சுற்றாடல் துறை பிரதி அமைச்சர் ஏ. ஆர். எம். அப்துல் காதர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிச்சயம் தீர்த்து வைப்பார். ஜனாதிபதி ஒருபோதும் இன, மத, மொழி பேதம் பார்ப்பதில்லை.

நாட்டில் மீண்டும் குழப்ப நிலையையும், இனங்களுக்கிடையே சந்தேகங்களையும் ஏற்படுத்த சிலர் முயற்சி செய்கின்றனர். ஆனால் இந்த முயற்சிகள் ஒருபோதும் பயனளிக்காது. அதனால் முஸ்லிம்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவை இல்லை. -என்றார். (ச)

## கொரியா தீபகற்பத்தில் போர் மூண்டால்:

# இலங்கைப் பணியாளர்களை அழைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு,ஏப்.3

தென்கொரியாவின் மீது வடகொரியா திடீரென தாக்குதல் நடத்துமாயின் அங்குள்ள இலங்கை பணியாளர்களின் பாதுகாப்பு குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கவனம் செலுத்தி வருகின்றது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் மாலை வெளிநாட்டு வேலை வாய்ப்பு விரிவாக்கல் அமைச்சரின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தென்கொரியாவுடன் தமது நாடு போர் தொடுத்துள்ளதாக வடகொரிய உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அதற்கமைய திடீர் தாக்குதல்கள் நடத்தப்படுமாயின் தென்கொரியாவில் உள்ள இலங்கைப் பணியாளர்களைத் துரிதமாக நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்பொருட்டு, சர்வதேச புலம்பெயர்வு சம்மேளனத்தின் ஆதரவையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது தென்கொரியாவில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பணியாளர்கள் உள்ளனர்.

அதேவேளை, பதிவு செய்யப்படாத வகையில் தென்கொரியாவில் பல பணியாளர்கள் செயற்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கடமை என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச)

**UNIVERSITY OF JAFFNA**
INVITATION FOR BIDS
CONSTRUCTION OF SINGLE STOREY SEMI PERMANENT LECTURE HALLS FOR THE UNIVERSITY OF JAFFNA.

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| Bid ID | Description of Work | Estimated Cost | Contract Period | Minimum Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Validity Period |
| YA/CWP/ADI/ 2013-03 | Construction of Single Storey Semi Permanent Lecture Hall for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna at Thirunelvely | Rs.16.7 million | 90 Calander Days | C5 | Rs. 160,000.00 | 15th August 2013 |
| YA/CWP/ADI. 2013-04 | Construction of Single Storey Semi Permanent Lecture Hall for the Faculty of Agriculture, University of Jaffna at Ariviyalnagar, Kilinochchi . | Rs.7.0 million | 90 Calander Days | C6 | Rs. 70,000.00 | 15th August 2013 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.**
Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 03.04.2013 until 17.04.2013** from **9:00 hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees two thousand five hundred **(Rs.2,500/-)** for each bid.
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 14.00 hrs on the 18.04.2013 or be deposited in the tender box kept in the Registrar's office.** Bids will be opened immediately thereafter **on 18.04.2013** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period for **91 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of "**Vice Chancellor, University of Jaffna.**"
   - Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.
10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.30 hrs on the **10th April, 2013**

**Vice- Chancellor,**
**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely,Jaffna.**

(c/8044) (6.7)

# இந்தோனோஷியா சென்றார் ஹக்கீம்

கொழும்பு,ஏப்.3



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்தோனேஷியாவுக்கு சென்றுள்ளார்.

சர்வதேச ஆள் கடத்தலுக்கு எதிரான பாலி அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பில் சுமார் 43 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இதேவேளை இலங்கையில் காணப்படுகின்ற தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, அமைச்சர் ரவூப் ஹக்கீம் விரைவில் தனது பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)


**காணி விற்பனைக்கு**

சுன்னாகச் சந்திக்கு வடக்காக கே.கே.எஸ். வீதியில் பெற்றோல் விற்பனை நிலையத்துக்கு பின்புறமாக இரண்டாவதாக உள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ளவை.

தொடர்பு: 071 2828 041, 071 4806 309.


(35590) (46.6.7)





# வவுனியா-ஓமந்தை-அரசர்பதி
# ஸ்ரீகண்ணகை அம்மன் பொற்கோயில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா
# மஹாகும்பாபிஷேகப் பெருவிழா - 11.04.2013

| கிரியாகால ஆரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 06.04.2013 சனிக்கிழமை | 09.04.2013 செவ்வாய் 9.00 மணிமுதல் 10.04.2013 புதன் மாலை 3.00 மணி வரை | 11.04.2013 வியாழக்கிழமை |




அம்பிகை அடியார்களே! சிவபூமி சுவர்ணபூமி என போற்றி புகழப்படும் இலங்கை மணிநாட்டின் வடக்கே பயிர்விளை வயல்களும் நீர்நிறைந்த குளங்களும், இயற்கை அழகும் சேர்ந்துள்ள வன்னிப்பதியின் தலைநகராக விளங்கும் வவுனியா மாவட்டத்தில் பசுக்கூட்டங்கள் நிறை ஓமந்தை வண்ணாங்குளம் எனும் பூர்வீக கிராமத்தில், பலநூற்று ஆண்டுகாலங்களாக சைவமும் தமிழ்மரபும் பேணிய குடும்பத்தவர்களினால் தம்குலதெய்வமாக வழிபாடாற்றிய "அரசர்பதி" என்னும் பதியில் எழுந்தருளி இன்றும் வழிபடும் அடியவர்களுக்கு அருள்தரும் தெய்வமாக விளங்கிவரும் ஸ்ரீகண்ணகை அம்மனுக்கும், விநாயகர், முருகன், நாகதம்பிரான், காத்தவராயர், வைரவர் ஆகிய பரிவாரமூர்த்திகளுக்கும் புதிதாக அழகிய ராஜகோபுரத்துடன் கோவில் அமைத்து நிகழும் மங்கலமிகு நந்தன வருடம் பங்குனி மாதம் 29ம்நாள் (11-04-2013) வியாழக்கிழமை பிரதமைத்திதியும், அச்சுவினி நட்ஷத்திரமும், அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 08 மணி 30 நிமிடம் முதல் 10 மணிவரை உள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது. மேலும் நடைபெறவுள்ள விநாயகவழிபாடு முதலாக கிராமம், மக்கள், வயல்கள், பயிர்கள் செழிப்புற நடைபெறும் சாந்திவைபவங்களிலும் கலந்து வழிபாடாற்றி அம்மன் அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

**கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்துமண்டலாபிஷேகம் 12 நாள்கள் நடைபெற்று மஹாசங்காபிஷேகத்துடன் பூர்த்தியாகும். லட்சக்கணக்கான அடியார்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுக்கான போக்குவரத்து, அன்னதானம், மலசலகூட வசதி என்பன ஆலய தர்மகர்த்தா சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**வாழ்வில் கிடைத்தற்கரிய குடமுழுக்கு பெருவிழாவைக் கண்டுகளிக்க**
**அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம்.**
**அனைவரும் வருக! அம்மன் அருள் பெறுக!**

சுபம்

இவ்வண்ணம் ஆலய தர்மகர்த்தா
அரசர் வேலுப்பிள்ளை குணரட்னம்

(C/5566)(5,6,7)

# 'வசந்த கால' நிகழ்வுகள் நுவரெலியாவில் ஆரம்பம்

நுவரெலியா,ஏப்.3

நுவரெலியா வசந்த கால நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் ஆரம்பமாகின. இந்த நிகழ்வுகள் நுவரெலியா மாநகர சபையின் முதல்வர் மஹிந்த தொடம்பே கமகே தலைமையில் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப் பேகடுவ, தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரட்நாயக்க, அரச முகாமைத்துவ அமைச்சர் நவீன் திசாநாயக்க, மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். இந்த வருடம் வசந்த காலத்தை முன்னிட்டு 20 லட்சம் உல்லாசப் பயணிகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.





நுவரெலியாவிலுள்ள 30 பாடசாலைகளின் 46 'பாண்ட்' அணிவகுப்புகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. அத்துடன் பொலிஸாரின் குதிரைகள் அணிவகுப்பும் இடம் பெற்றது. இந்த வருடம் பல புதிய அம்சங்கள் வசந்த காலத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று மாநகர சபை முதல்வர் தெரிவித்தார். வசந்த காலத்தை முன்னிட்டு வருகை தரும் உள்ளூர், வெளிநாட்டு உல்லாச பயணிகளின் வசதி கருதி பல்வேறு விதமான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை இசை நிகழ்ச்சி, மலர்க் கண்காட்சி, மோட்டார் ஓட்டப் போட்டி, படகோட்டப்போட்டி, சர்வதேச மரதன் போட்டி உட்பட மேலும் பல போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நம்பகத்தன்மை வெளிப்பாட்டை கூட்டு ஒப்பந்தம் காட்டவேண்டும்

## முரளி ரகுநாதன் கோரிக்கை

நுவரெலியா,ஏப்.3

கூட்டு ஒப்பந்தமானது நம்பகத்தன்மை வெளிப்பாட்டை பெருந்தோட்ட மக்கள் நலன் சார்பில் காட்ட வேண்டும் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு முறையும் முதலாளிமார் சம்மேளனம் மற்றும் அதன் சார்பான ஒப்பந்தக்காரர்களின் நிலைப்பாட்டில் பெருந்தோட்ட மக்கள் நலன் நம்பகத்தன்மை கருத்திற் கொள்ளப்படுவது கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலமை மாற்றப்பட்டு பெருந்தோட்ட மக்கள் நலன்சார் சார்பில் நம்பகத்தன்மை வெளிப்பாட்டை வருகின்ற கூட்டு ஒப்பந்தத்திலாவது கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் வெளிப்படுத்தவேண்டும்.

**அத்தியாவசியப் பொருள்களின் விலை மற்றும் தற்போது தேயிலை விலை உலக வர்த்தக நிலைப்பாட்டை உயர்த்தியுள்ளது.**

அத்தியாவசியப் பொருள்களின் விலை மற்றும் தற்போது தேயிலை விலை உலக வர்த்தக நிலைப்பாட்டை உயர்த்தியுள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு நியாயமான சம்பள உயர்வை ஒப்பந்தம் செய்பவர்கள் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கவேண்டும் - என்றார். (ச)

# இனவிரோத பிரசாரங்களைத் தடுக்க சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்

## கல்முனை பிரதி முதல்வர் தெரிவிப்பு



அம்பாறை,ஏப்.3

அரசு பொதுபலசேனா விடயத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக்கத் தவறினால், இதற்கு எதிரான ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என நாம் கோர வேண்டி ஏற்படும். இனங்களுக்கிடையில் எதிர்ப்பை, உருவாக்கும் பிரசாரங்களைத் தடைசெய்யும் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும்.

இவ்வாறு கல்முனை மாநகர பிரதி முதல்வர் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இனம் இன்னொரு இனத்தை வெறுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் சூழ்ச்சியின் ஒரு பகுதியாகத்தான் இந்த அரசு இனங்களுக்கு மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் முரண்பாட்டை நான் பார்க்கின்றேன்.

பொது பல சேனா என்று ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்துக்கு செயற்றிறன் கொடுக்கப்பட்டு இன்னும் தொடர்ந்து தொழிற்பட வைப்பதன் மூலமாக இனங்களுகிடையிலான வெறுப்புகளை வைத்துக்கொண்டு நாட்டை ஆள நினைக்கும் சக்திகளுக்கு இது ஒரு சாதகமான நிலையாகும்.

இந்த விடயம் குறித்து அரசில் அங்கம் வகிக்கும் சுமார் 95 முஸ்லிம் அரசியல்வாதிகளில் எவரும் இது வரை தீர்க்கமாக எதுவும் குறிப்பிடாமல் இருக்கிறார்கள்

மூன்றில் ஒரு பகுதி முஸ்லிம்கள்தான் வடக்கு, கிழக்கில் வாழ்கின்றார்கள். மூன்றில் இரண்டு பகுதி முஸ்லிம்கள் வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழ்கின்றார்கள். பொதுபல சேனாவின் இத்தகைய நடவடிக்கை முஸ்லிம்களை அச்சத்தில் ஆழ்த்தியிருக்கின்றது.

தனி இயக்கங்களைத் தடை செய்வதென்பது ஜனநாயகத்துக்கு அப்பாற்பட்ட விடயம். தனிநபர்களின் கூற்றை எதிர்க்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் ஒருவர் எமக்குத் தமிழீழம் தேவை என்று கூறுவதற்கு உரிமை இருக்கின்றது. அதற்குச் சிங்களவர் ஒருவர் இவர் நாட்டைத் துண்டாட நினைக்கின்றார், இவர் கைது செய்யப்பட வேண்டும் என்று கோருவதற்கு உரிமை இருக்கின்றது. அதற்காக அவரைத் தடைசெய்ய முடியாது.

இனங்களுக்கிடையிலான வெறுப்பை ஏற்படுத்தும் பிரசாரங்களைத் தடைசெய்ய சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டு அதன் மூலம் இனவாதிகளை அடக்கமுடியுமே தவிர, வேறு வழிகளில் அதனை நிறைவேற்ற முடியாது.- என்றார். (ச)

## கை மாறி விட்டது

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள கடைக்கு அருகில் நேற்று (02.04.2013) முக்கிய ஆவணங்களுடன் வைக்கப்பட்டிருந்த கைப்பை தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. தவறுதலாக எடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**சன்மானம் வழங்கப்படும்.**

T.P: 077 537 0979 (27813)(6.7.11)

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் அம்மன் கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கில் 1½ பரப்பு
காணியில் வீடு
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: அ.பூபாலசிங்கம்
077 948 4978 (35593)(6.7.11)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினரும் சேமிப்பு கணக்குத் திட்ட
உறுப்பினருமான **க.கனகலிங்கம்**
(கனகலிங்கம் புடைவை, சாவகச்சேரி)
அவர்களின் பாசமிகு மனைவி
**திருமதி கனகலிங்கம் மனோன்மணி**
அவர்கள் 01.04.2013 ஆம் திகதி காலமானார்.
அன்னாரின் மறைவுக்கு மன்றத்தின் சார்பாக ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம்.**

(சி/9240)(5.6.7)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தின் கிராம
அலுவலர் கதிரவேல் நித்தியானந்தன்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி கதிரவேல் இராஜேஸ்வரி**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி
யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



பிரதேச செயலரும் அனைத்து அங்கத்தவர்களும்,
யாழ் பிரதேச செயலக நலன்புரி சங்கம்.

(35602)(6.7.11)

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் வீதி, சங்குவேலி பிள்ளையார் கோயில் வடக்கு வீதிக்கு அருகில், 3 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு, ஸ்ரோர் றூமுக்கு ஏற்றது. லொறி/வான், Pick up க்கு தரிப்பிட வசதியும், தங்குமிட வசதியும் உண்டு.

தொடர்பு: 077 911 2840
பேரம்பலம் அவனியூ,
சங்குவேலி, மானிப்பாய்.

(35592)(6.7.11)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு
வடக்குப் புறமாகவும், அச்சுவேலி
சென்திரேசா மகளிர் கல்லூரிக்கு
அருகிலும் அமைந்துள்ள 05 பரப்பு சுற்று
மதில் காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)

தொடர்பு: 021 320 5096

(35594)(6.7.11)

## கண்ணீர் அஞ்சலி

இனியவாழ்வு இல்ல ஆசிரியையான செல்வி சாந்திதேவி
அவர்களின் தந்தையார்
**வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை**

வதனமதில் தெரிகிறது -
உங்களது அன்பு உள்ளம்
பிள்ளை உள்ளம் வெள்ளை அதுவே
சங்கரப்பிள்ளை உங்கள் உள்ளம்
பாசமிகு தந்தையாய்
பண்புமிகு குலவிளக்காய்
மாண்புமிகு மக்களோடு
இன்பமாக வாழ்வதனை
பார்த்திருக்க பொறுக்காமல்
காலனவன் உம் உயிரை
களவாடிச்சென்றானோ!
வளியோடு வளியாக உங்கள்
உயிர் கலந்ததுவே
கலங்குகின்ற உங்கள் உறவுகளுக்கு
உரித்தாகட்டும் எங்கள் அனுதாபங்கள்.



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு இனிய வாழ்வு இல்ல செயற்குழு உறுப்பினர்கள்,ஊழியர்கள், பயனாளிகள் ஆகிய அனைவரும் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

இனியவாழ்வு இல்லம் புதுக்குடியிருப்பு.

(35599)(5.7)

## பண்டிகைக்கால சிறப்பு விலையில் !!!



# 4Ch AVTECH/AMARON DVR
# 4 Dome IR Camera - Night Vision
# 19" Dell Moniter
# 500 GB Hard Disk
# 1 Year Warranty
# Online Setup & Installation

76,000 /= Only

CALL - 0759997798
0215676767

CCTV CAMERA - பாதுகாப்புக் கமரா

(35596)(6.7)

AJ SYSTEMS — Anyplace, Anywhere, An ... ! Your POS & CCTV Partner — AJ SYSTEM (PVT) LTD

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
Home Theater System
Poineer model
விற்பனைக்கு வேறு
எலக்ரோனிக் பொருள்
களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 844 8738

(c/8043)(6.7.11)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் அடிமனதில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துக்கொள் வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந் தோஷம் கிட்டும்.

**இடபம்:** குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது. நெருங் கியவரிடம் உங்களது மனக் குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். யாரையும் எளிதில் நம்பி ஏமாறவேண்டாம். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள்.

**மிதுனம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட் பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள். ஆன் மிகவாதிகளின் சந்திப்பு நிகழும்.

**கடகம்:** அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத் தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளை களால் பெருமையடைவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**சிங்கம்:** கணவன்-மனைவிக்குள் அன்னி யோன்யம் பிறக்கும். வருங்காலத்திற்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தி யோகத்தில் சகஊழியர்களின் அதரவு கிட் டும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**கன்னி:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப் படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**நாளை**

பங்குனி-21 வியாழக்கிழமை 04.04.2013
திதி: நவமி மு.இ.09.24 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு.இ. 11.03 வரை
சுபநேரம்: 07.39- 09.09 வரை
இராகுகாலம்: 01.39- 03.09 வரை

**துலாம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. குடும்பத்தினரின் எண்ணங் களைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். பணப்பற்றாகுறை விலகும். மனதிற் குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தாயின் உடல் நலம் சீராகும். பிள்ளைகளை நல்வழிப்படுத்து வீர்கள். மனநிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** நண்பர்கள், உறவினர்களுடன் உரி மையில் வரம்பு மீறிப் பேசவேண்டாம். முன் கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டிவரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர் களிடம் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**மகரம்:** பிள்ளைகளின் வருங்காலம் குறித்த கவலைகள் வந்துபோகும். முக்கிய கோப்பு களைக் கையாளும்போது அலட்சியம் வேண் டாம். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் போட்டி களை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப் புகள் வந்து நீங்கும்.

**கும்பம்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப் படுவீர்கள். கணவன் -மனை விக்குள் அன்னியோன்யம் பிறக்கும். உறவினர் கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகை யில் நன்மை பிறக்கும். உற்சாகமான பேச்சால் அனைவரை யும் கவருவீர்கள், வீடு, வாகனத்தை மாற்றுவீர்கள்.

**மீனம்:** சிந்தனைத்திறன் அதிகரிக்கும். குடும் பத்தில் கலகலப் பான சூழல் ஏற்படும். பிள்ளைக ளின் உடல் நலம் சீராக இருக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரசுக் காரியங்களில் அனு கூலமான நிலைகாணப்படும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 3 | 2 | | | | | 4. |
| | | 1 | | | 3 | 7 | 6 | |
| | 8 | 7 | | 6 | | 2 | 3 | |
| | 7 | | | | | 9 | | |
| 3 | 4 | | | 9 | | | 2 | 1 |
| | | 8 | | | | | 4 | |
| | 2 | 5 | | 3 | | 4 | 1 | |
| | 1 | 4 | 7 | | | 3 | | |
| 8 | | | | | 6 | 5 | | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 1 | 5 | 4 | 8 | 9 | 7 | 6 |
| 8 | 5 | 6 | 7 | 2 | 9 | 3 | 1 | 4 |
| 9 | 4 | 7 | 3 | 1 | 6 | 8 | 2 | 5 |
| 7 | 8 | 4 | 1 | 9 | 2 | 6 | 5 | 3 |
| 1 | 9 | 2 | 6 | 5 | 3 | 7 | 4 | 8 |
| 6 | 3 | 5 | 8 | 7 | 4 | 2 | 9 | 1 |
| 4 | 6 | 9 | 2 | 8 | 5 | 1 | 3 | 7 |
| 5 | 7 | 3 | 9 | 6 | 1 | 4 | 8 | 2 |
| 2 | 1 | 8 | 4 | 3 | 7 | 5 | 6 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


IELTS BRITISH COUNCIL

We are "British Council IELTS Registration Center"



* Strategies and techniques are taught to gain a higher score
* All 4 skills are paid equal attention
* Special attention to weak students
* 60 hours of learning in 8 weeks
* Affordable charges

* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

IELTS பரீட்சைகள் 16.05.2013 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

Registrations now in progress

வகுப்புக்கள் ஆரம்பம் : 08.04.2013

| Weekdays | Course duration | Course fee |
|---|---|---|
| Mou - Tues - Wed - Thurs | 60 hours | Rs.15,000/= |

For registration and further details contact

CITY COLLEGE OF ENGLISH

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.

Tel. 021 2220384 / 077 8803887

(34970)(6,7)



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1983 * 02 * 07



மறைவு
2011 * 03 * 26

திதி: 03.04.2013

சம்பந்தன் சக்திதரன்

(முன்னாள் ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

ஆண்டுகள் இரண்டில் - ஆறாத் துயரில்
இன்றும் உன் நினைவில் தவிக்கும்
ஈன்ற நெஞ்சங்களும் உன் உடன் பிறப்புக்களும்
ஆறாய் பெருகும் விழிகளுடன்......

'தயாபவனம்',
குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(35564) (10,6,7)

# அறப்பணிகளையும் செய்து வருகிறது காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயம்

## வலி.மேற்கு பிரதேச செயலர் பாராட்டு

காரைநகர்,ஏப்.3

சமயப் பணிகளுடன் அறப் பணிகளையும் மேற்கொண்டு இந்து ஆலயங்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்கின்றது வியாவில் ஐயனார் ஆலயம். இந்த ஆலயத்தைப் பரிபாலிப் பவர்களின் தர்ம சிந்தனை ஏனையோருக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது என்று வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

காரைநகர் வியாவில் ஐய னார் ஆலயத்தினால் வட மாகாண விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களுக்கான சுயதொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஆலய சூழ லில் அமைந்துள்ள கணப தீஸ்வரக் குருக்கள் நூலகத் தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மனம் இருந்தும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளுக்கு அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வர்கள் இவ்வாறான ஆலயங் கள் ஊடாக சமூக சேவையை மேற்கொள்ள முடியும்.

சமயம் என்பது சமூகத்தை வழிப்படுத்த வேண்டும். இன்று ஆலய விழாக்களில் ஏற்படும் பிணக்குகளால் பக்தர்கள் சஞ்சலப்பட வேண் டிய நிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஆல யங்கள் தர்மசாலைகளாகவும், பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் இடங்களாகவும், மக்களுக்கு வேலைவாய்ப்பை



பிரதேச செயலர் மாற்று ஆற்றல் உடைய ஒருவருக்கு விவசாய உபகரணங்களை வழங்குகிறார்.

வழங்கும் அமைப்புக்களாக வும் காணப்பட்டன. ஆனால் அவற்றை இன்று ஆலயங் களில் காணமுடிவதில்லை. இந்த நிலை மாறவேண்டும்.

ஆலயங்கள் அறப்பணி நிலையங்களாகவும் சமுதா யத்தை ஆற்றுப்படுத்தும் நிறுவனங்களாகவும் மாற வேண்டும். இதற்கு வியாவில் ஐயனார் ஆலயம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்த ஆலய வளாகத்தில் நூல் நிலையம், கணினிக் கூடம், அன்னதான மண்டபம் என்பன உள்ளன. இதன் மூலம் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வியில் இருந்து பல் கலைக்கழக கல்வியைக் கற் கும் வரைக்கும் உதவு தொகை வழங்கப்படுவதுடன் அங்க வீனர்கள், விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத் துவதற்காகவும் உதவு தொகை மாதாந்தம் வழங்கப்படுகிறது.

மேலும் சுயதொழில் உப கரணம் வழங்கல், பசு வளர்த் தல், விபூதி தயாரித்தல் போன்ற பணிகள் இடம்பெற்று வரு கின்றன. இவ்வாறு அறப் பணிகளை மேற்கொண்டு ஏனைய ஆலயங்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்வதுடன் கிராம மக்களின் வளர்ச் சியிலும் பங்காற்றி வருவது பாராட்டுக்குரியது.

இன்று மாற்று ஆற்றல் உள் ளோரின் பக்கம் சமூகத்தின் பார்வை அதிகமாகத் திரும் பியுள்ளது. அவர்கள் தங்களை முன்னேற்றும் செயற்பாடு பாராட்டத்தக்கது. இந்த ஆலய பரிபாலகர் செய்யும் சமூகப் பணியை வரவேற் கின்றோம். அவர் தொடர்ந் தும் இவ்வாறான சமூகப் பணிகளை ஆற்ற வேண்டும்- என்றார்.

(எ-250)

### பாடசாலை விடுமுறை வெள்ளிக்கிழமை முதல்

வடமராட்சி,ஏப்.3

அரச தமிழ், சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் முதலாம் தவணை விடு முறைக்காக நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை முதல் மூடப்படவுள்ளன.

இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாக வுள்ளன. (ந-8)

### மெய்வன்மைப் போட்டி

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் மெய்வன் மைப் போட்டி நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக வடமாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செய லாளர் திரு விக்னேஸ்வரன் தம் பதியர் கலந்து கொள்வர். (ந)

### போட்டிகளில் வெற்றிபெற்ற காரைநகர் கோட்ட மாணவர்கள்

யாழ்.காரைநகர் மணிவாசகர் சபை சிவராத்திரி தினத்தை முன்னிட்டு காரைநகர் கோட்டப் பாடசாலை களுக்குஇடையேபேச்சு, பண் ணிசை, மனனம், பஜனைப் போட்டி களை நடத்தியது.

இந்தப் போட்டி களில் தரம் ரீதியாக முதல் மூன்று இடங் களைப் பெற்ற மாண வர்களின் விவரம் வருமாறு:-

பண்ணிசைப்போட்டி

பிரிவு VI தரம் 12, 13- தி.கிருசாந்தி (யாழ்ற்ரன் கல்லூரி), ந.சோபிதன் (யாழ்ற்ரன் கல்லூரி).

மனனப் போட்டி

பிரிவு I தரம் 2,3 - வ.கோபிகா (யாழ்ற்ரன் கல்லூரி), ஜெ.சரண்யா (வலந் தலை வடக்கு அ.மி. த.க.), ச.பிரபாலினி (காரை ஊரி அ.மி.த. க.பாடசாலை ).

பிரிவு II தரம் 4,5 - கி.தனுஷன் (காரை மெய் கண்டான் வித்தி.), அ.துளசி (யாழ்ற்ரன் கல்லூரி), இ.புவிந்தன் (காரை ஊரி அ.மி.த.க.பாட சாலை ).

பிரிவு IV தரம் 8,9 - இ.கிருத்திகா (கலாநிதி ஆ.தியா கராசா ம.ம.வி.), சங் கவி (யாழ்ற்ரன் கல் லூரி), ச.ரோகிணி (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவுV தரம்10, 11 - செ.கமலேஸ் வரி V (யாழ்ற்ரன் கல்லூரி), ம.நவ நிலா (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவுVI தரம் 12, 13- த.லோகசாந்தினி (யாழ்ற்ரன் கல்லூரி).

பஜனைப் போட்டி

1ஆம்இடம்-யாழ்ற் ரன் கல்லூரி மாண வர்கள் குழு , 2 ஆம் இடம் கலாநிதி ஆ.தியா கராசா ம.ம.வி குழு.

(எ-250) (முற்றும்)

**வாடகைக்கு**

வெதுப்பகமும் விற்பனை நிலையமும் வாடகைக்கு உண்டு.
விவரங்களுக்கு நேரில்.
தொடர்பு: 077 742 7777
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
(35597)(6.7.11)

**வான் உடன் விற்பனைக்கு**

58 xxxx தொடரிலக்கமுடைய Toyato ஹைஏஸ் டுவல் AC, Adjustable Seats கட்டை மொடல்
தொடர்பு: 077 790 2524
(C/8047)(7.11)

**வேலையாள்கள் தேவை**

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவ முள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை.
தொடர்பு: த.குமாரசாமி அன்சன்ஸ்
248/1, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(C/8048)(6.7.11)

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி, கரந்தன்றோட்டில் இருந்து 100 யார் தூரத்தில் ராமுப்பிள்ளை பாடசாலைக்கு அருகில் 10 பரப்புத் தோட்டக்காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776511682, 0217903917
(35601)(7.11)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலை, கல்வித்துறை மற்றும் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியும் சிறப்பும் பெற 3 ஆண்டுகள் ஆசிரியராகவும் 14 ஆண்டுகள் அதிபராகவும் தொடர்ச்சியாக அரும்பணியாற்றி கடந்த ஜனவரி 18 ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர்

**க.குணபாலசிங்கம்**

(B.A.Dip. in Edu. - SLPS - 2- I)

அவர்களது சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்





Best Wishes

பச்சிலைப்பள்ளி மண்ணின் மைந்தனாம்
எங்கள் ஆசான் அன்பின் பிறப்பிடமாம்
அறிவின் பொக்கிஷமாம், குணத்தின்குன்றாம்
பளை மத்திய கல்லூரியின் பண்பான அதிபராய்
எத்தனை எத்தனை சாதனை படைத்தீர்
விழா எடுக்கும் இந் நாளில் உம் புகழ்
தொடர்ந்து மிளிரவும் சிறக்கவும்
கல்லூரிச் சமூகம் மனமார வாழ்த்தி நிற்கின்றது
நன்றியுடன் உம் சேவையை நினைவு கூர்ந்து
வாழிய நலமுடன் பல்லாண்டு காலமென
வாழ்த்தி ஏற்றிப் போற்றுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**கல்லூரிச் சமூகம்**
**கிளி/பளை மத்திய கல்லூரி.**
(C/8051)(2.6.7)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



மயிலணி சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் யாழ்.மத்திய கல்லூரி புவியியல் பாட ஆசிரியருமான
**பிரம்மஸ்ரீ நாகேஸ்வரசர்மா சிவசங்கரசர்மா**
அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 22.03.2013 அன்று மல்லாகம் மாவட்ட நீதிபதி உயர்திரு ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்:- ஆசிரிய நண்பன்
சாவகச்சேரி.

**33 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

அமரர்
**செல்லத்துரை செல்வநாதன்**
(பிரியா மர அரிவு ஆலை உரிமையாளர்)



தோற்றம்
26*03*1956
மறைவு
02*03*2013

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து கடந்த 02.03.2013 அன்று இறைபதம் அடைந்த எம் அன்புத் தெய்வம் செல்லத்துரை செல்வநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.04.2013) புதன்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். **குடும்பத்தினர்.**
(35603)(2.6.7)


**மரண அறிவித்தல்**

**வரதராஜா பாஸ்கரன்**

31.03.2013 இல் உதயனின் 8ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய வரத ராஜா பாஸ்கரன் என்பவரின் மரண அறிவித்தலில் அவரின் பிள்ளைக ளான ஜனோஜாகவினி, இமேஷா பிரபாஷி ஆகிய இருவரின் பெயர்களும் ஜனோஜா, கவினி, இமேஷா, பிரபாஷி எனத் தவறுதலாக பிரசுரமாகி விட்டது என்பதை அறியத்தருகின்றோம். (26263) (6,7) வி.மு.

# 75 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## 03.04.2013




# பிறான்சிஸ் வின்சன்டீப்போல்

அகவை எழுபத்தைந்திலே
அகமகிழ்வுடன் கால் பதிக்கும்
ஆசைத் தந்தையே
உம் மக்கள் யாம்
வாழ்த்துப் பன்னீர் தூவி விடுகின்றோம்.

சிரிப்பு சிந்திய உங்கள் வதனம்
ஆறுதலான உங்கள் வார்த்தைகள்
நேர்மையான உள்ளம்
எவ்வேளையிலும் தளராத மனம்
இத்தனையும் நினைத்து
வாழ்த்தியே உம்மை
பாமாலை தருகின்றோம்

சமூகப் பற்றாளனாய்
வாரி வழங்கும் வள்ளலாய்
எல்லோருக்கும் நல்லவராய்
சமூகத்தில் நாம் தலை நிமிர்ந்தே
வாழ்ந்திட
பாடம் புகட்டி நிற்கும் தந்தையே
அகவை எழுபத்தைந்திலே
வாழ்த்துகின்றோம்
உம் பிள்ளைகள் யாம்

ஆன்மீக வாஞ்சையுடன்
ஆலயப் பணிகள் ஆற்றும்
உம் பாங்கு,
பல்வேறு பணிகளால்
சேவையாற்றும் உம் மனம்,
அஞ்சா நெஞ்சம்,
இத்தனையும் நாமும் வாழ
நல் வழிகாட்டிகளே இவை,

அன்பான தந்தையே உம் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும்
இன்று உமைச் சூழ்ந்து
நூற்றாண்டு வாழ்கவென
வாழ்த்துக்கள் பல கூறி
அகவை எழுபத்தைந்திலே
தடம் பதிக்கும் உங்களுக்கு
வாழ்த்துப் பாமாலை தருகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**றோஸ் கோட், கடற்கரை வீதி, பருத்தித்துறை.**

(35589) (2-6-74)

## மாம்பழம், பலாப்பழம் ஆகியவற்றுக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்.குடாநாட்டில் இம்முறை மாம்பழம், பலாப்பழம் ஆகியவற்றுக்கு பெரும் கிராக்கி ஏற்படலாம் என்று விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.


கடந்த மாதத்தில் ஏற்பட்ட கால நிலை வேறுபாடு மற்றும் கடும் மழையின் தாக்கத்தால் மா, பலா மரங்களில் உள்ள பூக்கள், பிஞ்சுகள் உதிர்ந்துவிட்டன.

இதனால் மா, பலா மரங்களில் காய்களின் பெருக்கம் அரிதாகக் காணப்படுவதாக விவசாயத் திணைக்களத் தகவல்கள் கூறுகின்றன.

இதனால் ஏப்ரல் மாத இறுதி மற்றும் மே மாதத்தில் பழங்களின் வருகை குறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவற்றின் விலை அதிகரிக்கும் வாய்ப்புக்களும் உள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-17)

## தகிக்கும் வெப்பம்; தாகத்தைத் தீர்க்க...!



குடாநாட்டில் தாங்க முடியாத வெப்பம் எல்லோரையுமே வாட்டி எடுக்கிறது. இந்தச் சூட்டைத் தணிக்க தெருவெங்கும் வந்துவிட்டது செவ்விளநீர். யாழ். நகரிலும் பல இடங்களில் இளநீர், குலை குலையாகக் குவிக்கப்பட்டுள்ளன. மக்கள் ஆர்வத்துடன் வாங்கிப் பருகி வருகின்றனர். (ஒ-135)

## கவனிப்பாரின்றி மண்டைதீவு வீதி

யாழ்ப்பாணம், ஏப். 3

மண்டைதீவு பிரதான வீதி புனரமைப்பு குறித்து இதுவரை எந்த நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக மிக மோசமான நிலையில் காணப்படும் இந்த வீதியைத் திருத்தியமைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் இன்னமும் பொருட்படுத்தப்படாமல் உள்ளதாகவும், வீதிப் புனரமைப்புக்கென இரண்டு தடவைகள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தபோதிலும் அவை செயற்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மண்டைதீவு-யாழ்ப்பாணம் இடையேயான போக்குவரத்தில் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும், இந்த வீதியில் வழிப் பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக உள்ள பாலம் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளமையால் வாகனப் போக்குவரத்திலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்ட போது விரைவில் இந்த வீதித் திருத்த வேலைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதாகவும் எனினும் இன்று வரை இந்த வீதி கவனிப்பின்றியே உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (த-7)

## சமுர்த்திச் சங்கத்தின் மாநாடு நல்லூரில்



யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்.மாவட்டச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் யாழ்.மாவட்ட சங்கத்தின் தலைவர் பி.ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். சமுர்த்தி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரன், தாய்ச் சங்கத்தின் தலைவர் சிறிகமகே, பிரதேச செயலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்த ஜெகத் குமார, யாழ்.மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறந்த சேவையாற்றியவர்களுக்கான நினைவுப் பரிசில்களை, அமைச்சர் விமல்வீரவன்ச மற்றும் தென்பகுதியில் இருந்து வருகை தந்த சமுர்த்தி அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் வழங்கிக் கௌரவித்தனர். (த-7)

# யாழ்.சமுர்த்தி ஊழியர்களின் நலன்களையும் கவனியுங்கள்

### பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு மனு

யாழ்ப்பாணம், ஏப்.3

தென்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனுபவிக்கும் சகல நலன்களும் எமது உத்தியோகத்தர்களுக்கும் கிடைக்கவும், எமது உத்தியோகத்தர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் அமைச்சர் டக்ளஸ், அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோரிடம் கையளித்த மனுவில் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர்கள் ஊடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இந்த மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் நியமனக் கடிதங்களின்றி பதில் கடமையாற்றுகின்றனர். (சிலர் மூன்று பிரிவுகளில் கடமையாற்றுகின்றனர்) அவர்களுக்குப் பதில் கடமையாற்றுவதற்கு உதவி ஆணையாளரினால் நியமனக் கடிதம் வழங்கப்பட வேண்டும். பதில் கடமையாற்றும் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்.

தற்போது வழங்கப்படும் பிரயாணப்படி 400 ரூபா ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும்.

கடந்த வருடம் சமுர்த்தி உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கிணங்க சனி, ஞாயிறு தினங்களில் கடமையாற்றிய வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குப் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கமைய கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

புத்தாண்டு சேமிப்பு தொடர்பாக அதிகமாகச் சேமித்த உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் தனிப்பட்ட கௌரவிப்பு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

எந்தச் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்பட்டாலும் தொழிற்சங்க சட்டவாக்கத்துக்கு அமைவாக இடமாற்றச் சபை அமைக்கப்பட்டு அது மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமுர்த்தித் திட்டம் தொடர்பாக ஒரே நடைமுறையைக் கொண்டு வர வேண்டும்- என்றுள்ளது.

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் பி.ஐங்கரன், செயலாளர் எஸ்.பாஸ்கரன் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ள மனுவின் பிரதிகள் யாழ்.அரச அதிபர், யாழ்.சமுர்த்தி உதவி ஆணையாளர், சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கச் செயலாளர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டுள்ளன. (த-7)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் பிரதான வீதிகள் படுசேதம்

### பஸ் சேவைகள் அடிக்கடி தடை

**பெரிய குன்றுகள், குழிகளாகக் காணப்படும் இந்த வீதிகளில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச., தனியார் பஸ்கள் முதல் நாள் சேவையில் ஈடுபட்டால் மறுநாள் பழுதடைந்து விடுகின்றன.**

வடமராட்சி, ஏப்.3

மீள்குடியேற்றம் நடைபெற்றுள்ள வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மக்கள், அரச அலுவலர்கள் பயணிக்கும் பிரதான பாதைகள் மோசமாகப் பழுதடைந்துள்ளமையால் அப்பிரதேசத்துக்கான இ.போ.ச. தனியார் பஸ் சேவைகள் அடிக்கடி தடைப்படுகின்றன.

இதனால் அப்பிரதேசத்தில் இருந்து தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், உற்றார் உறவினர்களைச் சந்திப்பதற்காகவும் பருத்தித்துறைக்கு வந்துசெல்லும் அப்பகுதி மக்களுக்கும், பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களுக்குச் செல்வோர் மற்றும் அலுவலகங்களில் பணியாற்ற பருத்தித்துறைப் பகுதியில் இருந்து வடமராட்சிப் பகுதிகளுக்குச் சென்று வரும் அரச அலுவலர்கள், உயர்தரக் கல்வியைப் பெறுவதற்காகப் பருத்தித்துறை ஊடாக ஏனைய பகுதிகளுக்குப் பயணிக்கும் வடமராட்சி கிழக்குப் பிரதேச உயர்தர வகுப்பு மாணவர்கள் உள்ளிட்டோர் அன்றாடம் பெரிதும் பாதிப்புக்கும் சிரமத்துக்கும் உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போதிலும் அந்தப் பிரதேசத்துக்கான அதி முக்கிய வீதிகளான பருத்தித்துறை - மருதங்கேணி- தாளையடி - கட்டைக்காடு, ஆழியவளை ஆகிய முக்கிய வீதிகள் பெரிதும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

மீள் குடியேற்றம் நடைபெற்ற இந்தப் பிரதேசத்தில் மருதங்கேணி -தாளையடி ஆகிய இடங்களுக்கு கிழக்கேயுள்ள உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் போன்ற கிராமங்களில் 80 வீதத்துக்கு அதிகமான மக்கள் மீள் குடியமர்ந்துள்ளார்கள்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்தும் தாளையடி - கட்டைக்காடு , மருதங்கேணி- மருதடி ஊடான ஆழியவளை ஆகிய வீதிகள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமானவை. பருத்தித்துறை - மருதங்கேணி வீதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமானது ஆகும்.

பெரிய குன்றுகள், குழிகளாகக் காணப்படும் இந்த வீதிகளில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச., தனியார் பஸ்கள் முதல் நாள் சேவையில் ஈடுபட்டால் மறுநாள் பழுதடைந்து விடுகின்றன. இதன் காரணமாக பஸ் சேவைகள் தடைப்பட்டு அனைத்துத்தரப்பு மக்களும் சிரமங்களையும் கஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளார்கள்.

மீள்குடியேறிய மக்கள் தமது வாழ்வாதரத்தை மேம்படுத்த இந்தப் பகுதிக்கான போக்குவரத்து வசதி மிக முக்கியமானது. போக்குவரத்து வசதிகளை நல்ல முறையில் ஏற்படுத்தாமல் ஏனைய அபிவிருத்திகளை முன்னெடுப்பதால் எந்தப் பயனும் இல்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (த-8)

### 'மத்திய தீபம்' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.3

இணுவில் மத்திய கல்லூரியின் 'மத்திய தீபம்' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி ஆரம்பப் பிரிவுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அ. சதானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வயலக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் பொ.பாலகுமாரும், இணுவில் மக்கள் வங்கி முகாமையாளர் ச.கங்காதரனும் கலந்து கொள்வர். (ந-ஐ)

# தமிழீழம் அமைக்க வலியுறுத்தி ஓட்டோ சாரதிகள் போராட்டம்

மதுரை, ஏப். 3

இலங்கையில் தனித் தமிழீழம் அமைய வேண்டும் என்று கோரி மதுரையில் ஓட்டோ சாரதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் தனி தமிழீழம் அமைய வேண்டும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கோரி தமிழகத்தில் மாணவர்களும் பல்வேறு அரசியல் கட்சிகளும் தமிழ் இன உணர்வாளர்களும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று மதுரையில் ஓட்டோ சாரதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மதுரையைச் சேர்ந்த ஓட்டோ சாரதிகள் ஒருநாள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டதோடு மதுரை மத்திய பஸ் நிலையத்தின் முன் உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தினர். (ற)



### மதுபோதையில் கூச்சலிட்ட 4 பேர் கைது


அம்பாறை,ஏப்.3

அம்பாறை, இங்குராணை நகர் பகுதியில் மதுபோதையில் கூச்சலிட்ட 4 பேரை தமண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நால்வரும் மதுபோதையில் கூச்சல் இட்டு அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டனர் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

### பயணிகளைக் கவரும் பேரீச்சம் மரங்கள்



காத்தான்குடி பிரதான வீதியில் நடப்பட்டுள்ள பேரீச்சம் மரங்கள் தற்போது காய்க்க ஆரம்பித்துள்ளன. காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள பேரீச்ச மரங்கள் சிலவற்றில் அதிக பேரீச்சம் காய்கள் காணப்படுகின்றன. (ச)

# தென்மராட்சி கல்வி வலயத்தில் ஊட்டப் பாடசாலை அபிவிருத்தி

### அதிபர்களுக்கு இன்று கலந்துரையாடல்

தென்மராட்சி,ஏப். 3

5 ஆயிரம் ஊட்டப் பாடசாலைகள் மற்றும் ஆயிரம் இடை நிலைப் பாடசாலைகள் ஆகியவற்றை புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 18 ஊட்டப்பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் ஆரம்ப நிகழ்வுகள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பி.ப.3மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம், சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, போக்கட்டி அ.த.க. பாடசாலை, போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை, கெற்பேலி அ.த.க. பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை, வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம், குடமியன் அ.த.க. பாடசாலை, கரம்பை அ.மி.த.க. பாடசாலை, கரம்பை அ.த.க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை, தணங்களிப்பு அ.த.க. பாடசாலை, வரணி வடக்கு அ.த.க. பாடசாலை ஆகியனவே தெரிவாகியுள்ளன. (ஐ-9)

### தேசிய மரநடுகை அடையாள நிகழ்வு இன்று

'இன்று மரங்களை வளர்ப்போம். நாளை பயன் பெறுவோம்' என்னும் தொனிப்பொருளில் தேசிய நிகழ்வின் அடையாள நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சித்திரைப் புத்தாண்டு தினமான ஏப்ரல் 14 ஆம் திகதி காலை 7.05 மணிக்கு நாடு முழுவதும் நான்கு மில்லியன் பயன்தரு மரங்களை நடும் தேசிய வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப அடையாள நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் அதன் கீழ் உள்ள அனைதது பாடசாலை மாணவர்களும் ஏப்ரல் 14 ஆம் திகதி சுப வேளையான காலை 07.05 மணிக்கு தமது வீடுகளில் பயன்தரு மரக் கன்றுகளை நடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (ஐ-9)

### ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும்

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர் தினமும், பரிசில் நாளும், வித்யா சஞ்சிகை வெளியீடும் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

# மின்சார சபைக்கு 3 மாதங்களில் அபராத வருமானம் ரூ.54 லட்சம்

### கள்ளக் 'கறண்ட்' எடுத்த 121 பேரிடம் இருந்து

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ். மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் சட்டவிரோத மின் பாவனையில் ஈடுபட்ட 121 பேர்சிக்கிக் கொண்டனர். இவர்களிடமிருந்து 54 இலட்சத்து 32ஆயிரத்து 511 ரூபா அபராதமாக பெறப்பட்டது என்று சுன்னாகம் மின் பொறியியலாளர் எஸ். ஞானகணேசன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வந்த மின்சார சபையின் விசேட குழுவுடன், யாழ். மின்சார சபை ஊழியர்களும், யாழ். பொலிஸாரும் இணைந்து நடத்திய விசேடதிடீர் சோதனை நடவடிக்கையின்போது இந்த சட்டவிரோத மின் பாவனையாளர்கள் சிக்கினார்கள்.

இவர்களில் மின்மானியில் மோசடி செய்தவர்களும் மின்கம்பங்களில் வயர்கள் கொழுவி சட்டவிரோத முறையில் மின்பெற்றவர்களும் உள்ளடங்குவர். -

ஜனவரி மாதம் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 53 பேர் சிக்கினார்கள். இவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை 18 இலட்சத்து 14 ஆயிரத்து 948 ரூபா அபராதமாகப் பெறப்பட்டது.

அதன்படி புலோலியில் ஒருவரிடம் 65 ஆயிரத்து 763 ரூபாவும், கொற்றாவத்தையில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஒருவரிடமிருந்து 48 ஆயிரத்து 979 ரூபாவும், தொண்டமானாறு பிரதேசத்தில் ஒருவரிடமிருந்து 45 ஆயிரத்து 623 ரூபாவும், வல்வெட்டித்துறையில் 14 பேர்களிடமிருந்து 2 இலட்சத்து 44 ஆயிரத்து 214 ரூபாவும்-

அல்வாயில் 4 பேரிடமிருந்து 41 ஆயிரத்து 975 ரூபாவும் பருத்தித்துறையில் 18 பேரிடமிருந்து 4 இலட்சத்து 38 ஆயிரத்து 788 ரூபாவும், கரவெட்டியில் 2 பேரிடமிருந்து 2 இலட்சத்து 60 ஆயிரத்து 6 ரூபாவும், குரு நகரில் ஒருவரிடமிருந்து ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 700 ரூபாவும்-

கொழும்புத்துறையில் 3 பேரிடமிருந்து 4 இலட்சத்து 26 ஆயிரத்து 775 ரூபாவும், பொலிகண்டியில் 3 பேரிடமிருந்து 27 ஆயிரத்து 240 ரூபாவும், கற்கோவளத்தில் ஒருவரிடமிருந்து 6 ஆயிரத்து 440 ரூபாவும், தும்பளையில் 4பேரிடமிருந்து 41 ஆயிரத்து 510 ரூபாவும் அபராதமாக பெறப்பட்டது.

அவர்களில் 23 பேர் மீற்றரைச் சட்டவிரோதமாக கையாண்டவர்களாவர். 24 பேர் மின் கம்பங்களில் சட்டவிரோதமாக வயர்களைக் கொழுவி மின்சாரம் பெற்றவர்கள்.

பெப்ரவரி மாதத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 39 பேரிடமிருந்து 22 இலட்சத்து 43 ஆயிரத்து 149 ரூபா அபராதமாகப் பெறப்பட்டுள்ளது.

அதன்படி குருநகரில் 4 பேரிடமிருந்து ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 893 ரூபாவும், திருநெல்வேலியில் ஒருவரிடமிருந்து 94 ஆயிரத்து 239 ரூபாவும், உடுவிலில் ஒருவரிடமிருந்து 38 ஆயிரத்து 706 ரூபாவும், கொக்குவிலில் ஒருவரிடமிருந்து 35 ஆயிரத்து 564 ரூபாவும், இணுவிலில் ஒருவரிடமிருந்து 41 ஆயிரத்து 260 ரூபாவும்,

மானிப்பாயில் ஒருவரிடமிருந்து 17 ஆயிரத்து 483 ரூபாவும், ஊர்காவற்றுறையில் 2 பேரிடமிருந்து ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 24 ரூபாவும், கரவெட்டியில் 6 பேரிடமிருந்து 95 ஆயிரத்து 860 ரூபாவும், யாழ்ப்பாணத்தில் ஒருவரிடமிருந்து 31 ஆயிரத்து 100 ரூபாவும். வேலணையில் 2பேரிடமிருந்து ஒரு இலட்சத்து 24 ஆயிரத்து 587 ரூபாவும்-

அச்சுவேலியில் 6 பேரிடமிருந்து 3 இலட்சத்து 15 ஆயிரத்து 555 ரூபாவும், சுன்னாகத்தில் 2 பேரிடமிருந்து 50 ஆயிரத்து 614 ரூபாவும், சங்கானையில் 3பேரிடமிருந்து 14 ஆயிரத்து 380 ரூபாவும், நீர்வேலியில் 2 பேரிடமிருந்து 44 ஆயிரத்து 33 ரூபாவும்-

புத்தூரில் ஒருவரிடமிருந்து 11 ஆயிரத்து 226 ரூபாவும், தெல்லிப்பழையில் 2 பேரிடமிருந்து 17 ஆயிரத்து 417 ரூபாவும், மல்லாகத்தில் ஒருவரிடமிருந்து 68 ஆயி ரத்து 311 ரூபாவும், கற்கோவளத்தில் 2 பேரிடமிருந்து 11 ஆயிரமும் அபராதமாகப் பெறப்பட்டது.

அவர்களில் 37 பேர் மீற்றரைச் சட்டவிரோதமாகக் கையாண்டவர்களாவர். 2பேர் மின்கம்பங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்கள். மார்ச் மாதத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 29 பேரிடமிருந்து 13 இலட்சத்து 74 ஆயிரத்து 414 ரூபா அபராதமாகப் பெறப்பட்டது.

அல்வாயில் ஒருவரிடம் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 318 ரூபாவும், பருத்தித்துறையில் 2 பேரிடமிருந்து 88 ஆயிரத்து 538 ரூபாவும், அளவெட்டியில் 2 பேரிடமிருந்து 38 ஆயிரத்து 368 ரூபாவும், சுன்னாகத்தில் 2 பேரிடமிருந்து 38 ஆயிரத்து 276 ரூபாவும், ஏழாலையில் ஒருவரிடமிருந்து 4 ஆயிரத்து 553 ரூபாவும்-

கரவெட்டியில் 2 பேரிடமிருந்து ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 46 ரூபாவும், கந்தர்மடத்தில் ஒருவரிடமிருந்து 53 ஆயிரத்து 775 ரூபாவும், யாழ்ப்பாணத்தில் 3 பேரிடமிருந்து 5 இலட்சத்து 18 ஆயிரத்து 543 ரூபாவும், வல்வெட்டித்துறையில் 2 பேரிடமிருந்து 18 ஆயிரத்து 890 ரூபாவும் சண்டிலிப்பாயில் 2 பேரிடமிருந்து 13 ஆயிரத்து 838 ரூபாவும்-

குப்பிளானில் 2 பேரிடம் 29 ஆயிரத்து 408 ரூபாவும், வட்டுக்கோட்டையில் 2 பேரிடமிருந்து 11 ஆயிரத்து 40 ரூபாவும், சுழிபுரத்தில் 3 பேரிடமிருந்து 20 ஆயிரத்து 940 ரூபாவும், தெல்லிப்பழையில் ஒருவரிடமிருந்து 5 ஆயிரத்து 900 ரூபாவும் அபராதமாகப் பெறப்பட்டது.

இவர்களில் 15 பேர் மீற்றரை சட்டவிரோதமாகக் கையாண்டனர். 14 பேர் மின் கம்பங்களில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றனர்.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோருக்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-13)

# நெடுந்தீவு பிரதேச சபையின் கருத்துக்கு மக்கள் சாட்டை

நெடுந்தீவு அபிவிருத்தி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்த கருத்தை நெடுந்தீவுப் பிரதேச சபையினர் மறுத்துள்ள நிலையில், அவர்களின் கருத்தை முற்றாக மறுத்திருக்கின்றனர் அங்கு வாழும் மக்கள். அத்துடன் தமக்கு கருத்தறியும் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் நெடுந்தீவைச் சேர்ந்த 42 பேர் கையொப்பமிட்டு உதயன் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரையும், யாழ். மாநகரசபை உறுப்பினரையும் கொச்சைப்படுத்தும் முகமாக நெடுந்தீவு பிரதேச சபையினர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையை இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்க ளாகிய நாம் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம்.

அண்மையில் நெடுந்தீவுக்கு ஒரு சாவு வீட்டுக்கு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ். மாநகர சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் கட்சியைச் சேர்ந்த பலர் வந்திருந்தனர்.

இறுதிச் சடங்குகளின் பின்னர் நெடுந்தீவைச் சேர்ந்த மக்கள் சார்பாக 26 பேர் கொண்ட குழுவொன்று இவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இதன் போது நெடுந்தீவில் உள்ள குறை நிறைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தான் எமக்குப் பல உண்மைகள் தெரியவந்தன.

2001 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நெடுந்தீவிலுள்ள பாடசாலைகள், இந்துக் கோயில்கள், கத்தோலிக்க தேவாலயங்கள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், அரசினர் வைத்தியசாலை போன்றவற்றுக்கு பல்வேறு வழிகளில் உதவியுள்ளமை தெரியவந்தது.

இங்குள்ள அதிகாரிகளோ அல்லது நிதியுதவிகளைப் பெற்றவர்களோ அதனை வெளியில் சொல்வதே இல்லை.

இங்கு நடைபெறும் எந்தப் பொது நிகழ்வுகளிலும் எவரும் இந்த உதவிகள் குறித்து வாய் திறப்பதே இல்லை.

இந்த ஒதுக்கீடுகள் குறித்து எமக்கு தெரியப்படுத்துவதற்கு எவரும் இல்லை. அடக்குமுறையே எம்மீது பிரயோகிக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து எமது நிலையை அனைவரும் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நிலையில், ஒரு நாளாவது நெடுந்தீவில் இருந்து மக்கள் நலப் பணியாற்ற முடியாதவர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கொச்சைப் படுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்- என்று நெடுந்தீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-7)



பண்டிகை காலத்தில்
பஜாஜ்
விசேட கொடுப்பனவு!





விலை ரூ. 460,880/-
மேற்குறிப்பிடப்பட்ட விலை VAT உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, முன்னறிவிப்பின்றி மாறுபடலாம்.

2013 ஏப்ரல் 1 ஆம் திகதி முதல்
30 ஆம் திகதி வரை
முற்பதிவு செய்து கொள்வனவு செய்யும் அனைத்து
பஜாஜ் முச்சக்கர வண்டியுடனும்
பெறுமதிமிக்க ஒருசோடி பக்கத்திரை மற்றும் விசேட
போக்குவரத்து சைகைகள் அடங்கிய புத்தகம்
(ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மாஅதிபர் (போக்குவரத்து) த.பேரின்பநாயகம் அவர்களால் தொகுக்கப்பட்டது)

இலவசம்!

tradlanka

DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

## பொலிஸார் முன்னிலையிலேயே கூட்டமைப்பினர் மீது தாக்குதல்

### கண்டிக்கிறார் கிழக்குப் பிரமுகர்

அம்பாறை, ஏப். 3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சியில் மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டிருந்த போது நடத்தப்பட்ட தாக்குதல் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர் செல்லையா இராசையா தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனின் அலுவலகத்தில், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்ட மக்கள் சந்திப்பு நிகழ்வின்போது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் விசனிக்கத் தக்கதாகும்.

சிங்கக் கொடியுடன் குறித்த அலுவலகத்துள் நுழைந்த காடையர்கள் சரமாரியாகக் கற்களை வீசி மக்கள் மீதும், அலுவலகம் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த மக்கள் சந்திப்பின் போது சட்டம், ஒழுங்கு, அமைதி காக்க வேண்டிய பொலிஸார் முன்னிலையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை பாதுகாப்புத் தரப்பினருக்கே வெட்கக் கேடானதாகும்.

இந்தச் சம்பவத்தின்போது பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபர் அடுத்த கணமே விடுவிக்கப்பட்டார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

எனவே இந்தகைய சம்பவத்தின் சூத்திரதாரிகள் யார் என்பதையும், இவர்களை ஏவி விடும் சக்தி எதுவென்பதையும் எளிதில் புரிந்து கொள்ளலாம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-30)

## புதிய கட்ட திறப்பு விழா

பளை,ஏப்.3

பச்சிலைப்பள்ளி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகம் நாளை வியாழக் கிழமை மு.ப.11 மணிக்கு பளை நகர்ப் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் ஐ.இராசதுரை தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்து கொண்டு அலுவலகக் கட்டடத்தை திறந்து வைப்பார்.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பளை பிரதேச சபைத் தலைவர் ப.டொ. அன்ரன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதித் திட்டப் பணிப்பாளர் விஜய்கிருஷ்ணன், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.தவராசா ஆகியோர் கலந்து கொள்வர்.

(9)

TCT MULTI TRADE CENTRE

# Free Free Free Free Free

# எங்கே?

## ரீசீரீ (TCT) பல்பொருள் விற்பனை நிலையத்தில்

**மலரும் விஜய வருடத்தினை முன்னிட்டு**

**இன்று முதல் 13.04.2013 வரை வியப்பூட்டும் விலைக்கழிவுகள்**

**60இக்கு மேற்பட்ட பொருள்களை இலவச இணைப்புக்களுடன் வழங்குகின்றோம்.**

| இவற்றை வாங்கினால் | இவை இலவசம் |
|---|---|
| 01. Lucky Land Sorties (400g) | Biscuites(100g) Free |
| 02. Lucky Land Chocolate (400g) | Biscuites(100g) Free |
| 03. Lucky Land Choco Butter(400g) | Biscuites(100g) Free |
| 04. Munchee Crunchee-Carols | Shorties(100g) Free |
| 05. Munchee Chocolate Cream | Shorties(100g) Free |
| 06. Munchee Shorties (350g) | Shorties(100g) Free |
| 07. Maliban Chick Bits (280g Tin) | GoldMarie(100g) Free |
| 08. Maliban Orange Cream(500g) | Pirimiummarie(70g) Free |
| 09. Maliban Custarrd Cream(500g) | Pirimiummarie(70g) Free |
| 10. Little Lion Wafers(500g) | ButterCarol(100g) Free |
| 11. Boost (400g) | Boost 1 Free |
| 12. Zesta (200g) Tea | Zesta(50g)PackFree |
| 13. Zesta (400g) Tea | Zesta(100g) PackFree |
| 14. Nescafee(200g)Bottle | 1 Cup Free |
| 15. Vim Soap 3 pcs(100g) | 1 Vim Soap Free |
| 16. Lux Soap 3pcs | 1 Lux Soap Free |
| 17. Baby Cheramy Soap 3pcs | 1 Soap Free |
| 18. Mortin Spray(400ml) | 1 Mortin coil Box Free |
| 19. Prima Special Noodles | Noodles(80g)PackFree |
| 20. Maggi Special Noodles | Noodles(80g)PackFree |
| 21. Watawala(200g) Tea | Nestamolt PackFree |
| 22. Garnigr shampoo (Long & Strong 180ml) | Garnigr Conditioner (90g) Free |
| 23. Ruhunu Noodles | Soya Free |
| 24. Garnigr shampoo (Fall Fight 90ml) | Garnigr Conditioner (40g) Free |
| 25. Garnigr shampoo + oil (2in1)180ml | Garnigr Conditioner (90g) Free |
| 26.Reebonn Fairness Cream(100ml) | Reebonn Fairness Cream(50ml) Free |
| 27. Garnigr shampoo (Long & Strong 90ml) | Garnigr Conditioner (40g) Free |
| 28. Garnigr Hair Colour | Face Wash Free |
| 29.Loreal Sampoo (Total Repair 180ml) | Loreal Conditioner (90g)Free |
| 30. Loreal Sampoo (Total Repair 180ml) | Loreal Conditioner (180g)Free |
| 31.Clean &Clear Face Wash (100ml) | Clean &Clear FaceWash (20g)Free |
| 32. Reebonn Fairness Cream (50ml) | Reebonn Body Lotion (60ml) Free |
| 33. Good Knight Liquid (60 Night) | Vim Soap (100g)Free |
| 34.Harpic (500ml) | Dettol Soap (70g) Free |
| 35.Dash (Toilet Cleaner 500ml) | Toilet Brush Free |
| 36.Kleen(Toilet Cleaner 500ml) | Toilet Brush Free |
| 37.Dash (Toilet Cleaner 500ml) | Safematic |
| 38.Lysol (3 in 1) 950ml | Dettol Soap (70g) Free |
| 39.Air Wick-Air Freshener | Kitchen Cleaner |
| 40.Dettol-Hand Wash | Shoe Polish |
| 41.Reebonn Shampoo (200ml) | Reebonn Face Wash (30ml) Free |
| 42.Reebonn Shampoo (100ml) | Reebonn Face Wash (30ml) Free |
| 43. Good Knight Advance | Vim Soap (100g)Free |
| 44. Reebonn Shampoo (100ml) | Reebonn Conditioner (30ml) Free |
| 45. Garnigr shampoo (Normal Care 90ml) | Garnigr Conditioner (40g) Free |
| 46. Reebonn Shampoo (200ml) | Reebonn Face Wash (30ml) Free |
| 47. Natures Secrets FaceWash(100ml) | Natures Secrets Body Lotion free |
| 48. Diana Chocolate (150g) | Diana Choco Nuts (60g)Free |
| 49. Dettole Soap 2pcs | Dettol Soap Case Free |
| 50. Samaposa 2 Pkt | 1 Pack Free |
| 51. Rainbow link soft fabric Conditioner 1000ml | Calcium Remover 1l Free |
| 52. Sunlight 4 | 1 Lux soap free |
| 53. Rainbow hand wash 300ml | Dish wash powder Free |
| 54. Fortune sunflower oil 1l | Coconut oil 200ml Free |
| 55. T- Sips 800g Tea | Cup Free |
| 56. Cheramy baby cologne 100ml | Cologard 40g Free |
| 57. Delmege tin fish | Delmege soya Free |
| 58. Ruhunu red rice | Ruhunu soya Free |
| 59. Tile Cleaner – 800ml | Pintop – 1L Free |
| 60. Airfreshner – 460ml | Multi duty – 1L Free |
| 61. Dish wash liquid – 500ml | Dish wash powder 250g Free |
| 62. Safe matic – 800ml | Pine fresh Free |
| 63. Comox tuff | Brush & Dishwash bar 100g Free |
| 64. 2 Johnson's Baby Cologne 125ml | Johnson's Baby Cologne 125ml |
| 65. Eva 2 Pack | Eva 1 Pack Free |
| 66. Tooth paste -70g | 70g paste free |
| 67. Tooth paste - 40g | 40g paste free |

| பொருள்கள் | குறித்த விலை | எமது விலை | சேமிப்பு |
|---|---|---|---|
| Surf Excel 1Kg | 300/- | 290/- | 10/- |
| Surf Excel (Matic- Front Load) | 395/- | 375/- | 20/- |
| Eco plus Paper Serviettes | 110/- | 70/- | 40/- |
| Pepsi 2250ml | 240/- | 220/- | 20/- |
| 7up 2250ml | 240/- | 220/- | 20/- |
| Maliban Kiri (Milk Powder) 400g | 325/- | 290/- | 35/- |
| Luxpray 400g | 300/- | 280/- | 20/- |
| Anchor 1Kg | 810/- | 770/- | 40/- |
| Kellogg's Cornflakes (400g Original) | 400/- | 370/- | 30/- |
| Koko Krunch Nestle (330g) | 570/- | 540/- | 30/- |
| Horlicks 800g bottle | 635/- | 600/- | 35/- |
| CIC Tin Fish | 240/- | 200/- | 40/- |
| Kist Sauce 400ml | 230/- | 210/- | 20/- |
| Sun quick Orange 840ml | 680/- | 630/- | 50/- |
| Astra 1Kg | 525/- | 500/- | 25/- |
| Astra 250g | 165/- | 155/- | 10/- |
| Layer Cake 400g | 320/- | 280/- | 40/- |
| Layer Cake 310g | 220/- | 190/- | 30/- |

MD ஜாம் வகைகளுக்கு 7% விலைக்கழிவு

மேலும் எமது வியாபார நிலையத்தில் தொடர்ச்சியாக 120க்கு மேற்பட்ட பொருள்கள் விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### ☞ பான்சியகத்தில்

அழகு சாதனப்பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், சமையல் பாத்திரங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் தளபாட வகைகள் ஆகியவற்றை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.

இக்காலப் பகுதியில்

Orange, Philips, Richardson பல்ப் வகைகளுக்கு 10% விலைக்கழிவு
Browns Co செரமிக் பொருள்களுக்கு 15% விலைக்கழிவு

Rainco பொருள்கள் உட்பட பான்சியகத்தில் ரூபா. 5000/- மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு Rainco குடை ஒன்று இலவசம்.

Telesonic Fan கொள்வனவு செய்பவர்களுக்கு Torch ஒன்று இலவசம்

தெரிவு செய்யப்பட்ட

**மின்சாதனப் பொருள்களுக்கு 5% விலைக்கழிவு**
**அன்பளிப்பு பொருள்களுக்கு 5% விலைக்கழிவு**

### ☞ புடைவையகத்தில்

புதுவருடத்தினை முன்னிட்டு அனைத்து வயதினருக்கும் ஏற்ற புடைவை வகைகள் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும். இத்துடன் ரூபா 1,500/= இக்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு Tசேட் அன்பளிப்பாக வழங்கப்படும். இத்துடன் சிறப்பு மலிவு விற்பனையும் இடம்பெறும்

இத்துடன் 2 மாதத்தில் 25,000/- இக்கு கொள்வனவு செய்பவர்களுக்கு 500/- பெறுமதியான அன்பளிப்பு உறுதிச்சீட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

**கடந்த தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தெரிவுசெய்யப்பட்ட முதன்மை வாடிக்கையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று (03/04/2013) புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு எமது மண்டபத்தில் நடைபெற உள்ளது.**

**(TCT சொர்ணாம்பிகை மண்டபம்)**

*"மலரும் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட*
*ரீசீரீ பல்பொருள் விற்பனை நிலையத்திற்கு வாருங்கள்"*

**எம் முதற்பணி அறப்பணியாகும்**

## ரீசீரீ மல்ரி ரேட் சென்ரர்

527, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

021 745 1895 / 021 222 8025 / 077 751 1285

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை கணேசமூர்த்தி



காந்தியூர், புலோலியைப் பிறப்பிடமாகவும், இல. 304, பாரதி நகர், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கணேசமூர்த்தி 02.04.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பசுபதி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் குரும்பை கட்டி, புலோலியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**கிணற்றடி வைரவர்
கோயிலடி, குரும்பைகட்டி,
புலோலி.
0779558160.**

(35317)(10.6.7)

**தகவல்:
மனைவி
(க.பொன்னம்மா)**

## பத்தாவது ஆண்டின் பதிவில்

*தாயின் மடியில்*
*08 * 08 * 1985*



*காலன் பிடியில்*
*03 * 04 * 2003*

### *அமரர் செல்வன் மரியதாஸ் பிரதீபன்*

*எண்ணிப் பார்க்கையிலே பதறுதே நெஞ்சம்
பத்தாண்டு சென்றதென்று பாரினில் நீ இல்லையே
பார்த்து உவகை பூப்பதற்கு இன்றுபோல் உள்ளதே
காலன் உனைக் கவர்ந்து சென்றது நிற்கவில்லை விழிநீர்
மறக்கவில்லை உன்முகம் பதறுதே நெஞ்சம்
பார்ப்போமா மறுபடியும் மீளாத் துயிலில் நீ
மகனே பிரதீபா ஆறாத்துயரில் நாம்*

பங்கஸ் லேன், அல்பா
மிக்ஸர்லேன், மானிப்பாய்.

(35608)

**குடும்பத்தினர்.**

## சீர்மிய மன்றம் ஆரம்பம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சீர்மிய மன்ற ஆரம்ப விழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவர் பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதனும் கலந்துகொள்வர். (ந)


## விற்பனைக்கு

டொல்பின் வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **077 6506492** (35616) (14, 16)

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள வீட்டுக்கு வந்து அல்லது தங்கி நின்று வீட்டுவேலை செய்ய பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: **0772-768470** (35605) (10,6,7)

## அனெக்ஸ் வாடகைக்கு

யாழ். நகரில், பிரதான வீதிக்கு அருகில் படிக்கும் / வேலைபார்க்கும் பெண்களுக்கு பொருத்தமான அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: **0772-768470** (35604) (10,6,7)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

றொட்வீலர் டெல்மேசன், டொபோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **0754985400** (சி/8054) (10,6,7)

## வேலையாள் தேவை

பாம் ஒன்றில் வேலைசெய்வதற்கு ஆண் வேலையாள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புக்கு: **மல்ரி பாம்
61, இராமநாதன் றோட்
யாழ்ப்பாணம்.
075 498 5400** (சி/8055) (10,6,7)

## செஞ்சோலை சிறுவர் இல்லத்துக்கு பராமரிப்பாளர்கள் தேவை

உடனடியாக எமது சிறுவர் இல்லங்களுக்கு ஆண்/பெண் பராமரிப்பாளர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:
தொ.இல:
0715354504, 0213734848
மின்னஞ்சல் முகவரி:
nerdo2010@gmail.com** (26289) (10,6,7)


## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(மணிமாமா-மிருசுவில் வடக்கு)



அல்லும் பகலும் எம்மோடு உறவாடினீர்
ஆயிரம் உறவுகள் இருந்தும் ஆட்டம் கண்டீர்?
நேற்றுக் காலை வரை கைபேசியில் கதை பேசினீர்
கள்ளம் கபடம் அற்ற உனை காலனவன் கவர்ந்தது ஏனோ?
**அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**மாஸ்ரர் குடும்பம்.
நீர்வேலி.**

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி கதிரவேல்

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி கதிரவேல் நேற்று(02.04.2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் சிவசம்பர்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா -செல்லமுத்து தம் பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரவேலின் (ஆசிரியர்), அன்பு மனைவியும், குலமணிதேவி, காலஞ்சென்ற சண்முகானந்தன் மற்றும் நித்தியானந்தன்(கிராமசேவையாளர்), சோதிமணி, காலஞ் சென்ற சுத்தானந்தன் மற்றும் சிவானந்தன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், சுப்பிரமணியம்(இளைப்பாறிய லிகிதர்), கமலாவதி, அன்னலட்சுமி, காலஞ்சென்ற சிவதாசன் ஆகியோரின் மாமியும், சுபத்திரா, சந்திரிக்கா, சுதர்சன், சர்மினி, தயாளினி, ஹரிமர்த்தனன், ஹரிவேலாயுதன், லோகநாதன், சிவரஜனி, மதனமோகனராஜ், சிவசக்தி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.04.2013) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடா கடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கன்னிமார் கோயிலடி,
குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

**தகவல்:**
ஆ.சுப்பிரமணியம்
(இளைப்பாறிய லிகிதர்)
க. நித்தியானந்தன்
(கிராமசேவகர்)

## மரண அறிவித்தல்

### திருமதி நிர்மலாதேவி கிருபாகரன்



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலாதேவி கிருபாகரன் கடந்த (29.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியநாயகம்(செல்லையா)-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், கிருபாகரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், நிலக்ஷன், நிருஜன் ஆகியோரின் அன்புத் தாயும், வர்ணகுலசிங்கம், அயிலாண்டதேவி, சந்திரகுமார் (நியூ சன்யோ, சுன்னாகம்), காலஞ்சென்ற யோகநாதன்(யோகன் களஞ்சியம் சுன்னாகம்) மற்றும் தயாரஞ்சன்(பிரான்ஸ்), பிரமிலாதேவி, ஜெகநாதன் (சுவிஸ்), கௌசலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(04.04.2013) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும். மற்றும் சண்டிலிப்பாயில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

**தகவல்:
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் செல்வராசா



பூநகரி, செட்டியகுறிச்சியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வராசா நேற்று முன்தினம் (01.04.2013) திங்கட்கிழமை சென்னை, வலசரவாக்கத்தில் காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், அனுராதா, அனுசுயா, குருமூர்த்தி, இராஜகுரு, காலஞ்சென்ற அனுராஜினி மற்றும் ஹரீஸ்குமார், குமணன், டிலீசா, ஸ்ரீராஜன், கேதாஸ்ரீ ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரத்தினம், ஜெயபாலன், தர்மினி, ரஜிதா, பிரியா, சுதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற சிந்துஜா மற்றும் துஜந்தா, பகீர், நிஜந்தா, நிலானி, தேனுஜா, ஜெனுசன், கிசானி, அஸ்வினி, ஆதவன், அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், சபாரத்தினம், சேதுராஜா, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் லோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புவனேஸ்வரி, புனிதாம்பிகை, உலகநாதன், கமலாம்பிகை, ஜெயலட்சுமி, நந்தகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

76, Rukmani Devi Street,
Indranagar, Valasaravakkam,
CHENNAI, 87,
9962768677 - Moorthy
9176729084 - Kumanan

(C/8059)(10.14.16)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**மனம் மகிழ 17.03.1940**

**மனம் நெகிழ 04.03.2013**



*இமை மூடித் திறப்பதற்குள் காலன்வன்
உமைக் கவர்ந்தானோ? அப்பா!
முற்றத்தில் நின்று முகம் மலர்ந்து
சிரிப்பது போல் காட்சிபல விரிகிறதே
அன்பான அப்பாவே! எமைப் பிரிந்து
31 தினங்கள் கழிந்தனவோ?
துயர் சுமக்கும் இதயத்துடன்
விழிநீர் சொரிகின்றோம் அப்பா!*
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த

*அமரர்* **ஆறுமுகம் மார்க்கண்டு** *(சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தலைவர், சித்த மருத்துவ உற்பத்தி விற்பனை வைத்தியசேவை சங்கத் தலைவர்)*

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.04.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்த நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (சி/8060)

மீசாலை மேற்கு, மீசாலை.

**நீங்கா நினைவுகளுடன் -குடும்பத்தினர்.**

## வலிகாமம் வலய கூடைப்பந்து

# பரபரப்பான இறுதிப் போட்டியில் வாகை சூடிய இராமநாதன் கல்லூரி

**மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் மோதிக் கொண்டன.**

வலி. வடக்கு, ஏப். 3

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் பலத்த போராட்டத்தின் பின்னர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வலயச் சம்பியனானது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் சமபலமும், அனுபவமும் கொண்ட அணிக்ளாக இருந்ததால் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

போட்டி ஆரம்பமாகியதும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை முன்னிலை பெறத் தொடங்கியது. நான்கு கால் பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப்போட்டியில் முதல் கால் பாதி ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை 13:12 புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் கால் பாதி ஆட்டத்திலும் 04:03 புள்ளிகளுடன் தொடர்ந்தும் பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆதிக்கமே நீடித்தது.

முதல் இரண்டு கால் பாதி ஆட்டத்திலும் பின்தங்கிய இராமநாதன் கல்லூரி வீராங்கனைகள் மூன்றாவது கால் பாதி ஆட்டத்தில் எழுச்சி பெற்றனர். இந்த நிலையில் யாரும் எதிர்பாராவண்ணம் 11:4 புள்ளிகளுடன் மூன்றாவது சுற்றை மிக இலகுவாக இராமநாதன் கல்லூரி கைப்பற்றியது.

நான்காவது கால் பாதி ஆட்டத்திலும் சிறப்பாக ஆடி 7:3 என்னும் புள்ளிகளைப் பெற்றது இராமநாதன் கல்லூரி.

ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை 33:24 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று வலிகாமம் வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை உடுவில் மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது.

இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சார்பில் பெறப்பட்ட 24 புள்ளிகளையும் சி.கிரிசாந்தினி பெற்றுக் கொண்டார்.

இராமநாதன் கல்லூரி சார்பில் குணதீபா 13 புள்ளிகளையும், சுலோசனா 9 புள்ளிகளையும், ஜஸ்வர்யா 8 புள்ளிகளையும், விஜயந்தினி 3 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (ங-86)

# புதுக்குடியிருப்பில் பூப்பந்து வாகை சூடிய அணிகள்

யாழ்ப்பாணம், ஏப்.3

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டியில் ஆடவர் பிரிவில் விக்கினேஸ்வர விளையாட்டுக்கழகமும் மகளிர் பிரிவில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் வாகை சூடின.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற்கள் அடிப்படையில் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

பின்னர் இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி விளையாடியது.

இதில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற்கள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ங-23)

# புதுக்குடியிருப்பு பெரு விளையாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.3

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான பெரு விளையாட்டுக்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு-

கபடி

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் -இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்

இரண்டாமிடம்- விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம்

**பெண்கள் பிரிவு**

முதலாமிடம் -இரணப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்

இரண்டாமிடம் -வண்ணன் விளையாட்டுக்கழகம்.

கிரிக்கெட்

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் - செந்தாமரை விளையாட்டுக்கழகம்

இரண்டாமிடம்- சுப்பர்றாங் விளையாட்டுக்கழகம்

**பெண்கள் பிரிவு**

முதலாமிடம் -வண்ணன் விளையாட்டுக்கழகம்

இரண்டாமிடம்- இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

எல்லே

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் -இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்

இரண்டாமிடம் -சுப்பர்றாங் விளையாட்டுக் கழகம்.(ங-23)

# ஆடவர் பிரிவில் வளர்மதி மகளிரில் சென்.அன்ரனிஸ்

## புதுக்குடியிருப்பு கரப்பந்தில் சம்பியன்



யாழ்ப்பாணம், ஏப்.3

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் வளர்மதி விளையாட்டுக்கழகமும் பெண்கள் பிரிவில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்று சம்பியனாகின.


முதலாவதாக இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வளர்மதி விளையாட்டுக்கழக அணி 2:1என்ற செற் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

அடுத்து இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்திலும் வளர்மதி அணியும் இரணப் பாலை சென்.அன்ரனிஸ் அணி யும் ஒன்றையொன்று எதிர்த்து ஆடின.

இதில் வளர்மதி விளையாட்டுக்கழக அணி முதல் இரண்டு செற்களையும் தன்வசமாக்கி சம்பியனானது. (ங-23)

# தாச்சி இறுதியாட்டம்





யாழ்ப்பாணம், ஏப்.3

கைதடி விநாயக சனசமுக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற வலிகாம பிரிவுக்குட்டபட்ட கழகங்களுக்கு இடையிலான தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன் கிழமை இரவு மின்னொரளியில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புதுமடம் வைகரை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது .

இறுதியாட்டதிற்கு பிரதம விருத்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார். (ற-23)

# இ.போ.ச. வடபிராந்திய அணி மூன்றாமிடத்தை தனதாக்கியது

யாழ்ப்பாணம்,ஏப்.3

இலங்கைப் போக்குவரத்து சபையின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், அகில இலங்கை போக்குவரத்து சபையின் 21ஆவது விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாகவும் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் மூன்றாவது இடத்தை இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய அணி தனதாக்கிக்கொண்டது.

மட்டக்களப்பு அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற இந்தத் தொடரின் மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய அணியை எதிர்த்து இலங்கை போக்குவரத்து சபையின் கிழக்குப் பிராந்திய அணிமோதிக் கொண்டது.

பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய அணி 4:3 என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்றது. (ங-23)

# நோயல் விமேலேந்திரன் வெற்றிக்கிண்ண '20/20' கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பம்

**அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெறும் '20/20' ஆட்டங்களே ஆரம்பமாகவுள்ளன.**

யாழ்ப்பாணம்,ஏப்.3

நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்துக்காக அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையே, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவை 6 ஆவது தடவையாக நடத்தும் '20/20' கிரிக்கெட் சுற்றுப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டைதொழில்நுட்பக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் இன்று புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரில் மோதவுள்ள அணிகள் விவரம் - கொழும்பு வெஸ்லிக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி , கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, அனுராதபுரம் மத்தியகல்லூரி, திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலம், கைதடி நவீல்ட் பாடசாலை, மட்டக்களப்பு பெரிய கல்லாறு மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் போஸ்கோ கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், மாத்தளை இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி. (ங-23)

# இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நக்கீரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பி.ப. 3.30 மணி

நியூட்டன் வி.க எதிர் அல்வாய்பாரதி வி.க

பி.ப. 4.30 மணி

கரைவைச்சுடர் வி.க எதிர் சிவானந்தா பி அணி.

★ ★ ★

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்ட்ங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு


பி.ப 3.30 மணி

குப்பிளான் விக்கினேஸ்வரா 'எ' அணி எதிர் மல்லாகம் இளம்புயல்வி.க. அணி

பி.ப 4.30 மணி

மல்லாகம்இளந்தென்றல் எ அணி எதிர் தெல்லிப்பழை நண்பர்கள் எ அணி (ற-23)

# ஐ.பி.எல். கோலாகலமாக ஆரம்பம்



கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்து ஆறாவது ஐ.பி.எல். தொடரின் தொடக்க விழா நேற்று கொல்கத்தாவில் கோலாகலமாக நடைபெற்றது.

# சத்திர சிகிச்சை தேவையில்லை

குடலிறக்க நோய்க்கு சத்திர சிகிச்சை தேவையில்லை என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் என்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டுள்ளார் பாகிஸ்தான் சுழற் பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல்.

பாகிஸ்தான் அணியின் வெற்றிகரமான சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல். அவர் அண்மையில் தென்னாபிரிக்கா சென்ற பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றிருந்தார். ஒருநாள் தொடரின்போது இவருக்கு வயிற்று வலி ஏற்பட்டது. அதையடுத்து வைத்தியர்களின் அறிவுரைப்படி இவருக்கு குடலிறக்க சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்போவதாக இருந்தது.

எனினும் தற்போது அதை மருந்துகள் மூலம் குணப்படுத்லாம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் என்று அஜ்மல் கூறுகிறார்.

இதுகுறித்து சயீத் அஜ்மல் கூறுகையில்;

''தென்னாபிரிக்கா தொடருக்கு பின் லாகூரில் கடந்த வாரம் இறுதியில் முழுமையான உடல் பரிசோதனை மேற்கொண்டேன். அதில் டாக்டர்கள் தற்போது உள்ள நிலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளத் தேவையில்லை. மருந்துகள் மூலம் குணப்படுத்திவிடலாம் என்று தெரிவித்துள்ளனர். சத்திர சிகிச்சையை நினைத்து முதலில் பயந்தேன். தற்போதுதான் நிம்மதி அடைந்துள்ளேன். இங்கிலாந்தில் நடக்கும் சம்பியன்ஸ் டிராபி தொடருக்கு முன் பூரணமாகக் குணமடைந்துவிடுவேன்''- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தமிழகத்தை தவிர வேறு மாநிலங்கள் எதிர்க்கவில்லை

**– சங்ககார**



இந்தியாவில் தமிழகத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் இலங்கை வீரர்களை அன்புடன் வரவேற்றுள்ளன என்று இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரும், ஹைதராபாத் சண் றைசர்ஸ் அணியின் தலைவருமான குமார் சங்ககார தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இலங்கை வீரர்கள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியாது என்ற நடைமுறை காரணமாக இலங்கை வீரர்கள் இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கான தயார்படுத்தல்கள் கடினமாக அமைந்தது என்று குறிப்பிட்ட குமார் சங்ககார, எனினும் தாங்கள் இந்தியாவுக்கு ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றவே சென்றிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த சங்ககார,

எழுந்துள்ள குழப்ப நிலை தமிழ்நாடு என்ற மாநிலத்திற்கும், இலங்கைக்குமிடையிலேயே ஏற்பட்டுள்ளது. அந்தக் குழப்பம் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் ஏற்பட்டிருந்தால் நாங்கள் இந்தியன் பிறிமியர் லீக் தொடரைத் தவிர்த்திருக்க வேண்டியிருந்திருக்கும். எனினும் தமிழகத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் எம்மை மிகவும் சிறப்பாக வரவேற்றுள்ளன. – என்றார்.

தமிழகத்தில் எழுந்துள்ள இலங்கைக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக இலங்கை வீரர்கள் தமிழகத்தில் இடம்பெறும் இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகளில் பங்குபற்ற மாட்டார்கள் என இந்தியன் பிறிமியர் லீக் அமைப்பு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)



# ஷாருகானுக்கு அனுமதியில்லை

மும்பை வான்கடே மைதானத்தில் நடக்கவுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின்போது நடிகரும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளருமான ஷாருக்கான் இந்த ஆண்டும் அனுமதிக்கப்பட மாட்டார் என்று மும்பை கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு வான்கடே மைதானத்தில் நடந்த ஐ.பி.எல். போட்டியின்போது, மது போதையில் வந்த ஷாருக்கான், த்ன்னை அனுமதிக்காத பாதுகாவலரிடம் தகராறு செய்ததுடன் தகாத வார்த்தைகளாலும் திட்டினார். இதை தடுக்க வந்த அதிகாரி ஒருவரையும், சரமாரியாக திட்டினார். இந்தச் சம்பவம் அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தனது அநாகரீகமான செயலுக்காக ஷாருக்கான் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அப்போது கூறப்பட்டது. எனினும் தான் மதுபோதையில் வரவில்லை என்றும் யாரிடமும் தகராறு செய்யவில்லை என்றும் ஷாருக்கான் மறுத்தார்.

அதையடுத்து மும்பை கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகக் குழு கிரிக்கெட் மைதானத்துக்குள் ஷாருக்கானை ஐந்து ஆண்டுகளுக்கு அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்தது.

இந்த நிலையில் தற்போது ஐபிஎல் போட்டிகள் ஆரம்பமாக உள்ளன. அதில் மே 7ஆம் திகதி ஷாருக்கானின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, மும்பை அணியுடன் மோதும் ஆட்டம் வான்கடே கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதனால் ஷாருக்கான் வான்கடே மைதானத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், ஷாருக்கானுக்கு விதிக்கப்பட்ட தடை குறித்து மும்பை கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகக் குழு நேற்றுமுன்தினம் கூடி விவாதித்தது.

இதில் ஏற்கனவே விதிக்கப்பட்ட ஐந்து ஆண்டு தடையை தொடர்ந்து நடைமுறையில் வைத்திருப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மும்பை கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ரவி சாவந்த் கூறுகையில்;

''ஐ.பி.எல்லுடன் நாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, அந்த அணியின் அங்கீகரிக்கப்பட்ட வீரர்கள் மற்றும் அதிகாரிகள் வான்கடே மைதானத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆனால், தடை செய்யப்பட்ட நபர்கள் யாரையும் அனுமதிக்க மாட்டோம். நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இது தீர்மானிக்கப்பட்டுள்ளது.இது குறித்து மேலும் அதிகம் பேச விரும்பவில்லை''–என்றார்.



பிரேஸிலில் உள்ள ரியோ டி ஜெனிரோ நகரில் வரும் 2016 ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. அதைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் ரியோ டி ஜெனிரோவில் உள்ள கோபாகபானா கடற்கரையில் நடைபெற்ற 50 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்காவின் உசைன் போல்ட் முதலிடம் பிடித்தார். பிரேஸிலின் புரூனோ லின்ஸ் இரண்டாவது இடத்தை பிடித்தார்.

# சச்சினுடன் விளையாடுவது உற்சாகம் தருகிறது

ஐ.பி.எல். தொடர் மூலம் சச்சினுடன் விளையாடும் வாய்ப்பு கிடைத்திருப்பது உற்சாகம் அளிக்கிறது என்று இளம் வீரர் பர்வேஸ் ரசூல் தெரிவித்தார்.

ஐ.பி.எல்., தொடரில் புனே வாரியர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட சகலதுறை வீரரான இவர், சுழற்பந்துவீச்சாளராகவும் அசத்துகிறார். கடந்த மாதம் ஆஸ்திரேலியா லெவன் அணிக்கெதிரான பயிற்சிப் போட்டியில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் 'பிரசிடென்ட் லெவன்' அணிக்காக விளையாடிய இவர் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

தற்போது ஐ.பி.எல்., தொடரில் புனே வாரியர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். இதன்மூலம் காஷ்மீர் மாநிலத்தில் இருந்து ஐ.பி.எல். போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட முதல் வீரர் என்ற பெருமை பெற்றார் ரசூல். இது குறித்து அவர் கூறுகையில்;

''முதன்முதலில் ஐ.பி.எல். தொடரில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. ஐ.பி.எல். தொடர் என்னை போன்ற இளம் வீரர்கள் தங்களது திறமையை நிரூபிக்க உதவும் சாதனை மேடை. இந்தத் தொடரின் மூலம் உலகின் தலைசிறந்த முன்னணி வீரர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைக்கும்.– என்றார். (ற)

# இலங்கை-பாகிஸ்தான் இடையே மேலும் வலுவடைகிறது உறவு

## வெளிவிவகாரச் செயலர் கொழும்பு வருகிறார்

இஸ்லாமாபாத், ஏப். 3

இந்தியாவுடனான இலங்கையின் உறவுகளில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலர் ஜலீல் அப்பாஸ் ஜிலானி, நாளை மறுதினம் வியாழக்கிழமை இலங்கை வருகிறார்.

பாகிஸ்தான் - இலங்கை இடையிலான மூன்றாவது அரசியல் கலந்துரையாடலில் இவர் பங்கேற்கவுள்ளதாகப் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரையும் பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலர் சந்திக்கவுள்ளதாக சீனச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரு தரப்பு விவகாரங்கள் குறித்து, இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகமவுடன் முக்கிய கலந்துரையாடலை நடத்தவுள்ள பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலர் ஜலீல் அப்பாஸ் ஜிலானி, இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

பாகிஸ்தான் -இலங்கை இடையிலான கடைசி இருதரப்பு பேச்சு, 2007 ஆம் ஆண்டு ஜூலை 17 தொடக்கம் 19 வரை இஸ்லாமாபாத்தில் நடைபெற்றிருந்தது.

ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு இந்தப் பயணம் உதவியாக அமையும் என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தைத் தோற்கடிக்க, பாகிஸ்தான் தீவிர முயற்சிகளை மேற்கொண்டது.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரபானி கர் உத்தரவின் பேரில், இஸ்லாமிய ஒத்துழைப்பு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு ஜெனிவாவில் உள்ள பாகிஸ்தான் தூதுவர் பலமுறை கூட்டங்களை நடத்தியிருந்தார்.

இலங்கைக்கு ஆதரவாக இஸ்லாமிய நாடுகள் வாக்களித்தற்கு பாகிஸ்தானே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை - இந்தியா இடையிலான உறவுகளில் நெருடல் ஏற்பட்டுள்ள சூழலில், இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் பாகிஸ்தான் தீவிர கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# குருதித்தானம் செய்யுங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏ, பி, ஓ நெக்கட்டிவ் குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. குருதித்தானம் வழங்கத் தகுதியுடையவர்கள் வைத்தியசாலைக்கு வந்து அதனைச் செய்யுமாறு வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு கேட்டுள்ளது. (த-4)

# குளத்தில் குளித்தவர் சேற்றில் புதைந்து சாவு

தென்மராட்சி, ஏப். 3

கோயில் குளத்தில் குளிக்கச் சென்றவர் சேற்றில் புதைந்து உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுப் பகல் மிருசுவில் வடக்குப் பகுதியில் இடம்பெற்றது.

நாட்டில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக குளத்தில் நீராடச் சென்ற மிருசுவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது-70) என்பவரே இவ்வாறு சேற்றில் புதைந்து உயிரிழந்தார்.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார் சடலத்தை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் சாவகச்சேரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-9-400-ரி)

# மேர்வின் சில்வாவின் செயலாளர்கள் இருவருக்குப் பிணை

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவலவின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஒருங்கிணைப்புச் செயலாளர்கள் இருவரையும் பிணையில் செல்ல கடவத்தை நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

சரத் குமார வீரசிங்க மற்றும் சமன் நிஷாமன் ஆகிய இருவருமே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களாவர்.

மேற்படி கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த மேலும் மூன்று சந்தேகநபர்களை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)


**கார் விற்பனைக்கு**

18 - XXXX

தொடரிலக்கமுடைய

NISSAN Palsure

கார் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771169182


## மரண அறிவித்தல்



### ஆரோக்கியநாதன் இம்மானுவேல் இக்னேசியஸ் இரத்தினராசா

*(சின்னபவா)*

*(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் - மண்டை தீவு)*

மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆ.இ.இ. இரத்தினராசா நேற்றுமுன்தினம் (01.04.2013) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர் மரியநாயகி (மாணிக்கம்) தம்பதியரின் அருமைப் புத்திரனும், காலஞ்சென்றவர்களான அந்திரேஸ்பிள்ளை (பொன்னுத்துரை) தங்கரட்ணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், மேரி மாகிறேற்றம்மாவின் (செல்வமலர்) அன்புக் கணவரும், Dr.ஆரோக்கியநாதர் (லண்டன்), நவரட்ணராஜா (ஓய்வுநிலை படவரைஞர்- மட்டக்களப்பு) ஆகியோரின் சகோதரரும், Dr.மனோ (லண்டன்) காலஞ்சென்ற ராஜேஸ் மற்றும் பொன்றோஸ்மலர் (பெனடிக்ரா- ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்- மன்னார்) ஆகியோரின் மைத்துனரும், திலகன், துளசி, கஸ்தூரி, காலஞ்சென்ற திருக்குமார் (திரு) மற்றும் Dr.தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷா, அருள்தேவன் (பிரபு), நரேஸ் செல்வன் (நரா) ஆகியோரின் பாசமிகு மாமனும், குறிஞ்சிமலர், அறிஞன், இளநிலா, நிர்மலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.04.2013) வியாழக்கிழமை மு.ப 10.00மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி, மாதகல்.
T.P0770692062

(35611)

தகவல்:
குடும்பத்தினர்.

# வெப்பநிலை மேலும் அதிகரிக்கும்

கொழும்பு,ஏப் 3

இலங்கைக்குச் சூரியன் நேரே உச்சம் கொடுக்குமென்று எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை முழுவதும் இந்த நாள்களில் காணப்படுகின்ற வெப்பநிலை எதிர்வரும் நாள்களில் மேலும் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 5ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதிவரை இலங்கையின் மேல் சூரியன் உச்சம் கொடுப்பதால் மேலும் வெப்பம் அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதத்தில் இது வழமையான தோற்றப்பாடெனவும் அவர் கூறினார்.

இரத்தினபுரியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அதிகூடிய வெப்பநிலை 35.8 பாகை பதிவாகியுள்ளது. இதேவேளை, அநுராதபுரத்தில் 32.9 பாகை வெப்பநிலையும் கொழும்பில் 32 பாகை வெப்பநிலையும் பதிவாகியுள்ளது.

நுவரெலியாவில் வெப்பநிலை 23 பாகைக்கு அதிகரித்தமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். இதேவேளை, பதுளை மற்றும் பண்டாரவளையில் கூடிய வெப்பநிலையாக முறையே 26, 29 பாகையாகக் காணப்பட்டது. (த)


**ஆங்கிலம்**

3 மாத சனி, ஞாயிறு கற்கை நெறி

**06.04.2013 சனிக்கிழமை**

1.காலை 8.00 – 10.00 2.காலை 10.00 - 12.00

3.மாலை 1.00 - 3.00 4.மாலை 3.00 - 5.00

06.04.2013 இணையும் அனைவருக்கும் பயிற்சிப் புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்

எமது பயிற்சியில் இணையும் எவராவது மூன்று மாத முடிவில் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்

SAAMSON Spoken English 279 ஆஸ்பத்திரி பின்புறம் யாழ்ப்பாணம். 0776214567

**Personal and Group Classes**

இரசாயனவியல் (Chemistry) பௌதீகவியல் (Physics) துரித மீட்டல் வகுப்புக்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (சிறந்த பெறுபேற்றிற்கான உத்தரவாதம்) (35595)

தொடர்பு- 0783875458, 0772487781

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)

பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691 (20772) (15-14)

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது**

**சுற்றாடல் சங்கமம்**

(சுற்றாடல் சார்செயற்பாடுகள்) பயிற்சியும்,பாடங்களும் அடங்கிய நூல்

ஆசிரியர்: S.சுதர்சன் (வவுனியா)

வெளியீடு : யுனிலங்காஸ் 077 6258778 , 011 4014438

நாடெங்கிலும் எல்லா புத்தகசாலையிலும் கிடைக்கும்

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-

advt@uthayan.com

0215671111

**விசேட கருத்தரங்கு**

**வடமாகாண கணக்காளர் போட்டிப் பரீட்சைக்கானது**

கணக்காளர்கள் கணக்காய்வு அதிகாரிகள் மற்றும் துறைசார் விரிவுரையாளர்களினால் 6 வினாத்தாள்கள் தொடர்பான விளக்கமும் கடந்தகால வினாத்தாள்கள் மீட்டலும்.

பிரிவு I -சனி, ஞாயிறு காலை 9.00- 4.00 வரை, ஆரம்பம்- 06.04.2013 காலை 9.00

பிரிவு II -திங்கள் முதல் வெள்ளி வரை 5.00 - 7.00 மணி வரை, ஆரம்பம் -05.04.2013 மாலை 5.00

தொடர்பு- 0754164564

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்

**மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு**

BY- அன்பு

* வினாக்களை எதிர்கொள்ள கையாள வேண்டிய உத்திகள்
* பரீட்சை நோக்கில் முக்கியமான விடயங்களுக்கான மீட்டல்
* DBlock, Resonance போன்ற 25க்கு மேற்பட்ட விடயத் தலைப்புகள்
* சேதனத் தாக்கப் பொறிநுட்பங்கள்
* மாற்றீடு செய்வது எப்படி

இன்று

ஆரம்பம் - 03.04.2013

புதன் 3.00 P.M

NEW Science Centre

மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தி அருகில்)

**மணல் மண் வேண்டுமா?**

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?

★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?

★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிரக்டர் 20,500/-

தொடர்பு:- ராம் 072 63 78 546 (23-34166)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

The Only Official French Language Centre in Jaffna

பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு **French Embassy** ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள *ஒரேஒரு* நிறுவனம் **Alliance Française de Jaffna***மட்டுமே.*இச்சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலியநாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.மேலும் தரமான **CERTIFICATE**ஐ பெறுங்கள்.

உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021.222.8093

61, Kachcheri-Nallur Road, Jaffna E-mail: alliancejaffna@yahoo.com

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மனிதன்
பயனின்றி
அழியவே
கூடாது
-கார்ல்மார்க்ஸ்

# புதன் பொய்கை


A

உதயன் | ஏப்ரல் 03 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# மாற்று ஆற்றல் உடையோருக்கான கல்வி

த.சிவகுமார்,
விரிவுரையாளர்,
விசேட கல்வித்துறை,
தேசிய கல்வியியற்கல்லூரி.

மாற்று ஆற்றல் உடையோர் வீடுகளில் முடங்கிக்கிடக்காது அனைவரும் சாதாரண பாடசாலைகளில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு, அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களைக் கல்வியினூடாக வலுப்படுத்தும்போதே எமது தேசம் வளமடையும்.



மாற்று ஆற்றல் உடையோருக்கான கல்வி வாய்ப்புக்கள், வழிகாட்டல்கள், உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் முறைகள், அவர்கள் பயன்படுத்தும் கருவிகள் பற்றிய அறிவு என்பன அனைவருக்கும் அவசியமானதாகும். விசேட கல்வியின் வரலாற்றுப் போக்குப் பற்றி நோக்கும்போது அதனை நிறுவனமயப்படுத்தல், உதவி பெறும் விசேட பாடசாலைகள், ஒன்றிணைத்தல், விசேட கல்வி அலகுகள், உட்படுத்தல் கல்வி எனவகைப்படுத்த முடியும்.

நிறுவனமயப்படுத்தல் எனும் போது ஐரோப்பியருடைய ஆரம்ப காலப் பகுதியில் 1505-1948 விசேட தேவையுடையோரின் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களை நிறுவனமயப்படுத்தி அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்ட காலப்பகுதியாகும்.

உதவி பெறும் விசேட கல்விப் பாடசாலைகள் என்பது நிறுவனமயப்படுத்தப்பட்ட போது மாற்று ஆற்றல் உடையோரின் ஆற்றல்களை இனங்கண்டு அவர்களுக்கு கல்வி போதிக்க முடியும் எனக்கண்டறிந்து அதன் விளைவாக விசேட கல்விப் பாடசாலைகளை உருவாக்கினர். 1912 ஆம் ஆண்டு கண்பார்வை இழந்தவர்களுக்காக முதன்முதலில் இரத்மலானையில் விசேட பாடசாலை நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1935 ஆம் ஆண்டு கேட்டல் குறைபாடுடைய மாணவர்களுக்கு 'மஹாவெவ' பாடசாலையும் 1956 ஆம் ஆண்டு கேட்டல், குறைபாடு உடையோருக்காக, 'கைதடி நவீல்ட்' பாடசாலையும் அதனைத்தொடர்ந்து இன்று வரை 130 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளும் இலங்கையில் இயங்கி வருகின்றன.

ஒன்றிணைத்தல் பருவம் என்பது விசேட தேவையுடைய பாடசாலைகளில் கற்ற மாணவர்களின் கல்வி ஆற்றல்களை இனங்கண்டு அவர்களில் ஒரு பகுதியினரை சாதாரண பாடசாலைகளில் ஒன்றிணைப்பு செய்தலாகும். முதலில் பார்வைக்குறைபாடுடையோர் 1972 ஆம் ஆண்டு சாதாரண பாடசாலைகளில் ஒன்றிணைப்பு செய்யப்பட்டனர்.

விசேட கல்வி அலகுகள் இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும், அதற்கு விசேட கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் காணப்பட்ட போதும் இன்று வரை அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது. நவீன கல்வியியலாளர்களின் சிந்தனைப் போக்கிலே ஒரு நாட்டில் கல்வி, அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் விசேட தேவையுடையோர் சரியான முறையில் கவனிக்கப்பட்டு அவர்களுக்கான கல்விப் போதனைகளும், வழிகாட்டல்களும் சிறந்த முறையில் அமைதல் வேண்டும். விசேட கல்வி அலகுகள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் ஒரு பாடசாலையில் கற்றலில் இடர்படுகின்ற மாணவர்களின் தேவைகளை அறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டு, அவர்களை மீண்டும் சாதாரண வகுப்பறையில் இணைத்தலாகும். விசேட கல்வி ஆசிரியர் ஒரு வளவாளராகச் செயற்படுதலாகும்.

உலக அளவில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கல்விச் சிந்தனை உட்படுத்தற் கல்வியாகும். உட்படுத்தற் கல்விக்கான கல்வி ஏற்பாடுகளாவன:-

1.1961ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 6 - 14 வயதுக்கு உட்பட்ட சகலரும் பாடசாலைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

2.1990 ஆண்டு சிறுவர் உரிமைகள் சாசனத்தின் படி சகலருக்கும் கல்வி எனும் சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3.உறுப்புரை 1-18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளையாவார். சமவாயத்தில் குறிப்பிட்ட சகல உரிமைகளையும் மாற்று ஆற்றல் உடையோரும் அனுபவிக்க உரிமையுண்டு.


4.உறுப்புரை 23- உடல் உள ஊனமுடைய பிள்ளை, அதன் கௌரவத்தை உறுதிப்படுத்துவதும், சுயநலத்தை ஊக்குவிப்பதும், சமுதாயத்தில் தீவிரமாய் பங்கு கொள்ளக்கூடியதுமான நிலைமைகளில் முழுமையான கண்ணியமான வாழ்க்கையை வாழ உரித்துடையவராவர்.

5.1994 ஸ்பெயின் நாட்டின் சலமன்கா நகரில் 92 நாடுகள் பங்குகொண்டு உருவாக்கிய உட்படுத்தற்கல்வியைஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தி வருதல்.

6.1997 ஆம் ஆண்டு கட்டாயக் கல்வி கட்டளைகளுக்கமைவாக 5-14 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. தற்போது கட்டாயக்கல்வி வயதெல்லை 16 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### உட்படுத்தற் கல்வி

சகல வகையிலும் குறைபாடுகளைக் கொண்ட பிள்ளைகளை, அவர்கள் வாழ்கின்ற சூழலிலே அருகில் உள்ள பாடசாலையில் அதே வயதை ஒத்த மாணவர்களுடன் ஒன்றாக இணைந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தல் உட்படுத்தற் கல்வி ஆகும். அதாவது சகல பிள்ளைகளையும் வேறுபாடின்றி ஏற்றுக் கொள்ளும் இடம் உட்படுத்தற் பாடசாலையாகும்.




உட்படுத்தற்கல்வியில்இணைய வேண்டியோர்;

1.கல்வித்துறையைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள்.

2.இடர்பாடுகளைக் கொண்ட பிள்ளைகள்.

3.சாதாரண மாணவர்கள்.

4.பிள்ளைகளின் பெற்றோர்.

5.அரச பாடசாலை மற்றும் விசேட பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள்.

6.கல்வியுடன் தொடர்புடைய சகல சேவைகளையும் சேர்ந்த அதிகாரிகள்.

7.பாடசாலையின் ஏனைய பணியாளர்கள்

8.பொதுமக்கள்.

மாற்று ஆற்றல் கொண்ட பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய உதவிகள்

1.அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

2.பாடமொன்றின்போது உதவி புரிதல்.

3.சமூகப்பணிகளை ஒழுங்கு செய்யும்போது உதவுதல்

4.வகுப்பறையை விசேடமான வகையில் மாற்றியமைத்தல்.

5.மேலதிக பாதுகாப்புச் சாதனங்களை வழங்குதல்.

6.கலைத்திட்டத்தை இசைவுபடுத்தல்.

7.பொதுவான பாடசாலையில் போதனை சார்ந்த உதவிகள்.

8.பொதுவான வகுப்பறையில் வைத்து விசேட கல்வி ஆசிரியரினால் வழங்கப்படும் உதவிகள்.

உட்படுத்தற் கல்வியினூடாக உள்ளீர்ப்பு செய்யப்படுகின்ற மாற்று ஆற்றல் உடையோரை நாம் ஏனைய மாணவர்களுக்கு ஒப்பானவராகக் கொண்டு செல்ல வேண்டும். அவர்களுக்கான கலைத்திட்டம், மதிப்பீட்டு முறைகள், அடைவுமட்டம் என்பன பற்றி ஆசிரியர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் உட்படுத்தற்கல்வி வகுப்பறையில் கலைத்திட்டம், மதிப்பீட்டு முறை, கற்றல் கற்பித்தல் பாணி என்பன நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாக அமைய வேண்டும். ஒவ்வொரு மாணவர்களதும் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் கல்விப் போதனை வழங்க வேண்டும்.

மாற்று ஆற்றல் உடையோரை, எந்தப் பாடசாலைகளும் எந்த வகுப்பறைகளும் ஒதுக்கிவிட முடியாது. அதற்கான சட்டதிட்டங்கள் உரிமைகள் எல்லாம் அவர்களுக்கு உண்டு. அவர்களின் ஆற்றல்களையும் திறன்களையும் இனங்கண்டு அவர்களை உங்கள் பாடசாலையின் வளமாக மாற்றும்போது உங்கள் பாடசாலைகள் வளர்ச்சியடையும். அவர்களை சுமையாகக் கருதாமல் அவர்களையும் மற்றைய மாணவர்களோடு சேர்ந்து வாழ வழிகாட்டுங்கள்.

உட்படுத்தற்கல்வியின் போது விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பாடசாலைகளின் பணி மகத்தானது. ஏனெனில், இப்பாடசாலைகள் அவர்களை சாதாரண பாடசாலைக்கு உரியவர்களாக உருவாக்கி வழங்கும் பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது.

இவ்வாறு உட்படுத்தற் கல்வியின்போது பாடசாலையில் சேர்ந்து கொள்ளும் மாற்று ஆற்றல் உடையோரை இனங்காணல், அவர்களுக்கான கற்றல் கற்பித்தல் முறைகள், கருவிகளை கையாளும் ஆற்றல், வழிகாட்டல்கள் ஆர்ப்பணிப்புடன் பணியாற்றுதல், அன்பு செலுத்துதல் போன்ற ஆளுமைப் பண்புகளை அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களும் வளர்த்துக் கொள்வதன் மூலம் எமது தேசத்தை வளமாக்கிக் கொள்ள முடியும்.

மீத்திறனும் விசேட நிபுணத்துவமும், அறிவு சார் குறைபாடு, ஓட்டிசத் திருசிய ஒழுங்கினம், நடத்தை ஒழுங்கீனம், உடல் மற்றும் ஆரோக்கியக் குறைபாடு, பேச்சு மற்றும் மொழிசார் ஒழுங்கீனம், கற்றல்குறைபாடு, மனவெழுச்சி நடத்தைப் பிறழ்வுகள், புலன்சார் குறைபாடுகள், தற்சிந்தனை, மெதுவாக உளவளர்ச்சியடைதல், பல்வித இயலாமைகள், வேறு சுகாதாரக் குறைபாடுகள், மூளையில் ஏற்பட்ட பாதிப்பு, உடல் அவயவக் குறைபாடு, மெல்லக்கற்றல் குறைபாடு, தொடர்பாடற் குறைபாடு, மனநிலை பாதிக்கப்பட்டோர், சமூக விரோத நடத்தைகள், ஆக்கத்திறனுடைய பிள்ளை, உளக்குறைபாடுடைய பிள்ளை, பொருத்தமற்ற நடத்தைப் பிரச்சனையுடைய பிள்ளை, அங்கக் கோணல் குறைபாடு, கவனமிழப்பும் பிறழ்வும்.

இவ்வாறான மாற்று ஆற்றல் உடையோர், வீடுகளில் முடங்கிக்கிடக்காது அனைவரும் சாதாரண பாடசாலைகளில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு அவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்களைக் கல்வியினூடாக வலுப்படுத்தும்போதே எமது தேசம் வளமடையும். உட்படுத்தற் கல்வி வெற்றி பெறும். நாம் அனைவரும் அதனை நோக்கிச் செயற்படுவோம். ★

# முதலைகள்



பரந்த இப்பூமியில் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே ஊர்ந்து செல்லும் உயிரினங்களின் தோற்றமும் வளர்ச்சியும் தொடங்கின.இவ்வாறு ஊர்ந்து செல்லும் அதிசயப் பிராணிகளின் வரிசையில் முதலையும் முக்கியத்துவம் பெறுகிறது. முதலைகளில் பல வகைகள் உள்ளன. இவற்றில் மனிதர்களுக்கு நண்பனாக இருக்கும் சாதுவான முதலைகளும், மனிதர்களையே உணவாக உட்கொள்ளும் முரட்டு முதலைகளும் காணப்படுகின்றன. முதலைகள் பெரும்பாலும் தெற்காசியா, வடஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, மடகஸ்கார் ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன.

முதலைகள் விலங்குகள் வகையைச் சேர்ந்தாலும் இவை பாலூட்டி இனம் அல்ல. இவை முட்டையிலிருந்து தான் தோன்றுகின்றன. இவற்றின் முட்டை கோழி முட்டை அளவுதான். சில முதலைகள் முட்டையிடும் காலங்களில் மிகவும் பயங்கரமாகி விடுகின்றன. இம்முதலைகள் நைல் நதிக் கரைகளில் வாழ்கின்றன. முதலைகள் நிலத்தில் சுலபமாக நடந்து செல்ல முடியாததனால் அதிகமாக நீருக்குள்ளே நீந்துகின்றன. இவை நீருக்குள் நீந்தும்போது தலையை மேலெழுப்பியவாறு நீந்தும். இதனால் சுவாசம் இலகுவாக நடைபெறுகின்றது. முதலையின் பற்கள் மிகவும் பயங்கரமான வையாகும். முதலைகள் பயமூட்டுபவையாக இருந்தாலும் இவை வேட்டையாடவும் படுகின்றன. இவை ஏன் வேட்டையாடப்படுகின்றன என்றால் இவற்றின் தோல்கள் வலிமையாக இருப்பதால் அவற்றின் மூலம் சூட்கேஸ், பெட்டி போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

சுவேந்திரா அருச்சுனன், தரம்-9 டி,
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# தூறல்

துளித் துளியாய் மழை தூறல் போல
நமக்கு அரிச்சுவடியில் இருந்து கற்பிக்கும் ஆசானே
நமது தாய் மார்கள் நாம் கல்வி கற்று
கல்வி மானாகத் திகழ பள்ளி அனுப்பி விடுகிறார்கள்
பனை மரம் நுங்கு தருவது பேல
ஆசான் மார் அறிவைக் கற்றுத் தருகிறார்கள்
அறிவு தந்ததும் போதாமல் ஒழுக்கம் மற்றும்
பலவற்றைக் கற்றுத் தருகின்றார்கள் அவர்கள்
எம்மைச் சிறு குழந்தையாகக் கருதுகிறார்கள் நாம்
அந்தப் பள்ளிக்கு பல கௌரவத்தை
பெற்றுக் கொடுக்க வேண்டுமென
ஆசான்கள் நினைக்கிறார்கள்
லக்சுமி செல்வத்தைத் தருவது போல
அறிவை ஊட்டுகிறார் ஆசான்
அவர்களை
வாழ்த்துகின்றோம்



ராகப்பிரியா, தரம்- 6 பி,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

# சிந்தனைக்கு சிறுதுளிகள்

- புண்ணியம் துன்பத்தைக் கொடுக்காது, பாவம் இன்பத்தைக் கொடுக்காது.
- தான் கெட்டாலும் பிறர் வாழ வேண்டும் என நினைப்பவன் தெய்வத் துக்கு சமமானவன்.
- அன்பான வரவேற்பு பாதி விருந்துக்குச் சமன்.
- உயர்ந்தவர்களுடன் நட்புக் கொண்டால் நீ உயர்ந்தவன் ஆவாய்.
- நல்ல கருமங்களைச் செய்யாதவனுடைய செல்வம் தானே அழிந்து விடும்.
- ஒருவனுடைய அறிவை அவன் செய்யும் செயல்களால் அறிய வேண்டும் பேச்சினால் அல்ல.
- குழந்தைக்கும் முதியவர்களுக்கும் கொடுக்கும் மரியாதை கடவுளுக்குக் கொடுக்கும் மரியாதையாகும்.
- ஒரு கதவின் வழியே அநியாயமாக வரும் செல்வம், பல ஜன்னல்கள் வழியே வெளியே சென்று விடும்.
- தத்துவ ஞானி போல் எழுதலாம், பேசலாம், நடப்பது அவசியமாகும்.
- தாய் தந்தையருக்குத் தொண்டு செய்பவன், தவம் செய்ய வேண்டியதில்லை.

க.ரபிதா,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி.




# அநீதி அழியும்



"ஐயோ! நீங்கள் இப்படி அவமானப்பட நான்தான் காரணம். இது எனக்குத் தெரிந்து விட்டது. இந்த அநீதி அடுக்குமா கடவுளே! எனது முறையீட்டைக் கேளாயோ"

சென்ற வாரத் தொடர்.........

அந்த வேலையாளும் போதிசத்துவர் கவனிக்காது இருந்த சமயத்தில் அரசனது கிரீடத்தை அவரது வண்டிக்குள் வைத்து விட்டான். இதற்குள் சுஜாதா அரசன் தன்னையே உற்று உற்றுப் பார்ப்பதைக் கண்டு வெட்கப்பட்டு தலையைத் திருப்பிக் கொண்டாள்.

சற்று நேரத்தில் அரச வீரன் ஒருவன்'' யாரும் இருந்த இடத்தை விட்டு நகராதீர்கள். நம் அரசரின் கிரீடம் திருட்டுப்போய் விட்டது. அனைவரையும் சோதனை போடப் போகிறோம்'' என அறிவித்தான். வீரர்கள் பலர் சோதனையில் ஈடுபட்டனர். ஒரு வீரன் போதிசத்துவரின் வண்டியைச் சோதனை செய்து அதில் முன்பே ஒளித்து வைக்கப்பட்டிருந்த கிரீடத்தை எடுத்து'' இதோ திருடன்: கிரீடம் அகப்பட்டு விட்டது'' எனக் கத்தினான். அரசனும் போதிசத்துவர்தான் திருடன் எனக் கூறி அவரது தலையை வெட்டி எறியுமாறு தண்டனை அளித்தான். வீரர்கள் போதிசத்துவரைப் பிடித்து சவுக்கால் அடித்து தெரு வீதி வழியாக அழைத்துக் கொண்டு கொலைக்களத்திற்குக் கொண்டு போகலாயினர்.

இதைக் கண்ட சுஜாதா அவர் பின்னாலேயே ஓடிக் கண்ணீர் வடித்தவாறே ''ஐயோ! நீங்கள் இப்படி அவமானப்பட நான்தான் காரணம். இது எனக்குத் தெரிந்து விட்டது. இந்த அநீதி அடுக்குமா? கடவுளே! எனது முறையீட்டைக் கேளாயோ?'' எனக் கதறினாள். சுஜாதாவின் இந்தப் புலம்பல் தேவலோகத்தையே ஆட்டி உலுக்கியது. தேவேந்திரனும் அதன் காரணத்தைப் புரிந்து கொண்டு தன் சக்தியால் போதிசத்துவரை அரசன் இருந்த இடத்தில் அவனது ஆடையிலும், காசி மன்னனை போதிசத்துவர் இருந்த இடத்தில் போதிசத்துவரின் ஆடைகளைஅணிந்தவாறு இருக்கும்படியும் மாற்றம் செய்து விட்டான்.

வீரர்களுக்குத் தாம் பிடித்துச் செல்வது தமது மன்னனைத்தான் என்பது தெரியவில்லை. கொலைக்களத்தில் அரசனின் தலை துண்டிக்கப்பட்ட போதுதான் உண்மை தெரிந்தது. மன்னனின் ஆடைகள் திரும்ப அவனது உடலுக்கு வந்தன. போதிசத்துவரின் ஆடைகள் அவரிடமே போய் விட்டன. தம் கொடுங்கோல் மன்னன் ஒழிந்தான் என்பது கண்டு காசி மக்கள் மகிழ்ந்து போய் ஆரவாரம் செய்தனர். இதற்குக் காரணமான போதிசத்துவரைக் காண எல்லாரும் கூடி விட்டனர்.

அப்போது தேவேந்திரன் அவர்கள் முன் தோன்றி நடந்ததை எல்லாம் கூறி காசி மன்னன் தன் கெட்ட எண்ணத்தாலேயே அழிந்தான் என்றும் இனி காசியை போதிசத்துவரே ஆண்டு வருவார் என்றும் சுஜாதா அவரது பட்டத்து ராணியாக இருப்பாள் எனவும் கூறி எல்லோரையும் ஆசீர்வதித்து விட்டு மறைந்தான். மக்களும் போதிசத்துவரைத் தமது மன்னராக ஏற்று அவரது ஆட்சியில் சுக வாழ்வு வாழ்ந்தனர். போதிசத்வரும் சுஜாதாவுடன் சிம்மாசனத்தில் அமர்ந்து நெடுங்காலம் ஆட்சி புரிந்து மக்களை காத்து வந்தார்.

(முற்றும்)


முழு
வருடத்தையும்
மங்களமாக்க
"அப்பா புதுவருடத்தன்று
வீட்டில் இல்லையா"
புதுவருடத்தன்று வீட்டில் இருந்து குழந்தைகளின் மனதிற்கு
சந்தோஷத்தை வழங்கி புதுவருடத்தன்று அனைவரினதும்
ஆசிர்வாதத்துடன் வருடத்தை சுபமாக்குங்கள்...
இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்
www.boc.lk
உங்களுடன் 73 வருடங்களாக புது வருடத்தை கொண்டாடும்...

# புற்றரையா, குளமா....?



யாழ். ஆரியகுளத்தின் மேற்பரப்பில் சல்பீனியாத் தாவரம் செழித்து வளர்ந்து குளத்தை ஆக்கிரமித்து நீர் நிலையா புற்றரையா என்று அறிந்துகொள்ள முடியாத நிலையில் காணப்படுகிறது. நீரை மூடி சல்பீனியா காணப்படுவதால் நுளம்புப் பெருக்கம் ஏற்பட வாய்ப்பாக அமைவதோடு அந்தப் பகுதியில் வசிப்போரும் விகாரைக்கு வந்து செல்வோரும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நகரப் பகுதியில் காணப்படும் இந்தக் குளத்தை உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் அழகுற அமைப்பதற்கான நடவடிக்கையை யாழ். மாநகர சபை மேற்கொள்ளலாம் என்று மக்கள் கூறுகின்றனர். (ஒ-135)

# அனைத்துத் திசைகளிலும் பயணிக்கும் சாதனம்

பயணத்தை இலகுவாக்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ள சாதனங்கள் பொதுவாக முன் நோக்கியும், பின் நோக்கியும் நகரக்கூடியவாறே அமைக்கப்படும். ஆனால் தற்போது எல்லாத்திசைகளிலும் நகரக்கூடியவாறான இயந்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. தனிநபர் ஒருவர் பயணம் செய்யக்கூடிய இந்தச் சாதனத்தை 'கொயோற்டா' பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 'கோமோறி மசாஹறு' என்பவர் உருவாக்கியுள்ளார்.


இந்தச் சாதனத்தில் விசேடமாக இயங்கக்கூடிய இரண்டு வகையான சில்லுகள் பொருத்தப்பட்டுள்ளன. அவை இரண்டும் வெவ்வேறு நேரங்களில் இயங்கவல்லன என்பது குறிப்பிடத்தக்கது.





(C/7270)

# வேகமாக ஓடும் ரோபோ



மிக வேகமாக ஓடக்கூடிய செயற்கை ரோபோவைத் தயாரித்து விஞ்ஞானிகள் புதிய சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

அமெரிக்காவின் பாதுகாப்பு உயர் ஆராய்ச்சி திட்ட முகவர் நிலையத்தால் இந்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது.

மனிதனை விட மிக வேகமாக ஓடக்கூடிய தொழில்நுட்பம் இந்த ரோபோவில் இணைக்கப்பட்டுள்ளதால், போர்க்களத்தில் மிக வேகமாக எதிரியைத் துரத்திப் பிடிப்பதற்கும், தாக்குவதற்கும் என களத்தில் விட்டு பரிசோதிக்க போவதாக இதனை உருவாக்கியுள்ள விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மனிதனை விட மிக வேகமாக ஓடக்கூடிய தொழில்நுட்பம் இந்த ரோபோவில் இணைக்கப்பட்டுள்ளதால், போர்க்களத்தில் மிக வேகமாக எதிரியை துரத்திப் பிடிப்பதற்கும், தாக்குவதற்கும் இதனால் இயலும்.






# தலைமுடியைத் தானமாக வழங்கிய சின்னஞ் சிறுசு



© Jamie Lorriman/ Solent

புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு செயற்கை முடி தயாரிப்பதற்காக பிரிட்டனைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தான் மூன்றாண்டு காலமாக வளர்த்த தனது தலைமுடியைத் தானமாக வழங்கியுள்ளான். புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலைமுடி வெகு சீக்கிரத்தில் கொட்டிவிடும். அவர்களுக்கு செயற்கை முடியைத் தயாரிப்பதற்காக தலைமுடி தானமாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 3 வயதுச் சிறுவன் ஒருவன் தான் சிறுவயதிலிருந்து ஆசையாக வளர்த்து வந்து நீண்ட கூந்தலை புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக தானமாக வழங்கியுள்ளான்.



சிறிய நடுத்தர தொழில் முயற்சியில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சி - 2013

IT Solutions for Your Business
Exhibition & Seminar

Entrance FREE

நோக்கம்

- வியாபார சமூகத்தையும் அதனோடு தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குனர்களையும் ஒரே இடத்தில் இணைத்தல்.
- தகவல் தொழில்நுட்ப பாவனையூடாக வியாபார செயற்பாடுகளை இலகுவாக மேம்படுத்தல்.
- தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குனர்களின் சந்தை வாய்ப்புக்களை அதிகரித்தல்.

இடம் : PILLAIYAR Inn, Manipay Road, Jaffna
காலம்: 07/04/2013, ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9.00 – மாலை 4.30

இக்கண்காட்சி சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளருக்கு வழங்குவது என்ன?

- வியாபார தொடர்பாடல்களை இலகுவாக மேற்கொள்ள வழிவகுக்கும்
- வியாபார நடவடிக்கைகளை சுலபமாக மேற்பார்வை செய்வதற்கான வழியை ஏற்படுத்தும்
- பொருத்தமான தகவல்தொழில்நுட்ப பிரயோகத்தினூடாக அன்றாட வியாபாரப் பிரச்சனைகளுக்கான தீர்வு
- வியாபாரத்தை தகவல் தொழில்நுட்பத்தினூடாக அபிவிருத்தி செய்தல்
- தொழில் முயற்சியாளர்களது தொழில்துறைகளின் தேவைக்கேற்றவாறான தகவல் தொழில்நுட்ப மென்பொருள்களை (Software) வடிவமைப்பதற்கான சேவை வழங்குனர் தொடர்பை ஏற்படுத்த முடியும்.

இக்கண்காட்சியில் பங்குபற்றி தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக உங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

(C78005)

Organized By
CCIY

Supported By
ICTA ideas actioned
e Sri Lanka smart people smart island

# நிறங்களும் குறியீடுகளும்....



(கடந்த வாரத் தொடர்ச்சி)

வெற்றிகரமான ஓர் வர்ண வடிவமைப்பு உணர்த்துவது யாதெனில், எப்படி, ஏன், எவ்வாறு வர்ணங்கள் தமக்கிடையே தொடர்பு கொள்ளுகின்றன என்பதாகும்!

பல தரப்பட்ட வர்ணங்கள் ஓர் ஒழுங்கு முறையில் இணைந்து கண்ணுக்கு அழகையும், புலன்சார் தன்னுணர்வுகளையும் ஏற்படுத்தலின் மூலம் ஓர் வெற்றிகரமான படைப்புக்கள் உருவாக்கம் அடைகின்றன. அவைகளே ஓவியம், அவை அலங்காரம் எனப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. அங்கு வர்ணங்களின் சாயல் பல குறியீடுகளைத் தாங்கி நிற்கும்.

வர்ணங்களானது மனதில் பலதரப்பட்ட கருத்துருவான குறியீடுகளை உற்பத்தி செய்யும். இவை வாழும் சூழலுக்கு அமைய கலாசாரத்துடனும் அமையும். அத்துடன் தற்கால அடிப்படை விடயங்களினூடானதாகவும், சாதாரண உலகப் பார்வை அல்லாமலும் இயற்கையுடன் ஒத்தில்லாமையுடனும்அவை இருக்கும். உதாரணமாக பச்சை நிறம் இயற்கையுடன் ஒத்த ஒன்றாகும். இவை வாழ்வுடன் இணையும்போது வாழ்த்துக்கள் தெரிவிக்கும்போது வழங்கும் பரிசுப் பொருள் பச்சையாக இருந்தல்வெற்றியையும் அதிஸ்டத்தையும் தரும். இவை மாறுபட்ட உள்ளக்கிடக்கையினூடாக வெளிவருபவை ஆகும்.

மனிதருக்கு மனிதர் தெரிவு செய்யும் பச்சையின் சாயல் மாறுபடும்.

எனவே வர்ணங்களின் குறியீட்டினை சரியாக கூறமுடியாதுள்ளது. இது ஓர் தர்க்க ரீதியாக வளமாகவும், அதேவேளை தொடரானதும் மாறுபட்டதும் கலாசார உளவியல் தாக்கத்துக்கு உட்பட்டதாகவும் அமைகின்றது. இக் குறியீடானது பின்வரும் முறைகளில் வெளிப்பட்டுள்ளன.

**கலாசாரம்** - வைபவங்கள், சடங்குகள், பண்பாட்டு முறைகள், புவியியல்சார் வடிவங்கள் என்பனவற்றினூடு வர்ணங்கள் தெரிவு செய்யப்பட்டு வெளிப்படுத்தப்படும் உதாரணம் - பச்சை முஸ்லீம் மக்களின் பரலோகம், இங்கிலாந்தில் அதிஷ்டம் எனவும் கொள்வார்கள்.

**அரசியல்** - கொடிகள், கட்சி வர்ணம். உதாரணமாக யப்பானில் கொண்டாடப்படுகின்றது. இலங்கையில் கறுப்பு யூலை.

**சமயம்** - ஆன்மீகம் மாயாஜால உத்திகள். உதாரணமாக பச்சை மனிதன் விவசாய விளைச்சலின் கடவுள் எனவும் கொள்வர். வெள்ளை புனிதத்தின் அடையாளம்.

**மொழியியல்** - ஒரு மொழி தனக்குரிய சிறப்பு விடயங்களை வெளிப்படுத்துதல். உதாரணமாக, தென் பசுபிக் பிரதேச மொழிகளில் தவாரங்களின் பல தரப்பட்ட வளர்ச்சியைக் காட்ட பச்சை வர்ணத்தை பயன்படுத்துவர்.

மேலும் ஒவ்வொரு வர்ணத்திற்கும் பல் வகை தன்மைகள் உண்டு. அவற்றை மனித உணர்வுகளுடன் சில வர்ணங்களை இணைத்துப் பார்க்கும் போது பின்வரும் கருத்தாக்கங்கள் வெளிப்படுகின்றன.

**கறுப்பு நிறம்** - இது சூரிய ஒளியினை முழுவதுமாக தனனகத்தே உறிஞ்சும் ஊடகத்தினை வெளிப்படுத்தும். மற்றும் இருள் மற்றும் பேயின் வடிவம் எனவும் குறிக்கப்படும். பயம், பேய், நடக்கக்கூடாதவை, ஆழம் துக்கம், கோபம்.

**கறுப்பு வெள்ளை** - பொதுவாக துக்ககரமான நிகழ்வுகளின் போதும் வணக்கத்தலங்களில் புனிதமாக செயற்பாடுகளில் ஈடுபடும் போதும் பாவிக்கப்படும். உதாரணமாக கறுப்பு இழப்பு. வெள்ளை பரலோகத்தில் நுழைதல் ஆகும்.

**நீலம்** - துய்மையின் குறியீடாகும். இது நீர் கடல் என்பனவற்றின் நிறமாகும். மேலும் வழமையாகப் பெண் பாலின் குறியீடாகவும் அமைகிறது.

**பிறவுண்** - இது இறுக்கமானதும் நிரந்தரத் தன்மைக்கும் வசதியானதுக்குமான குறியீடாக உள்ளது. உதாரணமாக பூமி, வீடு என்பனவற்றிற்கு பயன்படுத்தப்படுகின்றது.

இது இயற்கையின் குறியீடாகவும் அதிஷ்டமானதுக்குமான குறியீடாகும்.

**ஒரேஞ்** - இது தைரியத்தையும் சமநிலையையும் எடுத்துக்காட்டுவதற்குரியதாகும். உதாரணமாக சமயக் கொடிகளில் பயன்படுத்தப்படும்.

**பிங்** - இது இரு வகையான குறியீட்டு வடிவமாக உள்ளது. ஒன்று குழந்தைகளுக்கான ஆளுமை குறியீடு. மற்றையது தூய்மையான அன்பின் வடிவமானதாகும்.

**ஊதா** - இது வலுவுடையோர், அதிகாரமுள்ளோர், அரசர்கள் போன்றோரின் செழிப்பைக் காட்ட பயன்பட்டதாகும்.

மேலும் துக்கமான நிகழ்வு அதாவது கிறிஸ்தவ மதத்தினர் கிறிஸ்துவின் இறப்பின் சடங்குகளை ஞாபகப்படுத்தும் போது பயன்படுத்துவர்.

**சிவப்பு** - அடிப்படையாக இந் நிறம் கடினமான உணர்வலைகளை குறிக்கும்.

**வெள்ளை** - இது தூய்மையின் குறியீடாகும் கடவுளையும் தேவதைகளையும் குறிப்பதாகும். குறிப்பாக புனிதமான தொழிலில் ஈடுபடுவோரால் பாவிக்கப்படும். ஐவத்தியர், குருமார்கள்.

மஞ்சள் இது மகிழ்வின் குறியீடாகும். மங்களகரமான செயற்பாடு இவ்வாறு நிறங்களையும் அது உணர்த்தும் குறியீடுகளையும் கண்டு கொள்ளலாம். மேலும் மேலைத்தேய கீழைத்தேயத்தில் நிறங்களும் அதன் கலாசார பின்னணிக்கேற்ப குறியீடுகளினூடாக பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக சிவப்பு நிறத்தினை எடுத்து நாம் உலகளாவிய ரீதியில் பார்ப்போமானால்

**சிவப்பு மேலைத்தேயத்தில்**

சக்தி செயற்பாடு, ஆபத்து, காதல், புதுமை நிறுத்துவதற்கான அறிவுறுத்தல், கோபம், கிறிஸ்மஸ் அலங்காரம்.

**கீழைத் தேயத்தில்**

ஆளுமை, நல்ல ஆரோக்கியம், மகிழ்வின் அடையாளம், வெள்ளை நிறத்துடன் இணையும் போது

**சீனா**

நல்ல அதிஷ்டம், கொண்டாட்டம், நீண்ட ஆயுள், மகிழ்வு, திருமணத்துக்கான முக்கிய நிறம், அதிகமான நிகழ்வுகளுக்கு பயன்படுத்தல், சீனரின் புத்தாண்டு அலங்கரிப்பின் அதிஷ்டம். மகிழ்வுக்கான அடையாளம்.

**இந்தியா**

விளைச்சல், காதல் அழகு, தைரியம், சொத்து, திருமணமான பெண், பயம், நெருப்பு, அபாயம்.

தாய்லாந்து

ஞாயிறு தின நிறம்.

யப்பான்

வாழ்க்கை, கோபம், ஆபத்து.

தென்னாபிரிக்கா - துக்கம்.

நைஜீரியா - வழமையான கொண்டாட்டம், தலைவர்கள்.

ரஷ்யா - சமத்துவம், மொழியின் அழகு, திருமண அழகு.

ஆஸ்திரேலியா - நிலம், பூமிக்குமான மரியாதைக் குரியது.

திருவிழாக்காக இவ்வாறாக மற்றைய வர்ணங்களையும் எடுத்து நோக்கலாம். வர்ணங்களின் குறியீடுகளை மனிதன் தன் வாழ்வில் இணைத்துள்ளான். நிறங்கள் அதிசயமானவை. அவைகளைப் பற்றி நாம் அறிந்தவைகள் சில. ஆனால் நிறங்களை எவ்வாறு வரையறுத்துப் பெயர் கொள்ள முடியாதோ அவ்வாறே நிறங்களும் அவை பற்றிய அறிவும் பெரியதாகும். நிறங்களுக்கான விடயங்கள் தொடரும்.




## உங்களது பணத்தை வீண் விரையமாக்கவோ அல்லது உயிரை ஆபத்தில் இட்டுச்செல்லவோ வேண்டாம்



பிரெண்டன் ஓ கொணர்
அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை தொடர்பான அமைச்சர்

இதுபற்றி மிகத் தெளிவாகக்கூற எனக்கு இடமளியுங்கள். மிகவும் நியாயமான ஒரு காரணமின்றி, எந்தவொருவருக்கும் புகலிடம் வழங்க, அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறானவர்கள் இலங்கைக்கு வரும் அடுத்த விமானத்திலேயே மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். எனவே, உங்கள் பணத்தை வீணாக விரையம் செய்ய வேண்டாம். உங்களது உயிரை ஆபத்தில் இட்டுச் செல்ல வேண்டாம்.

ஏற்கனவே இவ்வாறு இங்கு வந்த நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்திலும் இவ்வாறு வருபவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற மிக நியாயமான காரணம் இல்லையேல், துரிதமாக உங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க நேரிடும். அவ்வாறானவர்களுக்கு பணம் அல்லது வேறு எந்த வகையிலான ஒத்துழைப்புக்களும் கிடைக்க மாட்டாது என்பதைக் கூறவேண்டும். தனது பணத்தை வீண் விரையம் செய்து, உயிரைப் பணயம் வைத்து, கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு வர முயற்சி செய்வது சிறிதேனும் பயனுள்ள ஒரு முயற்சியல்ல. மீண்டும் இலங்கைக்கு வரக்கிடைப்பது மாத்திரமே அதன் ஒரேயொரு பிரதிபலனாகும்.

உங்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல பொய் கூறுவார்கள். பொய் சத்தியம் செய்வார்கள். அவ்வாறு வருபவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை என்று நான் மீண்டும் கூறுகின்றேன். எந்தவித துரித பிரதிபலனும் கிடைப்பதில்லை. எவ்விதமான விசேட கவனிப்புகளும் கிடைக்காது.

மிகவும் ஆபத்தான முறையில் மேற்கொள்ளப்படும் படகுப் பயணங்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றது.

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை எவ்வாறு மாற்றியுள்ளது?

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ள மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதேச கொள்கைகளுக்கு அமையாத அனைவரும், துரிதமாக மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள்.

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை ஏன் மாற்றியது?

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் சவாரிகளினால், மக்களைக் காப்பாற்ற அவுஸ்திரேலிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனால் அவர்களுக்கு எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை. உயிரைப் பணயம் வைத்து இங்கு வந்தாலும், அவர்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கு கிடைக்கும் ஒரேயொரு விடயம் யாதெனில், கையிலுள்ள பணம் விரையமாவதுடன் ஆழ்கடலில் தமது உயிரை மாய்த்துக்கொள்வதும் மாத்திரமே.

எமீது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நட
மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுக
மார்க்கமாக வருபவர்களை, குறித்த
காலத்திற்கு, நாவுறு அல்லது பப்பு
போன்ற நாடுகளுக்கு அனுப்பி வை
உண்மையில், ப
அமைய, சாதாரு
எந்தவொருவருக்கு
கொடுக்கும் பொறு
ஏற்றுக்கொள்ள மாட்
கொள்கைகளுக்கு அ
துரிதமாக மீண்டும் இ
வைக்கப்படுவார்கள்.

எமது அரசாங்கம் கடல் ட
மீண்டும் செயற்படுத்தியுள்ள
மார்க்கமாக வருபவர்களை, குறித்த
காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி
போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும்.

வுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய்
லி, போலி வாக்குறுதிகளை , எவ்வித
சனமும் அற்ற மேற்கொள்ளும்
னர். இவை
யமல்ல. மிகவும்
க்கூடிய, படகுச்
அவுஸ்திரேலிய
க்கை மேற்கொண்டு
எவ்வித பலனும்
ரைப் பணயம் வைத்து
எதுவும் கிடைக்கப்
கிடைக்கும் ஒரேயொரு
ள்ள பணம் விரையமாவதுடன்
மாய்த்துக்கொள்வதும்
யாவுக்கு அழைத்துச்
ால்லி, போலி வாக்குறுதிகளையும்
யாசனமும் அற்ற படகுச் சவாரி-
ம் போது, பெரும்பாலானோர்




அவுஸ்திரேலியாவுக்கு படகில்
போக வேண்டாம்

Australian Government

# உள்வாரிக் குடும்பப் பிரிவுகளுக்கு எது காரணம்?



ஆர்.கே.மேனன்
ஆசிரியர் யா/சென்.சார்ள்ஸ் ம.வி.

முன்பு போல் அல்லாது குடும்பப் பிரிவுகள் தற்போது எமது சமூக மட்டத்தில் அதிகரித்து வருகின்றன. முன்பு ஒரு காலத்தில் பெரும் அமர்க்களமாக உருவெடுத்த குடும்பப் பிரச்சினைகள் இல்லறவியல் உணர்வுகளால் ஊதி அணைக்கப்பட்டு தாம்பத்திய வாழ்க்கை தலைசிறந்து விளங்கியது. ஆனால் தற்போது காரணங்கள் எதுவும் இல்லாது கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு கணவன் மனைவிக்கு இடையிலான உள்வாரிப் பிரிவுகளை நிரந்தரமாக்கி விடுகின்றன.

அண்மையில் உளவியல் ஆய்வாளர்களால் பெறப்பட்ட தரவுகளின்படி, சந்தோசமான வாழ்க்கையில் தொடர்ந்து ஈடுபடும் குடும்பங்கள் பெருமளவில் குறைந்துவிட்டன. இதுவே வன்முறைக் கலாசாரப் போக்குக்கு ஒரு காரணமெனவும் முன்வைக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் கணவன் மனைவிக்கிடையில் விட்டுக்கொடுப்பற்ற, கோபதாபங்களை உருவாக்கும் உள்வாரி முரண்பாடுகளுக்கு அடிப்படைக் காரணங்களை சற்று நோக்க வேண்டியது இன்றைய கட்டாய தேவைகளில் ஒன்று.

வாழும் காலம் முழுவதும் ''வைராக்கியம்'' எனும் பெயரில் வலிகளைத் தாங்கும் இதயமாக மாறக்கூடாது என்பதற்காகவே மனிதனிடத்தில் ஏற்படும் கோபதாபங்களைக் காலவோட்டத்தில் மறந்து மன்னிக்கும் மனோபாவத்தை இறைவன் மனித வர்க்கத்துக்குக் கொடுத்திருக்கின்றான்.

ஆனால் இந்த இயல்பான மனிதப் பண்பையும் தாண்டி ஒருசில கணவன், மனைவிகளிடத்தில் ஏன் நிரந்தரமான உள்வாரிப் பிரிவுகள் ஏற்படுகின்றன. இதற்கான காரணங்கள் பல உண்டு. அவையாவன பிள்ளைகளைப் பெறுதல் என்பது தாம்பத்திய வாழ்க்கையின் அடையாளமே தவிர அது சந்தோஷமாக இடம்பெற்றது என்பதற்கான நியாயப்படுத்தல் அல்ல. சந்தோஷமான தெய்வீகமான தாம்பத்திய வாழ்க்கை இருவருக்கிடையிலும் ஏற்படவில்லையானால் விட்டுக்கொடுப்பு இருக்காது; சகிப்புத்தன்மை இருக்காது; ஒருவருக்கொரு வர் தேவை எனும் உணர்வு இருக்காது. பந்த பாசங்கள் வளராது; பிரிவுகள் சுமையாகத் தெரியாது; தற்காலிகம் நிரந்தரமாவது அறியாது.

ஆகவே கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் உட்பூசல்கள் இந்த நிலையில் உருவாகும் போது அது பூகம்பமாகிறது. முன்பொரு காலத்தில் குடித்து வெறித்து பல இன்னல்களை மனைவிமாருக்கு, கணவன்மார் செய்தாலும் அடுத்தவர்கள் மத்தியில் தனது கணவனை விட்டுக் கொடுக்காத தன்மைகள் இருந்தன. கணவனின் இன்னல்களைக் கண்டு பதறித்துடிக்கும் பாசங்கள் இருந்தன.

தாய்மை போல மன்னிக்கும் மனோபாவத்தை மனைவிக்குக் கொண்டுவருவது சிறந்த தாம்பத்திய வாழ்வே ஆகும். இந்தப் பழக்கம் தற்போது குறைந்து வருகிறது. இதனால் பிரிவுகளை நிரந்தரமாக்குகின்றன.

### குடும்பங்களில் அடுத்தவர்களின் தலையீடு

கணவன் மனைவியரிடத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பூகம்பம் ஆக்கப்படுவதற்கு அடுத்தவரின் தலையீடே காரணமாக அமைகின்றது. கணவன் மனைவி எனும் இருதுருவங்கள் மனிதவள உற்பத்தி வாழ்வியலில் ஈடுபடும்போது உரிமைப் போரை உள்வாங்குகின்றனர். ''எனக்கு உரித்துடையவன் நீ; உனக்கு உரித்துடையவள் நான்'' ஆனாலும் சந்தேகங்கள் ஏற்படும்போது அல்லது நடத்தைப் பிறழ்வுகள் ஏற்படும்போது பல முரண்பாடுகள் பிரச்சினைகளாக உருவெடுத்து பொருளாதாரப் பிரச்சினையை உருவாக்கலாம். காலவோட்டத்தில் ஏன்?... எதற்கு?....எனும் சிந்தனைகள் வளர முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி கிடைக்கும். ஆனால் திருமணத்தின் போது தத்தம் செய்து கொடுத்துவிட்டு, ''நல்லது கெட்டதற்கெல்லாம் நீவீரே பொறுப்பாளிகள்'' என நயம்பட மொழிந்துவிட்டு, குடும்பங்களில் பிறர் தலையிடுவதால் பிரிவுகள் நிரந்தரமாகக் காரணமாக அமைகின்றது. மறக்க நினைக்கும் நினைவுகள் மனங்களில் மறுபிறவி எடுக்குமானால் இறக்கும் வரை ஏற்படும் பிரிவுகளை யாரும் தடுக்க முடியாது.

### ஆபத்தான சகிப்பு வாழ்வியல்

குடும்பங்களுக்கிடையில் ஏதோ ஒரு காரணத்தால் இடைவெளிகள் ஏற்பட்டு ''பிள்ளைகளுக்காக சகித்து வாழ்வோம்'' எனும் கட்டத்தை உருவாக்கக்கூடாது. இது பிரச்சினைகளை உருவாக்காது என்பது ஒரு புறமிருக்க, நிரந்தரப் பிரிவை ஏற்படுத்தும் வெளிப்படையாக இருவரும் கதைத்து பிரச்சினைகள் ஏற்படுவதும் அது கால ஓட்டத்தில் தீர்க்கப்படுதலும் ஆரோக்கியமானது. ஆனால் ஒருவரிடத்தில் மாத்திரம் பிரச்சினைகள் மடக்கப்பட்டு சகிப்புத் தன்மையுடன் வாழ்தல் குடும்ப உறவு நிலையில் நிரந்தர உள்வாரி பிரிவுகளை ஏற்படுத்திவிடும். உலகியல் நிலையாமை எனும் உணர்வு ஓர் மனிதனிடத்தில் வெள்ளையளவில் இருக்கலாம். முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு அது உதவும். ஆழமான துன்பங்களின் விளிம்பில் இருந்து பிறக்கும் அனுபவ வாழ்வியலிற்கூடான நிலைமை உணர்வு ஒருவனிடத்தில் ஆழ் மனதில் பதிவடையும் போது குடும்பவாழ்வியல், பந்தபாசங்கள் சிறிது சிறிதாக விலக ஆரம்பிக்கும். இது சாதாரண வாழ்வியலுக்கு, சாதாரண சமூகப் பார்வைக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும்.

### ''பொய்மை என்பது உணராத வரை மெய்மை நிலைக்கும்''

இதை ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள் உண்மை புரியும். நாமெல்லாம் நினைக்கின்றோம். பதிலுக்கு பதிலடி கொடுத்துவிட்டால் பரமசிவன் ஆகிவிடுவோமென அது தவறு. தட்டிவிட்டால் உடைந்துவிடும் முட்டைக் கருக்கள். மனித மனங்கள் பந்த பாசங்களுடன் கட்டுப்பட்ட முரண்பாடுகள் கால ஓட்டத்தில் தீர்க்கப்படலாம். அன்புக்குரியவரின் பிரச்சினைகளைத் தீர்க்க அடுத்தவரை நாடும் போது அது மாறாத மறைகளை மனித வாழ்வில் ஏற்படுத்தும். உறவு நிலை என்பது அர்ப்பணிப்பு விட்டுக்கொடுப்புக்கள் மத்தியில் பிறப்பது. எந்தத் துன்பம் வந்தாலும் ''எனது'' என்கின்ற நிலை நிழலாட வேண்டும். இல்லையெனில் ஏமாற்றங்கள் தான் மிச்சமாகும். எவரும் நினைப்பதைப் போல எதுவுமே அமைவதில்லை. கொட்டமடித்து கோவிந்தா போடுவதில் பயனேதுமில்லை. இது இப்படித்தான் என்றால் அப்படியே வாழ்ந்து விட வேண்டியதுதான். இதற்காக முரண்படுவது ஆரோக்கியமானதல்ல. இதைத்தான் கண்ணதாசன் ஒரு வரியில் தெளிவாக சொல்கின்றார்.

**''கடமையை இன்றே செய்வதிலேயே ஆனந்தம்''** ★

# பண்பாற் பழுத்த பார்வதிநாதசிவம்



புலவர் ம.பார்வதிநாதசிவம் அவர்கள் தமது 77 ஆவது அகவையில் மார்ச் மாதம் 4 ஆம் நாள் இறைவனடி எய்திவிட்டார். ஒரு பெரிய புலவர் பரம்பரை விழுது விழுந்துவிட்டது.

இவரது பேரனார் புகழ்பெற்ற அறிஞர் மட்டுவில் க.வேற்பிள்ளை. நூல்களுக்கு இவர் உரைசொல்லும் சிறப்பையும் வல்லமையையும் பாராட்டி வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்கள் வழங்கிய உரையாசிரியர் என்ற பட்டத்தைப் பெற்ற சிறப்புடையவர். நாவலர் பெருமானின் தலைமாணாக்கர் என்ற மதிப்பு இவருக்கு உண்டு.

வேற்பிள்ளை அவர்கள் புலோலி சிவபாத சுந்தரனாரின் சகோதரியை மணம்புரிந்து ஐந்து ஆண் மக்களுக்குத் தந்தையாகினார். அவர்களில் ஒருவர் குருகவி மகாலிங்கசிவம். குருகவி யின் மைந்தரே புலவர் பார்வதிநாதசிவம். புலவர் பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கற்றுப் பெற்றுக்கொண்ட பட்டதாரி இவர்.

1966 ஆம் ஆண்டு மயிலங்கூடல் பிள்ளையினார்- தெய்வானைப்பிள்ளை தம்பதியாரின் மகள் பரமேஸ்வரியைத் திருமணம் செய்ததைத் தொடர்ந்து மட்டுவில் மைந்தர் மயிலங்கூடலூரார் மருகராயினார்.

பார்வதிநாதசிவம் அவர்களை முதன்முதலில் நான் சந்தித்தது ஓர் இலக்கிய அரங்கிலேதான்.

## நீத்தார் நயப்புரை

இருவரும் பல கவியரங்கம் மற்றும் தமிழ் விழாக்களில் பங்குபற்றி உள்ளோம். மிக நெருக்கத்தை ஏற்படுத்தியது கீரிமலை சிவநெறிக் கழகம் எனில் மிகையாகாது. கழகம் கீரிமலை நகுலேசுவரக் குருக்களின் குழந்தை. குழந்தையின் ஆர்வலர்கள் ஒவ்வொரு மாதமும் கீரிமலை மடத்திற்கூடிச் சைவ தத்துவம் பேசுவர். நகுலேசுவரக் குருக்கள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் நமசிவாயம் போன்ற பெருமக்கள் தலைமை வகிப்பர். அல்லது சொற்பொழிவாற்றுவர். சமய தத்துவம் எனக்கு விளக்கம் பெற்றது அங்குதான்.

தமிழ் இலக்கியத்தில் அஃகி அகன்ற அறிவுடையவர் அவர். தமிழைக் கற்றுத்தானே அண்ணாமலைப் பல்கலைக் கழத்தில் புலவர் பட்டத்தையும் பெற்றார். அதனாலே அவருடன் பேசுகையில் மிகக் கவனமாகவே பலரும் தங்கள் கருத்தைத் தெரிவிப்பர். அவரும் தணக்கெல்லாம் தெரியும் என்று தம்பட்டம் அடிக்கும் ஆளல்லர். அடக்கமோ அடக்கம். அது மறுபுவழியாலும், ஆழ்ந்தகன்ற அறிவாலும், அமைந்த அடக்கம். அதனால் அவரைக் கடக்க யாரும் கருதுவதில்லை. அதற்கு அவர் பழகும் பண்பும் ஒரு காரணம். அன்பாகவும், அடக்கமாகவும் அவர் உரையாடுகையில் சுவையான பண்புப் பழம் ஒன்றை அனுபவிப்பது போன்ற சுகம் சுரக்கும்.

மென்மையாகப் பேசுவார். மெதுவாகவே நடப்பார். மிதிக்கும் காலடிப் புல்லும் வாழ்த்தும் புண்ணியவான். அவர் காலமான செய்தி அறிந்து கனடாவிலுள்ள புலவரின் மகள் பாரதியுடன் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தேன். என்னை முந்திக் கொண்டு டாக்டர் கதிர் துரைசிங்கம் பாரதிக்கு அனுதாபம் தெரிவித்ததாகச் சொன்னார். சிறுநீர் தொடர்பான சிக்கலால் உங்கள் நண்பர் சிவனடி சேர்ந்துவிட்டார் என்று கவலைப்பட்டார் பாரதி. உங்கள் நண்பர் என்று அவர் சொன்னதும் எந்தன் கண்களும் கலங்கிச் சொரிந்தன.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்?.

புலவர் பல நூல்களின் படைப்பாளி - காதலும் கருணையும், இருவேறு உலகம், இரண்டுவரம் வேண்டும் என்பவை அவரது நூல்கள். இன்னும் ஒரு திங்கள், பசுப்பிணி மருத்துவன், மானம் காத்த மறக்குடி வேந்தன் ஆகிய கவிதை நூல்களினதும் தமிழ்ச் செல்வம் என்ற கட்டுரைத் தொகுதியினதும் ஆசிரியர்.

பார்வதிநாதம் என்ற மலர் ஒன்று புலவரின் பவளவிழாக் கொண்டாட்டத்தன்று வெளியிடப்பெற்றது. அவரது 77 ஆவது பிறந்தநாளில் (14.1.2013) இலுப்பைமர நிழலின்கீழ் என்ற நூல் வெளியிடப்பெற்றது. இதில் அவர் பெரியார் பலரைக் கண்டெடுத்த பேட்டிகளும், பல இலக் கியக் கட்டுரைகளும், ஒரு கவிதையும் இடம்பெற் றுள்ளன. புல வரின் உடல் மெலிவால் வீழ்ந்தது பகுபதம்; படைப்புகள் தமிழுடன் கலந்தது பகாப் பதம்; உயிர் தவத்தாற் பெற்றது சிவபதம்!

**கவிஞர் வி.கந்தவனம், (கனடா)**

## புத்தகசாலை

### நூல் : சுற்றாடல் சங்கமம்



இன்றைய கால கட்டத்தில் தரம் 05 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்கள் மிகவும் அவசியமான செயற்பாடாக உள்ளது. வளர்ந்து வரும் மாணவச் செல்வங்களிடையே ஆரம்ப காலத்திலே சுற்றாடல் சார்பான விடயங்கள் பற்றிய அறிவை வளர்ப்பதற்கு இந்த சுற்றாடல் சங்கமம் நூலானது எதிர் காலத்திலே நல்ல சமூகத்தின் தோற்றத்திற்கு வழி வகுக்கும்.

சுற்றாடல் சார்பான விடயங்களில் முன்னின்று பங்களிப்புச் செய்பவர்களில் ஆசிரியர் சுதர்சனும் நடுவராக இருப்பதால் இந்த நூலினை எழுதி வெளியிட்டுள்ளார்.

சிறு வயதிலேயே சுற்றாடல் சார் செயற்பாடுகள் பற்றிய கல்வியைப் புகட்டுவது, எதிர்காலத்திலே மாணவர்கள் மிகவும் விருப்பத்துடன் சமூக வளர்ச்சிக்கு தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனவே இந்த நூல் மாணவர்களுக்குத் துணை நிற்கும்.

**இலக்கியன்**

### நூல் : அடிப்படை தமிழ் வழிகாட்டி



பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் எமது மாணவர்களின் கல்வி அடைவுகள் பாதிக்கப்பட்டிருக்கும் இவ் வேளை யில் ஆசிரியர் களின் கற்றல் – கற்பித்தல் செயற் பாடுகள் மேலும் வினைத் திறனை வேண்டி நிற்கின்றன. ஆரம்பக் கல்வியின் ஐந்து ஆண்டு படிப்பின் பின் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சை பாடசாலையின் ஆரம்பக் கல்வியின் நிலை மைகளை எடுத்துக் காட்டும் ஒரு சுட்டியாகும்.

பரீட்சைப் பெறுபேறுகளை உயர்த்த வகுப்பறையில் கற்பித்தலோடு பயிற்சிப் பரீட்சைகள், மேலதிக பயிற்சிகள் என்பவை அத்தியாவசியமானவை ஆகும்.

அந்த வகையில் ஆசிரியர் மு. சுகந்தனால் எழுதப்பட்ட 'அடிப்படை தமிழ் வழிகாட்டி' எனும் நூல் மாணவர்களுக்கு ஒரு துணைக்கரம் என்பதில் ஐயமில்லை. மொழி அறிவு என்பது கல்வியின் உயிர் மையம். அம் மொழி கற்றல், சிறு வயதில் இருந்து பல்வேறு வகையான திறன்களின் ஊடாக வளர்க்கப்பட வேண்டியவை. ஆசிரியர் தமிழ் மொழியில் பல்வேறு விடயங்களை ஆராய்ந்து மாணவர் தரத்திற்கு எற்றவாறு இந் நூலில் புகுத்தியுள்ளார். இந் நூல் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்கள் பெற்றோர்கள் அனைவருக்கும் பயன்படக் கூடிய துணை நூல் ஆகும்.

**வே. முருகமூர்த்தி,**
**அதிபர், யாழ்ற்ரன் கல்லூரி.**

# வீதிப் புனரமைப்பை துரிதப்படுத்துவார்களா?

வீதிகளைப் புனரமைக்கத் தொடங்கினவை, அந்த வீதிகளை முழுமையாகப் புனரமைக்க முடியாமல் திண்டாடுவதற்கு என்ன காரணம் என்று தெரியாது மக்கள் தடுமாறுகின்றனர். மரண பயம் உள்ள வீதிகளிலேயே பயணத்தை தொடர வேண்டிய இக்கட்டான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அரை குறையான புனரமைப்பு வேலைகளில் இருக்கும் வீதிகளில் பயணிக்கும் மக்கள் விபத்துக்குள்ளாகி உயிரிழக்க நேரும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன. வீதிப் புனரமைப்பில் ஈடுபடுபவர்கள் இதனை அறிவார்களா? அறிந்திருந்தும் ஏன் வீதிப் புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்தாமல் இருக்கின்றனர்?

''சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி'' என்று சொல்வார்கள், அந்தளவுக்கு, ஓரளவு போக்கு வரத்து மேற்கொள்கின்ற அளவுக்கு இருந்த சில வீதிகள் கூட, கிளறப்பட்டு புனரமைக்கப்படாமல் இருப்பதால் அந்த வீதிகளில் பயணம் செய்யும் மக்கள் சுவாசப் பிரச்சினைகளுக்கும் ஆளாகின்றனர். அதிகாரிகளிடம் இந்த விடயம் சம்பந்தமாகக் கதைக்க முடியாது. ஏனெனில் அவர்கள் வேலைப் பளு கூடி ஒரு இடத்தில் நிற்க முடியாமல் பறந்து திரிகின்றார்கள். அதனால் தானோ என்னவோ, எல்லாம் அரையும் குறையுமாக இருக்கின்றன.

வீதிப் புனரமைப்பு ஒழுங்கின்மையால் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. முற்பகல் 11 மணி இருக்கும். யாழ்.நகர். முட்டாஸ்கடை சந்திக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் மழை காரணமாக ஒதுங்கி நிற்கிறேன். மாரி கால மழை போல கோடை காலத்திலும் கொட்டுகிறது. முட்டாஸ்கடை சந்தியில் உள்ள 'போக்'கின் புனரமைப்பின் வேலையும் இடம் பெற்றுக் கொண்டிருந்தது. இதனால் அரைவாசி 'போக்'கு கிளறப்பட்டு இருந்தது. அரைவாசி போக்கினூடாக போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

'போக்'கின் வேலை இடம்பெறுவதை இனங்காட்டுவதற்காக புனரமைப்பு செய்யப்படும் 'போக்'கிற்கு முன்னால் மக்களின் பாதுகாப்பு கருதி வெற்றுத் தார்ப்பரல்கள் வைக்கப்பட்டிருந்தன. நகர்ப் பக்கம் செல்வதற்காக ஒரு வாகனம் பரல் அடுக்கிவிடப்பட்ட பக்கம் தரித்து நிற்கிறது. நகர்ப் பக்கம் போக்குவரத்தை மேற்கொள்பவர்கள் வாகனத்தை விலத்தி எடுக்கும் போது கண்டிப்பாக எதிரே வரும் வாகனத்துடன் விபத்துக்குள்ளாக வேண்டி வரும் என்பது தெரியாமல் யாரோ ஒருவர் நீண்ட நேரம் தனது வாகனத்தை அந்த இடத்தில் நிற்பாட்டி இருக்கிறார்.

சிறிது நேரம் கழித்து படீரென ஒரு சத்தம் கேட்டது. மழை பெய்வதால் மின்னலாக இருக்கலாம் என்று வானத்தைப் பார்த்தேன். அங்கு ஒன்றும் இடம்பெறவில்லை. கீழே பார்க்கிறேன்; 'போக்'குக்கு முன்னால் தரித்து நின்ற வாகனத்தின் பின் பக்க சிக்னல் கண்ணாடி உடைந்த சத்தம் அது. என்ன ஏது? என அந்தப் பக்கம் பார்த்தேன். சைக்கிளில் வந்த ஒருவர் அந்த வாகனத்தின் பின்புறம் மோதி சிக்னல் கண்ணாடியை உடைத்து விட்டார். வாகனத்தை நிறுத்தி இருந்தவர் பக்கத்து கடையில் இருந்து வந்து சைக்கிளில் வந்து மோதிய வயதில் பெரியவருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

வீதியால் சென்றவர்கள் வேடிக்கை பார்க்கத் தொடங்கினர். சிறிது நேரத்தில் அந்த இடத்தில் கூட்டம் கூடி விட்டது. கூட்டம் கூடுமளவிற்கு அந்த விபத்து பெரியதொன்றாகத் தெரியவில்லை. ஆனால் அந்த வாகனக்காரர் போட்ட சத்தத்தினால் தான் ஏதோ பெரிய பிரச்சனை ஒன்று இடம்பெறுவதாக நினைத்து, கூட்டம் கூடியது. பிரச்சினையை அறிந்து கொண்டதும் சிறிய நேரத்தில் கூட்டம் கலைந்தது. கூட்டம் கலைந்தாலும் அதே இருவரின் வாக்குவாதம் மட்டும் நிற்காமல் தொடர்கிறது.

அந்தப் பெரியவரோ ''தெரியாமல் நடந்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். அந்தப் பெரியவர் சைக்கிளில் நகர்ப்பக்கம் சென்று கொண்டிருந்தார். அந்த வாகனத்தை விலத்தி முன்னே எடுக்க முற்பட்ட வேளை எதிரே ஒரு மோட்டார் சைக்கிள் கண் மண் தெரியாமல் வேகமாக வந்தது. விபத்து நேரிடும் என்று அறிந்து பெரியவர் உடனே சைக்கிளை வெட்டி அந்த வாகனத்தின் பக்கம் விட்டிருக்கிறார். அதனால் வாகனத்தின் பின் பக்கத்தில் மோதி வாகனத்தின் பின் பக்க சிக்னல் கண்ணாடி உடைந்து விட்டது.

விபத்து இடம்பெறும் என்று அறிந்தும் அந்த இடத்தில் வாகனத்தை நிற்பாட்டியது மட்டு மல்லாமல், அந்தப் பெரிய வருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டார் வாகனகாரர். அந்தப் பெரியவரோ '' சரி உடைந்த சிக்னல் கண்ணாடி எவ்வளவு பெறுமதி வரும். அந்தப் பணத்தை நான் தருகிறேன்'' என்று சொன்னார். அந்த வாகனத்தில் நின்றவர்களில் ஒருவர் '' 13 ஆயிரத்து 500 ரூபா செலவாகும்'' என்று சொன்னார். அதற்கு அந்தப் பெரியவர் ''இவ்வளவு பணம் என்னிடம் இல்லை. குறைக்க மாட்டீர்களோ'' என்று கேட்டு ஒருவாறு 12 ஆயிரம் ரூபா வரை குறைந்தது. ஆனாலும் அந்தப் பணத்தை கொடுப்பதற்கு பெரியவரின் கையில் பணம் இல்லை. அந்தப் பெரியவரோ '' என்னிடம் தற்போது பணம் இல்லை. வீட்டுக்கு போய் எடுத்து வந்து தான் தர முடியும்'' என்று சொன்னார். அதற்கு அந்த வாகனக்காரர் ''ஐ.சியைத் தந்திட்டு, வீட்டுக்குப் போய்ப் பணத்தை எடுத்து வாரும்'' என்று சொன்னார். ''என்னிடம் ஐ.சி. இல்லை; சைக்கிளை வைத்திருங்கோ'' என்று பெரியவர் சொல்லி சைக்கிளை வாகனக்காரரிடம் கொடுக்க முற்பட்ட வேளை சைக்கிளை வாங்காமல் பெரியவர் எந்த இடத்தில் இருக்கிறார் என்று அறிந்துகொண்ட வாகனக்காரர் தாமும் அந்த இடத்தில் முன்பு இருந்ததாக கூறி வீட்டிற்கு சென்று பணத்தை எடுத்து வரும்படி கூறினார். பெரியவர் வீட்டிற்கு சென்று தனது மனைவியின் ஒரு பவுண் காப்பை எடுத்து வந்து நகைக்கடை ஒன்றில் அடகு வைக்க முற்பட்டார். ஆனால் அந்த நகை கடைக்காரரோ எதற்குப் பணம் என்று பெரியவரிடம் கேட்டு அறிந்தார். உடனே பெரிய மனம் உள்ள அந்த நகைக் கடைக்காரர் நகையை அடகு வைக்க வேண்டாம்; கடனாக இந்தப் பணத்தை தருகிறேன் என்று சொல்லி பணத்தை கொடுத்துள்ளார்.

அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு வந்து வாகனக் காரரிடம் கொடுத்து விட்டு சைக்கிளை வாங்கிக் கொண்டு சென்றார் அந்தப் பெரியவர். அந்த வாகனக்காரரோ யாழ்.நகரில் நாலு கடை வைத்திருக்கிறாராம். பெரிய பணக்காரராம். ''வாகனத்துக்கு காப்புறுதி இருக்கிறபடியால் அவங்கள் பணத்தை எடுத்துப் போடுவாங்கள். பாவம் அந்தப் பெரியவர் தனது பணத்தையும் இழந்துள்ளார்'' என்று அங்கு நின்றவர்கள் சொன்னார்கள்.

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

வீதிப் புனரமைப்பில் ஈடுபடுபவர்களும், அந்த வீதியில் பயணிக்கும் வாகனக்காரரில் சிலரும் ஒரே மாதிரி இருக்கிறது எனக்கு மன வேதனையைத் தந்தது.

வீதிப்புனரமைப்பை மேற்கொள்பவர்கள் காலம் தாழ்த்தித் தமது பணியை மேற்கொள்வதால் அந்த வீதியில் பயணம் செய்யும் மக்கள் நாளாந்தம் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். தமது பணத்தையும் இழக்கின்றனர். நாளுக்கு நாள் யாழ் நகரின் வீதிகளில் பல பிரச்சினைகள் வாகனக் காரர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையில் ஏற்படுகின்றது.

வீதிப் புனரமைப்பை முழுமையாக துரிதகதியில் மேற்கொண்டு முடிப்பார்களாயின், மக்கள் மேலதிக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேராது. இதனை வீதிப்புனரமைப்பில் ஈடுபடுவோர் கவனத்தில் கொள்வார்களா? எப்போது...? ★

# முறைப்பாடுகள் குவிகின்றன

'' மாப்பிள்ளை பார்க்கப் போனபோது, நிலத்தைக் குனிந்து தொட முடியாதவனைக் கட்டிக் கொண்டு நான் என்ன செய்வது ?'' பரத் நடித்த பழனி திரைப்படத்தில் ஒரு காட்சி இது.

எங்களுடைய நாட்டாமை தனது அலுவலகத்தில் இருக்கின்ற வேலைகளைச் செய்வதை விடுத்து அருகிலிருக்கும் அலுவலகங்களுக்குள் மூக்கை நுழைத்துக் கொண்டிருக்கின்றார். நாட்டாமையின் அலுவலகத்தில் வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற மாகாண நிர்வாகங்கள் ஒழுங்காக இயங்குவதில்லை.நாங்கள் சொல்லவில்லை. மக்களில் மிகப் பலரும் குறைப்படுகிறார்கள்.

ஆனாலும், அதைத் திருத்த முடியாதவர் அருகிலிருக்கின்ற திணைக்களங்களில் என்ன நடக்கின்றது என்பதை நோட்டம் விட்டுப் பார்க்கத் தொடங்கிவிட்டார். பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்குள் தனது அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கியிருக்கிறார். அவர் தனது அடியாள்களுடனேயே இந்தக் கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

**ஏன்... எதற்கு... எப்படி?**

அவருக்கு மிக நெருங்கிய அதிகாரி ஒருவர், சப்பாத்துப் போட்டுவிடுவதிலிருந்து எல்லாப் பணிவிடையும் செய்கிறார். அத்துடன் ஏனைய அலுவலகங்களுக்குச் சென்று (மாகாணசபை தவிர்ந்த) கட்டளையிட்டு வேலை செய்விக்கின்றார். சம்பந்தப்பட்டவர் ஒரு மேஜர் தரத்தை சேர்ந்தவராம். நாட்டாமையும் அதில இருந்துதான் இந்தப் பதவிக்கு வந்தவர். அவரோட கூட இருக்கிறவையையும் மிலிடரிகாரராய் வைச்சுக் கொண்டு இருக்கிறார்.

இங்க வீடெரிக்கிற ராசாவுக்கு கொள்ளிக் கட்டை எடுத்துக் கொடுக்கிற மந்திரி மாதிரித்தான் நிர்வாகம் நடத்தப்பட்டு வருகின்றது. ஏனைய அலுவலக ஊழியர்களை வேலை செய்ய விடாமல் தங்களது வேலைகளை வாங்கிக் கொள்கின்றனர்.

அத்துடன் வெளிநாட்டு இராஜதந்திரிகள் யாராவது வருகை தந்தால், அவர்களைத் தான் சந்திக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார். தன்னால் மட்டுமே யாழ்ப்பாணத்தின் - வடமாகாணத்தின் - உண்மை நிலைமையை எடுத்துக் கூற முடியும் (?) என்று சொல்கின்றார்.

- நக்கல் நரசிம்மன் -

# படம் எடுத்தேன், பார்த்தீர்களா...?

ஒரு நாள் அதிகாலை கருத்துள்ள நிழல் படம் ஒன்றை எடுக்க வேண்டும் என்று கமெராவை எடுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஊர் ஊராகச் செல்கிறேன். பல இடங்களைப் பார்த்துக் கொண்டு செல்வதால் எனது மனதில் பல வித சிந்தனைகள் ஓடுகின்றன.

யாழ். ஓட்டுமடச் சந்தியைத் தாண்டி பொம்மை வெளியில் எனது மோட்டார் சைக்கிள் செல்கிறது. யாழ்ப்பாணத்துக் கழிவுகளை எல்லாம் அங்குதான் கொட்டுவார்கள். அதனால் அந்த இடத்தை நெருங்கும்போது மணம் மூக்கை அடைக்கிறது. அந்த இடத்தில் மூக்கைப் பொத்திக் கொள்ள முடியாமல் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி அந்த இடத்தைப் படம் எடுத்துக் கொண்டு அங்கிருந்து நகர்கிறேன்.

கல்லுண்டாய் பாலம் நெருங்குவதற்கு 100 மீற்றர் தூரம் முன்னே மழை நீர் தேக்கத்துக்கு நடுவே ஒரு மேட்டு நிலம். அந்த இடத்தில் நிறைய கொக்குகள் வந்து இருந்தன.

எப்படியாவது இந்த அழகான காட்சியை எடுத்து விட வேண்டும் என்று முடிவெடுத்து ஈரம் கசியும் அந்த நிலத்தில் இறங்கினேன் கமெராவை சரி செய்து கொண்டேன்.

ஒவ்வொரு காலடியையும் மெது மெதுவாக எடுத்து வைத்து கொக்குகள் நிற்கும் இடத்துக்கு நகர்ந்தேன். கொக்குகள் நிற்கும் இடத்துக்கு 50 மீற்றர் இடைவெளியில் நான் நிற்கிறேன். குந்தியிருந்து கொக்குகளை படம் எடுப்பதற்காக நிலை எடுத்தேன். நான் படம் எடுக்கப் போவதை அந்த வீதியில் வந்த இளைஞர்கள் சிலர் கண்டு விட்டனர். உடனே அவர்கள் கல்லெடுத்து கொக்குகள் இருக்கின்ற இடத்துக்கு எறிந்தார்கள். எறிந்த கல்லில் தண்ணீர் சிதறலில் கொக்குகள் பறக்க நானும் சரியாகப்படம் எடுத்தேன். படம் எடுத்த திருப்தியில் வீதிக்கு வந்தேன். படம் எடுப்பதை குழப்பி விட்டோமே என்று தங்களுக்குள் நினைத்திருப்பார்கள் போலும் நான் எதிர்பார்த்த படம் இதுவெனத் தெரியாமல் என்னைப் பார்த்து நக்கல் சிரிப்பு சிரித்தார்கள். அவர்கள் பக்கம் சென்று நன்றி என்று சொல்லிவிட்டு புன்னகையுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தேன். ஒன்றுமே புரியாமல் அந்த இளைஞர்கள் நின்றார்கள்.

- பிறைவாணன்